# இந்து தருமம் 2011

## இந்து மாணவர் சங்கம் 2011/2012

## பேராதனைப்பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இ.பிரதீசன் - முதலாம் வருடம், பொறியியற்பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்

# இந்து தருமம்
# 2011

**இந்து மாணவர் சங்கம் - 2011 / 2012**
**பேராதனைப் பல்கலைக்கழகம்,**
**பேராதனை.**

## Hindu Dharmam
## 2011

*Hindu Students Union - 2011 / 2012*
*University of Peradeniya,*
*Peradeniya.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | - | இந்து தருமம் - 2011 |
| இதழாசிரியர்கள் | - | க.கேசிகன்<br>கி.கிருஷ்ணானந்தா |
| வெளியீடு | - | இந்து மாணவர் சங்கம் 2011/2012<br>பேராதனைப் பல்கலைக்கழகம்,<br>பேராதனை. |
| பிரதிகள் | - | 350 |
| அட்டைப்படம் | - | ப.விஸ்வலிங்கம்(பெறியியற்பீடம்) |
| கணனி வடிவமைப்பு | - | செனித் அச்சகம் - கண்டி |
| அச்சுப்பதிவு | - | ருச்சிர பதிப்பகத்தார் |

| | | |
|---|---|---|
| **Title** | - | **Hindu Dharmam - 2011** |
| **Editors** | - | **K.Kesikan**<br>**K.Krishnanantha** |
| **Published By** | - | **Hindu Students' Union 2011 / 2012**<br>**University Of Peradeniya,**<br>**Peradeniya.** |
| **Copies** | - | **350** |
| **Cover Design** | - | **P.Visvalingam** |
| **Page Layout** | - | **Zenith Line - Kandy.** |
| **Printed By** | - | **Ruchira Offset Printers** |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காப்பு

திருவிளக்கு மான்மருகா சேவதனி லேறி
வருமரன்றா னீன்றருளு மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா வுனைத் தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பேராதனை உறைந்து
பேணி நம்மைக் காப்பதற்குக்
கூரான வேல் தாங்கும்
குறிஞ்சிக் குமாரனுக்கு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் மலரைப்பற்றி.......

கற்றவர் குழாம் பெருகும் பழமைப் பெருமைமிகு எழில் கொஞ்சும் பேராதனைப் பல்கலைக்கழகம். இங்கே அருளுரைக்கும் வடிவழகன் வள்ளி குஞ்சரியோடு கொண்டாடும்; இந்து பரிபாலிக்கும் அறுவகை நெறிகளில் தமிழ்த் தலைவன் கந்தனின் அருள் நிலை உயர் நிலை பெற்ற திருத்தலமாம் குறிஞ்சி மலை ஆலயம்.

ஆன்மீகம் என்பது ஆன்மாவோடு ஒன்றிணைந்தது. ஆன்மாவோடு அதன் இயக்கத்தின் மூலாதாரமாகிய பதியையும் ஒன்றிணைக்கும் ஓர் நல்லூடகமாகவே உலகத்தவர் பலராலும் ஆன்மீகம் அறியப்படுகிறது. அவ்வகையில் பேராதனை மண்ணிலே 1952ஆம் ஆண்டு தொட்டு ஆன்மீகம் வளர்க்கவென குறிஞ்சிக் குமரன் அருளின்பால் உருவாக்கப்பட்டதே பேராதனைப்பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கமாகும். இவ்வமைப்பினர் ஆலய நித்திய கருமங்களிற்கும் ஆலயத்தின் வளர்ச்சிப் பணிக்கும் பல்கலைக்கழக மாணவர்களின் ஆன்மீகச் செயற்பாட்டிற்கும் உறுதுணையாக தொன்றுதொட்டு தொண்டாற்றி வருவது நாம் அனைவரும் அறிந்ததே.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான் மார்க்கத்தாலும் இறைவனை காட்டிய சைவமே நூற்றியெட்டு உபநிடதங்களையும் நால்வேதங்களையும் உலக நலனுக்காக தந்து நின்றது. அந்தவகையில் நூல் கொண்டு நெறி வளர்த்த வரலாறும் எமக்குரியதே. ஏட்டில் வடித்த பன்னிரு திருமுறைகளை தொகுத்தருளிய நம்பி தொடக்கம் இன்று வரை நூல் தொகுத்து சமயம் வளர்த்த பெரியார்கள் எண்ணிலடங்காதோர். அவ்வழியே இந்துமாணவர் சங்கமும் வருடமொரு முறை "இந்துதருமம்" என்ற திருநூலை பிரசுரித்து வருகின்றனர். 2011/2012, 55ஆவது செயற்குழுவாகிய நாமும் இந்நூலை இவ் வருட தொகுப்பாக உங்களிடத்து தந்து நிற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இந்நூலானது மாணவர் ஆன்ம பலத்தையும், ஆன்மீக உணர்வையும், அறிவுத்திறத்தையும் வளர்த்து நிற்கும் நூலாகவே பல பாகங்களுடன் உருவெடுத்து நிற்கிறது.

இந்நூலானது வாழ்த்தியல், வாழ்வியல், ஆய்வியல், படைப்பியல், மற்றும் பதிவியல் ஆகிய இயல்புகளைக் கொண்டு மிளிர்கிறது. ஆக்கங்கள் அனைத்திற்கும் படைப்பாளிகளே பொறுப்புடையவர்கள்.இந்நூலின் உருவாக்கத்திற்கும் சிறப்பானவரவிற்கும் ஆக்கங்களைத் தந்து பங்களித்து இம்மலரின் வருகையைத் தூண்டிய பேராசிரியர்களுக்கும், கலாநிதிகளுக்கும், விரிவுரையாளர்களுக்கும், மாணவர்களுக்கும் எமது நன்றிகளைக் கூறி, இம்மலரிலே குறைகள் தவறுகள் இருப்பின் பொறுத்தருள்வீர் என்ற நம்பிக்கையுடன், குறிஞ்சிக் குமரன் பாதங்களில் இம்மலரை சமர்ப்பிப்பதில் இந்து மாணவர் சங்கத்தினராகிய நாம் பெருமை அடைகின்றோம்.

**இதழாசிரியர்கள்**

**"எம் கடன் உன் பணிசெய்து கிடப்பதே"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குன்றுதோறாடும் என்குமரக் கடவுளுக்கு...

உயிராக உறவாக
மனமாக செயலாக
நினைவாக-நான்
காணும் கனவாக
பூவாகத்தென்றலாக
ஆகாயம் பூமியாக
மனிதருள் கருணையாக
குழந்தையின் சிரிப்பாக
எதுவுமாக எங்குமாக இருக்கும்
குன்றமர்ந்தகுருபரனே

உன் அன்புமுகங்கண்டால்
என்அல்லல் தீரும் முருகா
உன் அழகுவேலைக்கண்டால்
என்அச்சம் தீரும் முருகா
தித்திக்கின்றதே நாவும்
தித்திக்கின்றதே-உனை
பக்தியோடுபோற்றிப்
பாடும் போதிலே...

குன்றவில்லையே இன்பம்
குன்றவில்லையே-அந்த
குன்றிலாடுங் குறிஞ்சிக்குமரன்
பொன்னடியைத் தொடும் போதிலே
ஓம் என்றுசொல்லியே...
பேராதனைக குறிஞ்சிமலைவாருங்கள்.....
ஒளிமயமே எதிர்காலம்
ஓடிவிடும் துன்பமெல்லாம்.......

ஓம் சரவணபவ

ப.விஸ்வலிங்கம்
பொறியியற்பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. வாழ்த்தியல்

இந்து தருமம் 2011ற்கு பெரியோர்கள் வழங்கிய வாழ்த்துக்கள் இவ்வியலில் அடங்கியுள்ளது.

2. வாழ்வியல்

1. அர்த்தமுள்ள இந்து மதம் 01
2. பழந்தமிழர் விருந்தோம்பற்பண்பாடு 04
3. இந்து சமயம் கூறும் ஆன்மீகச் சிந்தனைகள் 06
4. இந்து மதமும் யோகாசனமும் 08
5. உளி 11
6. திருமூலர் அருளிய தமிழ் மந்திரம் 14
7. திருக்குறளில் சமய வாழ்க்கை 17
8. கேள்வி பதில்கள் 21
9. கோயில் வழிபாடு எதற்காக? 25
10. "நா காக்க" 27
11. சமூகத்தின் அச்சாணி சமயம் 29
12. தாயின் அன்பு 33
13. ஆன்மிக வழியில் சமயத்தினதும் விஞ்ஞானத்தினதும் பிரதிபலிப்பு 35
14. அழகிய வாழ்க்கை 37

3. ஆய்வியல்

15. தற்கால ஒழுக்கவியல் சிந்தனைகளில் ஜி.ஈ.மூரின் பங்களிப்பு 40
16. இந்துசமயமும், விஞ்ஞானமும் 46
17. மனித உரிமைகளும், கீழைத்தேய மதங்களும் 49
18. தென் கயிலையின் வரலாற்று நாயகன் குளக்கோட்ட மன்னன் 52

4. படைப்பியல்

19. குறிஞ்சிப் பேரழகா 56
20. வான் தொடும் குறிஞ்சிக் குமரன் 57
21. அருள் புரிவாய் குறிஞ்சிக்குமரா 58
22. குறிஞ்சிமலை அழகா 60

5. பதிவியல்

23. இந்து மாணவர் சங்க பெருந்தலைவர்கள், தலைவர்கள் 62
24. 2011 ஆண்டறிக்கை 64


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய பிரதம குருவின் ஆசியுரை

*வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்*
*நோக்குண்டாம் மேனி நுடங்காது-பூக்கொண்டு*
*துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்*
*தப்பாமல் சார்வார் தமக்கு*

பல சமய கலை கலாச்சாரத்தை கொண்ட பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் இறைவன் திருவருளால் இந்து மாணவர் சங்கத்தை ஆரம்பித்து கோவிலைக் கட்டும் பணியில் ஈடுபட்டு பல்வேறு சமூக, சமயப்பணிகளிலும் அரப்பணிப்பு செய்து மறைந்த உத்தமர்களின் நற்கதிக்காக பிரார்த்தித்து,

பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் தொடரச்சியாக குறிஞ்சிக்குமரன் கோவிலை மையமாகக் கொண்டு சமய, சமூக, கலாசார நடவடிக்கைகளை முன்னெடுத்து அதனை ஒரு பயிற்சிப் பட்டறையாகப் பயன்படுத்தி தாம் செல்லுமிடங்களிலும் குறிப்பாக வெளிநாடுகளிலும் இந்து சமய பண்பாடுகளை விருத்தி செய்வோரது முயற்சிகள் மேலோங்கவும், அவர்களது வாழ்வும் மறுவாழ்வும் சிறந்து விளங்கவேண்டுமென இறையருள் வேண்டி நிற்கின்றேன்.

தற்போது இங்கிருந்து பணிபுரிவோரைப் பின்பற்றி இனிவரும் சந்ததிகள் மேலும் மேலும் சிறப்புற நற்பணிகள் புரியவேண்டும் எனவும்

இந்து மாணவர்களின் ஆவணப்புத்தகமாகவும், திறமை, ஆற்றல், உளக்கிடைக்கைள், ஆதங்கங்களை வெளிக்கொண்டுவரும் நூலாகவும் தொடர்ந்து வெளிவரும் இந்து தருமம் நூலானது மேன்மேலும் மெருகேறிய நூலாக வெளிவரவேண்டும் எனவும், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து நற்கதி பெறவேண்டுமென எல்லாம்வல்ல குறிஞ்சிக்குமரனைப் பிரார்த்தித்து வாழ்த்தி ஆசி கூறுவதில் பெருநிறைவு கொள்கிறேன்.

*"உருவாய் அருவாய் உளதாய் இலதாய்*
*மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்*
*கருவாய் உயிராய் கதியாய் விதியாய்க்*
*குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"*
*-குறிஞ்சிக்குமரனே*

**பா.நித்தியானந்தக் குருக்கள்**
(பிரதமகுரு)
குறிஞ்சிக்குமரன் கோவில்
பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MESSAGE FROM
## THE DEPUTY VICE CHANCELLOR

I am pleased to write this massage on the occasion of launching the "Hindu Dharmam" magazine by the Hindu Students' Union of this University, for the Maha Sivarathri festival.

I strongly believe that every student must make the maximum use of the opportunities surrounding them in University life, and utilize their spare time away from the classroom on extracurricular activities to enhance their knowledge in other areas as well. The production of a magazine of this nature involves a lot of hard work, and I am glad to note the contributions made by the members of this Union towards achieving this goal. Apart from this, working as a team has no doubt helped them to get to know each other and develop stronger bonds between themselves, and also broaden their knowledge and experience to make them more useful citizens.

I take this opportunity to congratulate the Executive Committee and the members of the Hindu Students' Union for their collective effort in publishing the magazine this year. Their commitment in keeping the tradition of holding this event annually, is indeed commendable.
I wish the Union all the best in their future endeavours.

**Prof. V.S. Weerasinghe**
Deputy Vice Chancellor

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவரின் வாழ்த்துரை

பேராதனைப் பல்கலைக்கழக வளாகப் பரப்புக்குள் குறிஞ்சி மலையில் கோவில் கொண்டு தேவதரிசனம் தரும் எம்பெருமான் குறிஞ்சிக் குமரன் ஆலய வரலாற்றுடன் இணைந்த வரலாற்றினைக் கொண்டதாக இந்து மாணவர் சங்க வரலாறும் காணப்படுகின்றது. குறிஞ்சி ஆலயம் 1968 இல் உருவாக்கப்பட, 1952ல் இருந்து செயற்பட்டுவரும் இந்து மாணவர் சங்கம் முக்கிய பாத்திரமாக விளங்கியுள்ளது என்பது ஆலய வரலாற்றுப் பதிவுகளில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது. ஆலயத்தின் அன்றாட உள்வாரியான கடமைகளில் சளைக்காது பணிகளைப் புரிந்து வரும் இம்மன்றமானது இவ்வருடம் தனது 60வது அகவையில் கால் பதித்துள்ளது என்பது பாராட்டப்படக் கூடிய ஓர் அம்சமாகும்.

பல்கலைக் கழகத்தின் இந்து மாணவர்கள் அனைவரும் இம்மன்றத்தின் அங்கத்தவர்கள் என்ற போதிலும் அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்பாக இந்து மாணவர் சங்கமே விளங்குகின்றது. மாணவர்களுக்கு கல்விப்பணி தலையாய பணியாக இருந்த போதிலும் ஆலயப்பணிகளிலும், அதே போல ஆலய சார்பான சமூகப் பணிகளிலும் இம்மன்றம் ஈடுபாடு காட்டி வருவது குறிப்பிட்டுக் கூறக்கூடிய மற்றயதொரு அம்சமாகும்.

மேலும் ஆலயத்தின் பிரதான பரிபாலனக் குழுவான பொறுப்பாண்மைக் குழுவிற்கு மிகவும் ஒத்தாசையாக இருந்து ஆலயப்பணிகள் சிறப்புற நடைபெற உதவி வருவதோடு ஆலயத்தின் அன்றாட மற்றும் திருவிழாக் காலங்களில் பூசை நடவடிக்கைகளில் பிரதான குருக்களுக்கு பக்கத் துணையாக இருந்து பூசை நடவடிக்கைகள் எந்தவிதமான தளர்வுமின்றி நடைபெறவும் இந்துமாணவர் சங்கம் உதவி வருகின்றது. இவ்வாறான பணிகளில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய மற்றுமொரு செயற்பாடாக அமைவது அவர்களால் வருடம் தோறும் வெளியிடப்படும் "இந்து தருமம்" என்ற சஞ்சிகையாகும்.

இம்முறை வெளிவரும் இச்சஞ்சிகை 2011ம் வருடத்திற்குரிய இந்து மாணவ மன்றத்தினரால் வெளியிடப்படும் 55 வது இதழாகும். இவ்விதழும் கடந்த வருடங்களைப் போல சமய, சமூக மரபுகளோடு தொடர்புடைய தாக்கமான ஆக்கங்களைத் தாங்கிவரும் என நம்புகின்றேன். 2011ம் வருடக் கல்வியாண்டின் இந்து மாணவ சங்கத்தினருடன் இணைந்து பணியாற்ற எனக்குச் சந்தர்ப்பம் வழங்கிய தாமரையில் பூத்த தங்கமுக குமரனை வணங்கி, துடிப்புடன் செயற்பட்டு கோவிற் பணிகள் சிறப்புற உதவிய மன்றத்தினருக்கு எனது நன்றியறிதலையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**விழிக்குத் துணை** உன் மென்மலர்ப் பாதங்கள் மெய்மைகுன்றா
**மொழிக்குத்துணை** என்றும் முருகா எனும் நாமம் -
**பழிக்குத் துணை** உந்தன் பன்னிரு கைவேல்- தனி
**வழிக்குத் துணை** வேலும் மயூரமுமே.- முருகா

**வே.சிவயோகலிங்கம்,**
அரசியல் விஞ்ஞானத்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரும் பொருளாளரின் ஆசிச்செய்தி

பேராதனைப்பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும் சகலபீடங்களையும் சேர்ந்த இந்து மாணவர்களை ஒன்று சேர்க்கும் மையப்புள்ளி அருள் மிகு குறிஞ்சிக் குமரன் ஆலயமாகும். இந்த ஆலயத்தின் பிரதான செயற்பாட்டுச்சங்கங்களில் ஒன்று இந்து மாணவர் சங்கம். சங்கத்தின் செயற்பாடுகளை உன்னிப்பாக நோக்கும் போது சங்க அங்கத்தவர்களது அர்ப்பணிப்பான இறைதொண்டு புலனாகும். உயர்கல்விக் கூடமொன்றின் ஆற்றல் மிகுந்ததுறைகளில் கற்கைகளை மேற்கொள்ளும் மாணவர்கள் என்ற தளத்தைத் தாண்டி அர்ப்பணிப்பான இறைசேவையாளர்கள், சமூகநலத் தொண்டர்கள் தாம் என்பதை அவர்கள் நிரூபித்துவருகின்றனர். அவ்வாறான சமய சமூக மேம்பாடு நோக்கிய மாணவர் அணிக்கு வழிகாட்டியாக நின்று இயங்குவதிலும், அவர்கள் வருடந்தோரும் வெளிக்கொணரும் இந்து தர்மத்திற்கு ஆசி கூறுவதிலும் மிகவும் மகிழ்வடைகிறேன்.

இந்துமாணவர் சங்கத்தின் பணிகள் மென்மேலும் வளர எனது ஆசிகளும், வாழ்த்தும் உரித்தாகுக.

**த.சிவானந்தவேள்**
பெரும்பொருளாளர்
இந்துமாணவர் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாண்மைக் குழுத்தலைவரின் ஆசியுரை

குறிஞ்சி நிலக் கடவுளாய், குன்று தோறாடும் குமரனாய், நம்பிக் கைதொழுவார்க்கு அபய கரம் கொடுக்கும் திருமுருகன், கன்னியர் இருவர் நீங்காக் கருணை வாரிதியாக, பேராதனைப் பல்கலைக்கழக புனித பூமியில், குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் எழுந்தருளி அனைவருக்கும் அருள்பாலித்து வருகிறார். 1968ம் ஆண்டு குறிஞ்சிக்குமரன் ஆலயம் அமைக்கப்பட்டு, ஆகம முறைப்படி பூசைகளும், அபிஷேகங்களும், உரிய காலத்தில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் தைப்பூசத் திருநாளன்று நிறைவு பெறுவதாக 10 நாட்கள் அலங்கார உற்சவமும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

வருடம்தோறும் இந்து மாணவர் சங்கத்தினர் "இந்து தருமம்" வெளியிடுவதன் மூலம் சைவத்திற்கும், தமிழுக்குமாகிய தமது பங்களிப்பை ஆற்றிவருகின்றனர். தமது கல்விச் செயற்பாடுகளிற்கிடையே இம்மலர் வெளியீட்டையும் தம்பணியாகக் கொள்வது பெருமைப்பட வேண்டிய விடயமாகும். சைவ உலகத்திற்கு அவர்கள் வழங்கும் ஆதரவு புதிய கருத்துக்களையும், பயனுள்ள பல விடயங்களையும் உள்ளடக்கியதாய் வருடம் தோறும் வெளிவர குறிஞ்சிக் குமரன் திருவருள் பாலிப்பாராக.

**மேன்மைகொள் சைவநீதி**
**விளங்குக உலகமெல்லாம்.**

**பேராசிரியர். வை. நந்தகுமார்**
பொறுப்பாண்மைக் குழுத் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துப் பட்டதாரிகள் மன்றத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

இந்து மாணவர் சங்கம் வருடாந்தம் வெளிக்கொணரும் ஆவணப்பதிவான இந்து தர்மம் சஞ்சிகைக்கு வாழ்த்துக் கூறுவதில் பெரு மகிழ்வடைகிறேன்.

இந்து மாணவர் சங்கம் பேராதனைப் பல்கலைக்கழகத்தினுள் இயங்கும் செயலூக்கமுள்ள மன்றங்களுள் மிகவும் கணிப்புக்குரியதொன்றாகும். பதவிகளை நிரப்பி மகிழ்வுடன் பதிவு செய்வது என்பதற்கும் மேலாக உயரிய நோக்குடன் இந்து மாணவர்களின் சங்கமாக விளங்கும் குறிஞ்சிக்குமரன் ஆலயத்தினைப் பராமரிப்பதும் அதனை இயங்கு நிலையில் பேணுவதும் அவர்களது பணியின் உன்னத இலட்சியமாக இருப்பதுதான் அம்மன்றத்தின் தனித்துவ அடையாளம். அவர்கள் வழிபடுவோர் என்ற தளத்தைத் தாண்டி தம்மைக் கோயிற் பணியாளர்களாக மாற்றிக் கொண்டு செயற்பட்டு வருகின்ற காட்சி வேறு எந்த உயர் கல்வி நிலையங்களிலும் காணவியலாதது.

இந்துமாணவர் சங்கத்தின் பணிகள் இன்றுபோல் என்றும் சிறக்கவும் இது போல பல பதிவுகள் கொண்ட ஆவணமாக இந்து தர்மம் மலரவும் உலகெங்கும் பரந்துள்ள பேராதனை இந்துப் பட்டதாரிகள் சார்பில் எனது வாழ்த்துக்களை வழங்குகிறேன்.

**கலாநிதி.வ.மகேஸ்வரன்**

தலைவர் இந்துப்பட்டதாரிகள் மன்றம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.
Email --rkmcey@gmail.com

Phone - 2588253
5013805
Fax - 2361438


## ஆசிச் செய்தி

பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்கள், அங்கு எழுந்தருளி அருள் பாலிக்கும் குறிஞ்சிக் குமரன் ஆலயத்தில் இந்து மாணவர் சங்கம் ஊடாக பல அருட்பணிகள் செய்து வருகின்றமையும், வருடாந்தம் மகா சிவராத்திரி அன்று "இந்து தர்மம்" என்ற மலர், மூலம் இந்து மதம் தொடர்பான ஆக்கங்கள் பலவற்றுடன் வெளியிடுவதையும் அறிந்து மகிழ்வுற்றேன். மலர் சிறப்பாக வெளிவர இறைவன் தன் அருளையும் ஆசிகளையும் வழங்க வேண்டுகிறேன்.

"கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிரத் தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை - இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு நான் புரிந்துகொண்டிருக்கிறேன். மக்களுக்குச் சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய்பவனாகிறான். ஆண்டவனைத் தேடி நீங்கள் எங்கே போகிறீர்கள்? துன்பப்படுபவர்கள், ஏழைகள், பலவீனர்கள் இவர்கள் எல்லோரும் அந்தந்த தெய்வ வடிவங்களே அல்லவா? ஏன் முதலில் இவர்களை ஆராதிக்கக் கூடாது? கங்கைக் கரையில் கிணறு வெட்டப் போவது உண்டா? இந்த ஏழைகளையே உங்கள் கடவுளாகக் கொள்ளுங்கள். அவர்களைப் பற்றிச் சிந்தியுங்கள்: அவர்களுக்குத் தொண்டு செய்யுங்கள்: அவர்களுக்காக இடைவிடாமல் பிரார்த்தனை செய்யுங்கள். அப்போது ஆண்டவன் உங்களுக்கு வழிகாட்டுவார்."

"நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னைப் பலவீனன் என்று நினைத்தால் பலவீனனாகவே நீ ஆகிவிடுவாய். நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை பெற்றவனாகவே ஆகிவிடுவாய்."

"பலவீனத்திற்கான பரிகாரம், ஓயாது பலவீனத்தைக் குறித்து சிந்திப்பதல்ல, மாறாக வலிமையைக் குறித்துச் சிந்திப்பதுதான். மக்களுக்கு, ஏற்கனவே அவர்களுக்குள் இருந்து வரும் வலிமையைப் பற்றிப் போதித்து அதை வெளிக்கொண்டுவருவது நமது கடமையாகும். பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே மதம் ஆகும். சமயசாதனையின் நுட்ப இரகசியமெல்லாம் கொள்கைகளில் இல்லை; அதை அனுஷ்டிப்பதில் தான் அடங்கியிருக்கிறது. நல்லவனாகவே இருந்து நன்மை செய்வதுதான் சமயசாதனையின் முழு உண்மையாகும். 'கடவுளே! கடவுளே!' என்று அழைத்துக்கொண்டிருப்பவன் சமயச் சான்றோன் ஆகிவிடமாட்டான். ஆனால் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுகிறவனே சான்றோன் ஆவான்."

"ஆன்மீக வாழ்க்கைக்கோ மனதுக்கோ உடலுக்கோ பலவீனத்தை உண்டுபண்ணும் எதையும் உன்கால்விரலாலும் தீண்டாதே. மனிதனிடம் இயற்கையாகப் புதைந்திருக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவதே சமய வாழ்க்கையாகும். எல்லையில்லாத சக்தி கருள் கருளாக இந்தச் சிறிய மனித உடலுக்குள் சுருட்டி அடக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சக்தி விரிந்து பரந்து கொண்டே இருக்கிறது. இதுதான் மனிதனுடைய வரலாறு, சமயத்தின் வரலாறு, நாகரிகத்தின் வரலாறு, முன்னேற்றத்தின் வரலாறு ஆகிய அனைத்துமாகும்."

"உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ, அவற்றைப் பெற்றிருப்பவர்களை நசுக்கக் கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ, மண்ணுலகிலோ எங்கும் கிடையாது. இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனைப் பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக் கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு." என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.

மேற்படி கருத்துக்களை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி அனைவரும் மன அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதோடு பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்கத்திற்கு என் அன்பையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொழும்பு.
03-02-2012

என்றும் இறைபணியில்,
[signature]
(சுவாமி சர்வரூபானந்த)
தலைவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளரின் வாழ்த்து

வாழ்வியலுக்கும், ஆன்மீக மேம்பாட்டுக்கும் நெறிகாட்டும் எமது சமயம், எமது இறைமையையும், பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் தரணியுள்ளவரை தலைத்தோங்க வைக்கும் ஆற்றல் பெற்றது. அந்த வகையில் பேராதனை பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம், பேராதனை பல்கலைக்கழகத்தில் குறிஞ்சிக்குமரன் கோயில் 1968 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது முதல் அதன் சமய, சமுதாய, இலக்கியப்பணிகளில் பெரும் பங்களிப்பைச் செய்து வருகின்றது. இவை தவிர சிவனை தன் நாயகனாகக் கொண்ட உமையவள் நோற்ற விரதநாளில் "இந்து தருமம்" எனும் நூலினை இந்து மாணவர் சங்கம் வெளியிட்டு சமய விழிப்புணர்வையும், ஆன்மீக எழுச்சியையும் ஏற்படுத்தி வருகின்றது.

எமது மாமன்றத்தின் இணை நிறுவனமாகவும் இருந்து சமய, சமூகப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் மட்டில்லா மகிழ்ச்சி. பேராதனை பல்கலைக்கழக இந்து மாணவர்களின் தொண்டு தொடரவும், துலங்கவும் "இந்து தருமம்" எனும் சமய வழிமொழியும் சிந்தனைத் திரட்டல்களுடன் பக்திமணம் கமழ மலரும் இதழுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**கந்தையா நீலகண்டன்**
(பொதுச் செயலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கத் தலைவரின் வாழ்த்துரை

பேராதனைப் பூமியிலே பேரானந்தம் பொழியும்
குமரனை ஆராதனை செய்து - எம்மவரை
அரவணைத்த குமரா உன் திருவடி தொட்டு இம்மடலை வரைகிறேன்

குறிஞ்சி என்றாலே "சேயோன் மேய மைவரை உலகமும்" என்ற தொல்காப்பிய கூற்றுக்கிணங்க நம் பண்டைத் தமிழர் குறிஞ்சிக்குரிய தெய்வமாக குமரனை வழிபட்டு உய்வு பெற்றனர். குறிஞ்சியைக் குமரனுக்குரியதாக கருதியதால் அவனைக் "குன்றத்துக் கிழவன்" என்றும் அழைத்தார்கள் அந்த மரபின் வழித்தோன்றலாகவே குறிஞ்சிக்கோவில் விளங்குகின்றது. இவ்வுலகிலே இந்து சமயம் பழம்பெரும் சமயங்களிலெல்லாம் சிறந்த ஒன்றாக விளங்கி மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் ஆத்ம ஈடேற்றத்திற்கும் துணை புரிகின்றதென்றால் மிகையாகாது.

இன்றைய நிலையில் செயற்குழுவில் அங்கம் வகிப்போர் மட்டும்தான் குறிஞ்சிக் குமரன் ஆலய வளர்ச்சிக்கு உழைக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் இந்து மாணவர் ஒவ்வொருவரினதும் தலையாய கடமை என்பதை நீங்கள் மறந்துவிடலாகாது குறிஞ்சிக் குமரன் புகழ் உலகமெல்லாம் முழங்க வேண்டும் என்று உங்கள் அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இவற்றைவிட எமது செயற்பாடுகள் யாவற்றிற்கும் உறுதுணையாக இருந்து வெற்றியடையச் செய்த அனைத்து உள்ளங்களுக்கும் குறிஞ்சிக் குமரன் திருவருள் கிட்ட வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டு அடுத்த கல்வியாண்டுக்கான புதிய செயற்குழுவை அன்புடன் வரவேற்று இந்து மாணவர் சங்கம் வருடந்தோறும் மேற்கொள்ளும் முக்கிய செயற்பாடுகள் அனைத்தினதும் மணி மகுடமாகவே "இந்து தருமம்" என்ற மலர் வெளியீடும் அமைகிறது. அதற்கிணங்க 55வது இவ் இதழ் வரும் காலத்தில் இந்து மாணவர் சங்கத் தலைவராக இருப்பது இறை தந்த பேறு எனக் கருதுகின்றேன்.
இவ் இதழ் சிறப்புற எல்லாம்வல்ல குறிஞ்சிக் குமரனைவேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

நன்றி

**ச. சசிக்குமார்**
தலைவர் - இந்து மாணவர் சங்கம்
இறுதி வருடம், பொறியிற் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தமுள்ள இந்து மதம்

**ச.யசிந்தன்**
விவசாயபீடம்
மூன்றாம் வருடம்

தலைமுறைகள் தலைமுறைகளுக்கு அளித்த நம்பிக்கைக்குரிய காரணங்கள் ஏராளம். ஆனால் இதற்கு விஞ்ஞான அடிப்படையிலும் நடைமுறை அடிப்படையிலும் ஏராளமான காரணங்கள் உள்ளன என்பதே உண்மை. ஒருநபர் காலையில் துயில் எழுவதுமுதல் துயில்கொள்வது வரை, ஒரு மனிதன் கருவரையிலிருந்து கல்லறைவரையிலான வாழ்க்கைக்காலத்தில் செய்ய வேண்டிய எல்லா நிகழ்வுகளிலும் பல்வேறு நடைமுறைகள் அடங்கியுள்ளன. இதில் சில காரணங்களை விஞ்ஞான ரீதியாக உற்று நோக்குவோம்.

ஒருவர் படுக்கையிலிருந்து நித்திரை விட்டு எழுந்திருக்கும் போது வலது பக்கம் திரும்பி எழ வேண்டும் எனக்கூறப்படுகின்றது. ஏனெனில் நம் உடலைச் சுற்றும் இரு காந்தவளையங்கள் உள்ளன. இவற்றில் முதலாவது காந்தவளையம் காலிலிருந்து தலைக்கும், தலையிலிருந்து காலிற்கும் வலம் வருகின்றது. இரண்டாவது காந்தவளையம் இடது பக்கமிருந்து முன்பாகம் வழியாக வலது பக்கத்திற்கும், வலது பக்கத்திலிருந்து பின்பாகம் வழியாக இடது பக்கத்திற்கும் வலம் வருகின்றது. காந்த வளையங்களின் திசைக்கேற்றவாறு உடல் அசையும் போது சுருள்கள் இறுகி உடல் செயல்திறன் கூடுகின்றது. எதிராக அசையும் போது சுருள்கள் தொய்ந்து உடலின் செயற்திறனை தளர்வடையச் செய்யும். இதனை நவீன மின்னியலும் ஒப்புக்கொள்கின்றது.

படுக்கையை விட்டு நித்திரையிலிருந்து எழும் போது ஜெபம் சொல்லி எழ வேண்டும். ஏனெனில் தூக்கத்தில் மனிதனின் இரத்த ஓட்டத்திற்காக இதயம் மிகக் குறைந்த சக்தியையே பயன்படுத்துகின்றது. திடீரென எழுந்து செல்லும் போது இதயம் திடீரென அதிக தகைப்புக்கு உட்படலாம். இதனைத் தடுப்பதற்காகவே ஜெபம் சொல்லி எழ வேண்டுமென கூறப்படுகின்றது.

எண்ணெய் தேய்த்துக் குளித்தல் என்பது நாமனைவரும் அறிந்த பாரம்பரிய ஸ்நான முறையாகும். இதனால் எண்ணெய்யிலுள்ள மூலிகைகளின் மருத்துவம் பரவுவதாலும் சரும மேற்பரப்பிலுள்ள நுண்ணங்கிகள் அழிவாலும் சருமம் தூய்மையடைகிறது.

திருநீறு, சந்தனம் அணிவது ஏன்? திருநீற்றின் மருத்துவ குணங்களால் உடலின் துர்நீர் உறிஞ்சப்படுகிறது அத்துடன் உடல் வெப்பத்தையும் குறையச் செய்கிறது. சந்தனம் அணியப்படும் நெற்றியின் மையப்பகுதியானது உடலின் மிக முக்கியமான நரம்பு முடிச்சாகும். அவ்விடத்தை குளிர்மையாகவும் உடலிற்கு புத்துணர்ச்சி அளிக்கவும் சந்தனம் அணியப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் தோப்புக்கரணம் போடும் போது தலையில் மூன்று முறை குட்டிக் கொள்கிறோம். இதனால் மூளைக்குச் செல்லும் நரம்புகள் தூண்டப்பட்டு மூளைக்கான இரத்த ஓட்டம் அதிகரிக்கின்றது.

கோயிலிற்கு நேராக நின்று தொழுவது தவிர்க்கப்படுவது ஏன்? கருவறையிலிருக்கும் விக்கிரகத்தில் குடிகொண்டிருக்கும் ஜீவசக்தி பக்தரை நோக்கி பாம்பு வடிவத்தில் வந்து கொண்டிருக்கும். இந்நேரம் கால்களை சேர்த்து இருகைகளையும் தாமரை மொட்டு போல் பிடித்து கண்களை மூடி தியானிக்கும் போது ஜீவ சக்தியானது ஒன்றுக்கொன்று தொடும் விரல்கள் ஊடாக அதிவேகத்தில் உடலுக்குள் பரவும். மேலும் நாம் வணங்கும் போது வலது அல்லது இடது பக்கத்தில் நின்று முப்பது பாகையில் சரிந்து நின்றே வணங்க வேண்டும். இதற்காகவே சந்நிதியின் இருமருங்கிலும் தடி அல்லது குழாய் வைத்து அடைக்கப்பட்டிருக்கும்.

சுபகாரியங்கள் மற்றும் திருவிழாக்களில் (இப்போது அமங்கல நிகழ்வுகளிலும் காணலாம்.) தோரணங்கள், மாவிலைகள் மற்றும் வாழை மரங்கள் கட்டப்படுவதை அவதானிக்கலாம். இலையிலுள்ள உயிர்க்கலங்கள் இறப்பதற்கு நெடுநேரமாவதாலும், இறக்கும் வரை அவை செய்யும் ஒளித்தொகுப்பின் மூலம் வெளிவிடப்படும் பிராணவாயு மூலம் திருவிழா போன்ற நிகழ்வுகளில் இடம்பெறும் சன நெரிசலால் மூச்சுத்திணறல் ஏற்படும் சந்தர்ப்பம் தவிர்க்கப்படுகின்றது.

கோவிலைச் சுற்றி பக்தர்கள் அதிக முறை வலம் வருவதை பின்பற்றுவது ஏன்? கோவிலில் அநேகமாக மருத்துவ குணம் நிறைந்த மரங்கள் உதாரணமாக வேம்பு, ஆல் மற்றும் அரசு உள்ளன. அதிக முறை வலம் வருவதால் பக்தர்கள் அதிகமாக சுவாசிப்பார்கள். அதன் போது இந்த மரங்களிலிருந்து வீசும் காற்றை சுவாசிப்பதால் அவர்களின் உடலினுள் புத்துணர்ச்சியும், தெம்பும் ஏற்படுகின்றது. கோயில் தீர்த்தங்களில் நீராடுவதும், அந்தத்தீர்த்தக் கேணிக்கு வரும் நீரானது பல மருத்துவ குணங்களுடன் தொடர்புபட்டிருப்பதும் கோயில்களில் அவதானிக்கக் கூடிய ஒன்றாகும்.

மற்றவர்களை விட பிராமணர்களுக்கு தீட்டு நாட்கள் குறைவாக இருப்பதை பார்க்கிறோம். ஏனெனில் பிராமணர்கள் மற்றவர்களை விட அதிகமான ஆசாரங்களை கடைபிடிப்பதால் அவர்களின் உடலிலும் வீடுகளிலும் சுகாதாரம், தூய்மை சிறப்பாக பேணப்படும். அத்துடன் தீட்டு என்ற வழக்கம் உருவாக்கப்பட்ட காரணம் என்னவெனில் அடிப்படையாக சுகாதாரம்-தூய்மையையே மையப்படுத்தியதாகும் எனலாம். குழந்தைப் பேறு, பூப்பெய்துதல் மற்றும் மரணம் என்பவற்றில் இது கடைபிடிக்கப்படுகிறது. உதாரணமாக குழந்தை பிறந்தவுடன் தீட்டு எனப்படுவது ஏனெனில் தீட்டு என்பதற்காக அக் குழந்தை பிறந்த வீட்டிற்கு வருபவர்களின் எண்ணிக்கை குறைவதாலும் இதனால் அக் குழந்தைக்கு ஏற்படக்கூடிய நோய் மற்றும் அனர்த்தங்கள் தவிர்க்கப்படுவதை விளக்கலாம். இதனடிப்படையிலேயே பூப்பெய்துதல் மற்றும் மரண வீடுகள் தொடர்பாகவும் தூய்மை சுகாதாரம் பேணப்படுவதையே தீட்டு எனப்படுவது விளக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா நாயகர்களை, விருந்தாளிகளை ஆராத்தி எடுத்து வரவேற்பதை பார்த்திருக்கின்றோம். ஆராத்தியின் போது உபயோகிக்கப்படும் மஞ்சள், சுண்ணாம்பு என்பன இரசாயண ரீதியில் கிருமிக் கொல்லிகள் ஆகும். இவற்றினூடு தொடர்புபடும் வாயு விருந்தாளிகளை அணுகுகின்றதால் அவருக்கு இது ஒரு விதமான "மருந்துப்பரிகாரம்" எனலாம். திருஷ்டி சுற்றிப் போடுவதும் இதன் அடிப்படையிலான விளக்கத்தையே கொண்டுள்ளது. மஞ்சள் நீர் தெளிப்பது, கற்பூர ஆராத்தி எடுப்பது என்பனவற்றையும் இதனடிப்படையில் விரிவாக விளக்கலாம்.

இவ்வாறு விளக்கப்பட்டவை இந்து சமய பழக்கவழக்கங்களில் ஒரு சொற்ப அளவே ஆகும். இதைவிட இருக்கின்ற ஏனைய ஏராளமான நடைமுறைகளிற்கு பின்னால் பொருள் பொதிந்த விஞ்ஞான யதார்த்தம் பளிச்சிடுவதை உண்மையாக ஆராய்ந்தால் தெளிவுபெறலாம். இவற்றை மூடநம்பிக்கைகள் என ஒதுக்குவது எம்மை நாமே முட்டாளாக்கிக் கொள்வதற்கு சமம். எவ்வாறாயினும் நம் இந்து மதம் இவ்வளவு தூர நோக்குடன் அர்த்தமுள்ள ஓர் மதமாக விளங்குவது நம் எவராலும் மறுக்க முடியாது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

மூலம்:-இந்து மத ஆசார நம்பிக்கை ரகசியங்கள் என்ற நூலிலிருந்து.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழந்தமிழர் விருந்தோம்பற்பண்பாடு

கி.யாதவராஜன்
3ம் வருடம்
பொறியியற் பீடம்

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

எனும் குறட்பா வழி வாழ்பவர்கள் தமிழர்கள். விருந்தோம்பலில் மட்டும் அல்லாது பண்பாட்டிலும் சிறந்தவர்கள் தமிழர்களே. அவ்வாறு பண்பாட்டு சிறப்புமிக்க தமிழர்கள் விருந்தோம்பலிலும் ஒரு பண்பாட்டை பேணுகிறார்கள். அவ்வாறான விருந்தோம்பல் பண்பாடு கொண்ட தமிழர்களின் உணவு முறை பற்றி இக்கட்டுரையின் மூலம் சிறிது அலசிச்செல்லலாம் என்று எண்ணுகின்றேன். தமிழர் தமது உணவை தலைவாழை இலையில் உண்கின்றார்கள். தமிழர்களுடைய கலாச்சாரத்தில் முக்கிய பங்கு வாழை இலைக்குண்டு. தமிழர் உணவு உண்பதற்கு மட்டும் அல்லாது சுபகாரியங்களில் நிறைகுடம் வைக்கும் போது தலைவாழை இலையை வைத்து அரிசி பரப்பி அதன் மேல் கும்பம் வைப்பார்கள்.

வாழை இலை பாரம்பரியமாக உணவு உண்ண பயன்படுத்தப்பட்டு வருகிறது. வாழை இலையில் உணவு பரிமாறுவது தமிழர்கள் விருந்தோம்பல் பண்பாட்டில் முதலிடம் வகிக்கிறது. வாழை இலையில் சாப்பிடும் போது உணவின் சுவை கூடுகிறது. அது மட்டும் அல்லாது வாழை இலையில் உணவு உண்பதானது மருத்துவ நன்மைகளையும் நமக்குத் தருகிறது. வாழையிலை ஒரு கிருமி நாசினியாகும். உணவில் உள்ள நச்சுக் கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டது. இதனால் நோயின்றி நீண்ட ஆரோக்கியத்துடன் வாழ்வார்கள். வாழை இலையில் சாப்பிடுவதால் இளநரை வராமல் நீண்ட நாட்களுக்கு முடி கறுப்பாக இருக்கும். தீக்காயம் ஏற்பட்டவர்கள் வாழை இலை மீது படுக்க வைக்க வேண்டும் அப்போது தான் சூட்டின் தாக்கம் குறையும். இன்னும் பல மருத்துவ நன்மைகளை வாழை இலை நமக்கு தருகிறது.

இவ்வாறு வாழை இலையில் சாப்பிடுவதை பற்றி செவிவழி கதை ஒன்றும் உள்ளது. "ஒரு முறை பரம்வாஜ முனிவர் வீட்டில் இராமன் சாப்பிடும் போது அவருக்கு பல உதவிகளை செய்த அனுமனுடன் ஒரே இலையில் சாப்பிட்டார் அணில் முதுகில் போட்ட கோடு மாதிரி, வாழை இலையின் நடுவில் இருக்கும் கோடும் இராமன் இலையை இரண்டாக பிரிப்பதற்கு தனது கையால் போட்ட கோடு. இலையின் ஒரு பகுதியில் மனிதர் விரும்பி உண்ணும் உணவு வகையும், எதிர்ப்பகுதியில் குரங்குகள் விரும்பும் காய்கறிகளும் பரிமாறப்படுவதற்கு இதுதான் காரணம்" என்று அக்கதை கூறுகிறது.

இவ்வளவு சிறப்பான வாழை இலையில் சாப்பிடுவதற்கும் சில முறைமைகளை சொல்லி இருக்கின்றனர் நமது முன்னோர்கள். இலையின் நுனிப்பகுதி இடதுபக்கமாகவும், அகலமான பகுதி வலதுபக்காமாகவும் இருத்தல் வேண்டும். முற்றிய இலையை விட தளிர் இலைதான் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலை கருகுகிற மாதிரி உணவு சூடாக இருக்ககூடாது. சுத்தமாக ஆறியுமில்லாமல் மிதமான சூட்டில் பரிமாறுதல் வேண்டும். முதலில் பசியைத் தூண்டும் பருப்பு நெய் அடுத்து காரவகைக் குழம்பு அதன் பின் உணவின் செறிமானத்துக்கு உதவும் மல்லி, பூண்டு, மிளகு உள்ள இரசம், தொடர்ந்து ருசிக்குப் பாயாசம் கடைசியாக புளிப்பு சுவையுள்ள மோர் என்று உணவு பரிமாறுவதற்கு ஒரு முறையையே எமது முன்னோர்கள் வகுத்து உள்ளனர்.
இவ்வாறான விருந்தோம்பல் பண்பாட்டில் இலையில் எங்கு எங்கு என்ன உணவு பரிமாரப்படுதல் வேண்டுமென்றும் கூறி உள்ளனர்.




1. உப்பு
2. பாயாசம் அல்லது இனிப்பு பலகாரம்
3. பச்சடி, கூட்டு, அவியல், வறுவல், பொரியல், ஊறுகாய் என்பன முறையே அம்புக்குறி காட்டும் திசையில் பரிமாறப்பட வேண்டும்.
4. அப்பளம், வடை போன்றன.
5. சித்தர அன்னம் (புளிச்சாதம், தயிர் சாதம் முதலியன)
6. அன்னம்

இவ்வாறான உணவு பரிமாறுவதற்கு சிறப்பான காரணமும் எம்முன்னோர்களால் கூறப்பட்டுள்ளது.

1. கைக்கு சீக்கிரம் எட்டாத தூரத்தில் உப்பு, உணவுடன் எளிதில் கலக்காது.
2. மிளகாய் அல்லது உப்பை தெரியாமல் ருசித்து விட்டால், உடனடியாக இனிப்பு மிக அருகாமையில்
3. 6, நடுவில் முக்கிய உணவான அன்னம், அதை சுற்றி கூட்டு, பொரியல், அவியல், வறுவல்,ஊறுகாய்
4. குறைவாக உட்கொள்ள வேண்டிய சித்ரான்னம்
5. அளவாக உட்கொண்டு வயிற்றை பாதுகாத்து கொள்ள கடைசியாக வைக்கப்பட்டிருக்கும் நொறுக்கு தீனி வகைகள்

உணவு பரிமாறுவதற்கு ஒரு ஒழுங்கை கூறியது போல உணவு உண்பதற்கும் ஒரு ஒழுங்கு முறை கூறப்பட்டு உள்ளது. முதலில் செமிக்கும் தன்மை குறைந்த மற்றும் நமது உணவு குழாயை தன்மையாக்கும் பருப்பு மற்றும் நெய், பிறகு ருசியுடன் உணவு குழாயை வருடும் தன்மையான குழம்பு, பின் இது வரை உண்ட அனைத்தையும் செமிக்க செய்ய ரசம், பின் வயிறார உண்ட பின் உருவாகும் சூட்டைக குறைக்க மோர். இவ்வாறான அறிவியல் ரீதியான உணவு உண்பதற்கான வழி முறையை தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளிற்கு முன்பிருந்தே பின்பற்றி வருகின்றனர். அதுமட்டும் அல்லாது உணவு பரிமாறப்பட்ட பின்னரே விருந்தினரை உணவருந்த அழைத்தல் வேண்டும் என்றும் கூறி உள்ளனர். இவ்வாறே தமது நாளாந்த உணவு முறையை மேற்கொண்டனர். இன்று விருந்தோம்பல் என்பதே அரிதாகி விட்ட நிலையில் திருமணங்கள் மற்றும் கோவில் திருவிழாக்களின் போதே நடைபெறுகிறது. அவ்வேளைகளில் இம்முறைகளை கருத்தில் கொண்டு நாம் உணவு பரிமாறினால் விருந்தோம்பல் சிறப்பாக அமையும்.

**"உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா**
**மடமை மடவார்கண்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயம் கூறும் ஆன்மீகச் சிந்தனைகள்

சௌ.ஆரூரன்
மூன்றாம் வருடம்
பொறியியற்பீடம்

உண்மை,அன்பு இவற்றையே கடவுள் விரும்புகின்றார். ஆகவே நீங்கள் உங்களுடைய சாதனை, சொல், செயல் என்பவற்றில் உண்மையானவராக இருங்கள்.

மௌனத்தின் முதிர்ச்சி பிரார்த்தனை
பிரார்த்தனையின் முதிர்ச்சி நம்பிக்கை
நம்பிக்கையின் முதிர்ச்சி அன்பு
அன்பின் முதிர்ச்சி தொண்டு
தொண்டின் முதிர்ச்சி அமைதி.

**சிந்னைக்கு...............**

தாயை வணங்கியவன்
    தரணியை ஆளுவான்
தந்தையை மதித்தவன்
    தருமம் செய்வான்
கல்வியை மறுப்பவன்
    பரிதவித்து அலைவான்
நல்லதை நினைப்பவன்
    நன்மையே செய்வான்
நீதியை மறந்தவன்
    நிலைகெட்டுப் போவான்

✓ மரம் அமைதியை விரும்பினாலும் காற்று அதனை விட்டு வைப்பதில்லை

✓ துருப்பிடித்த இரும்பு காந்தத்தினால் கவரப்படாதது போல் நல்ல நிலையில் இல்லாத உடம்பு இறைவனைக் கவரும் சக்தியற்றது.

✓ இயற்கை, இறைநம்பிக்கை, ஆன்மீக உணர்வு என்னும் மூன்றும் மனிதகுலத்தை வாழ வைப்பவை.

**சிந்னையிலிருக்க......................**

நல்ல குரு அமைந்தால் ஆண்டவன் கொடை
நல்ல மனைவிஅமைந்தால் ஆண்டவன் கருணை
நல்ல பிள்ளை அமைந்தால் ஆண்டவன் அருள்
காரணம் இல்லாமல் காரியம் இல்லை
வாழ்கை என்பது பெயர் தெரியாத ஊருக்கு வழி தெரியாத பயணம்
சங்கடங்கள், கலவரங்கள், குழப்பங்கள், மயக்கங்கள் வாழ்வில் தோன்றி மறையும்
மறைந்து தோன்றும் இவை இறைவனைச் சிந்திக்கச்செய்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆலயத்தைத் தேடும் தாயன்பு பற்றி..............**

தாயை மதிக்கத்தெரிந்தவர்கள் தான் இன்றைக்கு வாழ்க்கையில் எல்லா விதத்திலும் முன்னுக்கு என்பதை மட்டும் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு அம்மா தினமும் கோயிலுக்குப்போய் "கடவுளே நான் இறந்து போனால் நரகத்திற்குப் போகவேண்டும்" என்று வேண்டிக் கொள்வாராம். எல்லோரும் சொர்க்கத்திற்குத்தான் போக ஆசைப்படுவார்கள், ஆனால் இந்த அம்மா ஏன் இப்படி வேண்டிக் கொண்டிருக்கின்றார் என்று ஆலய அர்ச்சகருக்குச் சந்தேகம். ஒருநாள் நேரடியாகவே அதனை அவரிடம் கேட்டுவிட்டார்.

அதற்கு அந்த அம்மா "ஐயா எனக்குக் கல்யாணம் ஆகி நீண்ட நாட்களாகக் குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது. கோவில்கள் எல்லாம் வழிபட்டு வந்தேன். அதன் பின்னர் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. நான் மிகவும் செல்லம் கொடுத்து அவனை வளர்த்தேன். அதன் விளைவாக அவன் மோசமான ஆளாகிவிட்டான். கெட்ட பழக்கம் எல்லாம் கற்றுக் கொண்டான்.அதனால் இவனுக்கு முதல் நான் இறந்து நரகத்திற்குப் போய் விட்டால், இவனுக்குப் பணிவிடை செய்யலாம், அதனால் தான் நரகத்திற்குப் போகவேண்டும் என்று தினமும் ஆண்டவனை வேண்டுகின்றேன்" என்று கண் கலங்கிக் கொண்டே கூறினார். அதுதான் தாயுள்ளம். தாயின் பெருமையைச் சரியாக உணர்ந்து நடப்பவர்களின் வாழ்க்கை சிறக்கும்.

மனிதத்துவத்தை வாழ்க்கையில் வெளிக் கொண்டு வருவதே வாழ்வின் அர்த்தம். மனிதனினுள் ஆழ்ந்திருக்கும் பூரணத்துவத்தை வெளிக்கொண்டு வருவதே ஆன்மீக வெற்றி. இவ் வெற்றியூடாக வேகமாக முடிவெடுப்பதை விட விவேகமாக முடிவெடுப்பதே மேலானது. முடிவெடுக்கும் ஒவ்வொரு குழப்பத்திலும் சரியான தீர்வை பெறமுடிகின்றது. இதன் மூலம் அல்லல்கள் நீங்கி ஆனந்தம் பெற்று, சீரும் சிறப்பும் மிளிர பாரோர் பாராட்டிடும், மனித்துவத்தை உணர்த்திடும் சமயநெறிகளைப் பின்பற்றி ஆன்மீக அறிவை வளர்த்திட வாழ்வில் ஒவ்வொருவரும் முயல வேண்டும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதமும் யோகாசனமும்

சி.வினோத்
இறுதிவருடம்
பொறியியற் பீடம்.

பல கோடி வருடங்களுக்கு முன்பு தோன்றிய மதம் தான் எமது இந்து மதம். அந்த இந்து மதம் தோன்றிய காலத்திலேயே தோன்றியது தான் இந்த யோகாசனம். இந்து மதத்தில் உள்ள இறைவன் முனிவர் தேவர் மற்றும் பக்தர்களின் வரலாற்றை எடுத்து நோக்குவோமானால் யோகாசனத்தின் சிறப்பையும் மற்றும் அதன் அவசியத்தையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

யோகாசனம் என்ற சொல்லை கருதுகையில்,
யோகா என்பது உடல், மனம், ஆன்மா ஆகியவற்றை ஒன்றினைக்கும் பயிற்சியாகும். பொதுவாக ஒரு முகப்படுத்தல் அல்லது ஒரு நிலைப்படுத்தல் என்பதாகும்.
ஆசனம் என்பது இருக்கை என்று பொருட்படும். உடல் இயக்கத்தையும் மன ஓட்டத்தையும் செம்மைப்படுத்த உதவும் செயல்முறைத் தொடக்க நிலையே ஆசனம் ஆகும்.

இவ் யோகாசனப் பயிற்சியானது ஒரு மனிதனிற்கு பல்வேறு நன்மைகளைத் தருகின்றது. அவற்றுள்

1. நற்பண்புகளை வளர்த்தல்
2. ஆரோக்கியமான சுறுசுறுப்பான உடல்
3. புலனடக்கத்தை ஏற்படுத்துதல்
4. மனதை ஒரு நிலைப்படுத்த உதவுதல்
5. நோயற்ற வாழ்விற்கு வழிகோலுதல்
6. உடலை வனப்புறச் செய்தல்
7. சிந்தனைச் சக்தியை அதிகரித்தல்
8. ஆயுளை அதிகரித்தல்
9. உடல் பலத்தை அதிகரித்தல்
10. ஞாபக சக்தியை அதிகரித்தல்

போன்ற பலவற்றைக் கூறலாம்.

மேலும் யோகாசனமானது சில நோய்களை குணப்படுத்தும் மருந்தாகவும் விளங்குகிறது. இந்நோய்களுள்

1. ஒற்றைத் தலைவலி
2. இடுப்பு, மூட்டு, முதுகு வலி
3. நரம்புக் கோளாறுகள்
4. உடல் பருமனைக் குறைத்தல்
5. தைரொயிட்டுக் கோளாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வாதம்
7. உயர்குருதி அமுக்கம்
8. நீரிழிவுநோய்
என்பன குறிப்பிடத்தக்கன.

யோகாசனம் செய்யும் போது கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள்
1. அமைதியான ஆரோக்கியமான ஓர் சூழ்நிலையை ஏற்படுத்தல்.
2. இயற்கையான காற்றோட்டமுள்ள இடத்தினை தெரிவு செய்வது சிறந்தது.
3. ஆகாரம் உட்கொண்டு 4 மணிநேரத்தின் பின்னரே செய்ய வேண்டும். நீராகாரம் உட்கொண்டு 1 மணிநேரத்தின் பின்னர் செய்யலாம்.
4. தினமும் 20-45 நிமிடம் வரை செய்வதால் சிறந்த பலனைப் பெறலாம்.
5. ஆசன நிலையில் குறித்த நேரத்திற்கு மேல் இருத்தல் கூடாது.
6. யோகாசனம் செய்வதற்கு காலை மற்றும் மாலை 5-7 மணி சிறந்த நேரமாகும்.
7. குளித்து விட்டு செய்தால் உடல் இலகுவாக இருக்கும்.
8. ஆசனங்கள் செய்துவிட்டு குளிப்பதானால் 20 நிமிடம் கழித்து குளிக்கலாம்.
9. ஆசனப் பயிற்சி முடித்துவிட்டு குறைந்தது 20 நிமிடம் சென்ற பிறகே உட்கொள்ளலாம்.
10. ஆசனப் பயிற்சியையும் உடற் பயிற்சியையும் ஒரே நேரத்தில் செய்யக்கூடாது. ஒன்றை காலையிலும் மற்றதை மாலையிலும் செய்தல் சிறந்தது.
11. ஆசனம் செய்யும் போது சோர்வு தோன்றினால் சாந்தியாசனம் செய்து ஓய்வு எடுத்த பின்னர் செய்யலாம்.
12. ஆசனம் செய்ய ஆரம்பிக்கும் போதும் நிறைவின் போதும் ஒரு நிமிடம் அமைதியாக பத்மாசனத்தில் இருக்க வேண்டும்.

யோகாசனம் 64 ஆசனங்களை கொண்டுள்ளது. ஒவ்வொரு ஆசனமும் தனிச்சிறப்பியல்புகளை கொண்டிருப்பதுடன் உடலின் ஒவ்வொரு அங்கங்களிற்கு பயிற்சியாக அமைவதுடன் ஒவ்வொரு நோய்க்கும் மருந்தாகவும் அமைகின்றது.

இவ் ஆசனங்களில் பத்மாசனம், சூரியநமஸ்காரம் என்பன முக்கியமானவையாகும். இவை எல்லோரும் செய்யக்கூடியதாக காணப்படுவதுடன், ஒரே நேரத்தில் உடலின் எல்லா அங்கங்களிற்கும் பயிற்சியாகவும் அமைகிறது. இவற்றுள் பத்மாசனம் மூலம் பல நன்மைகள் ஏற்படுகின்றன. உதாரணமாக இவ்வாசனம் மூலம் எமது மனதை ஒருநிலைப்படுத்தல் இலகுவாக்கப்படுகின்றது. முக்கியமாக முத்திநிலை அடைந்த முனிவர்கள் தவம் இருப்பது இவ்வாசனத்திலேயே ஆகும். மேலும் இந்துக் கடவுள்கள் பலரின் இருக்கைநிலை இவ்வாசனமே ஆகும். இதன் மூலம் இந்து மதத்திற்கும் யோகாசனத்திற்கும் உள்ள தொடர்பை அறிந்து கொள்ளலாம்.

சூரியநமஸ்காரம் ஒருசிறப்பான ஆசனம் ஆகும். இவ்வாசனம் முழு உடலிற்கும் பயிற்சியாக அமைகிறது. மற்றும் அனைவரும் செய்யக் கூடிய இலகுவான ஆசனமாகவும் இது விளங்குகிறது. இவ்வாசனம் கால்வலி, கைவலி, முதுகுப்புற வலி போன்றவற்றிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவாரணியாகவும் விளங்குகிறது. மேலும் இவ்வாசனம் உடலின் உள்ளுறுப்புகளுக்கும் பயிற்சியாக அமைகிறது.

உலகலாவிய ரீதியில் யோகாசனமானது தற்போது பெரும்பாலான நாடுகளில் பிரசித்திப்பெற்று விளங்குகிறது. குழந்தைகள் முதல் முதியோர் வரை வயது வேறுபாடின்றி அனைவராலும் யோகாசனம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குறிப்பாக சீனா, ஜப்பான், ரசியா, அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளில் உள்ளவர்கள் இப்பயிற்சியில் அதிகமாக ஈடுபடுகின்றனர். இன்று பலநாடுகளின் பாடசாலைகளில் யோகாசனம் ஒரு பாடமாகவும் மேற்கொள்ளப்படுகின்றது.

எனவே தினமும் குறைந்தது 20 நிமிடமாவது யோகாப் பயிற்சியை செய்வதன் மூலம் அழகு, உடல்வலிமை, மன அடக்கம், மனநிம்மதி போன்ற நல்லகுண அம்சங்களைப் பெற்றுக் கொள்வதுடன் எம்மை ஒரு பூரணமனிதனாக மாற்றிக் கொள்வோம்.

---



வேள்வித் தீயில் நெய் முதலியன போடும் போது ஸ்வாகா என்ற மந்திரத்தை சொல்லை நாம் கேட்டிருக்கிறோம். சரி யார் அந்த ஸ்வாகா, அக்கினி தேவனின் மனைவி பெயர் தான் ஸ்வாகா. வேள்வியில் ஸ்வாகா தேவி இல்லாவிடில் வேள்வியில் போடப்படும் உணவை தேவர்கள் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். அதனால்தான் வேள்வியின் போது ஸ்வாகாவுடன் கூடிய மந்திரம் சொல்லப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளி

மகரன்
இறுதி வருடம்,
விவசாய பீடம்.

இந்துக்களுக்கு மட்டுமன்றி பிற மதத்தவர்களுக்கும் கூட நன்கு பரீட்சயமானவர் சனீஸ்வர பகவான். இவரை ஓர் அசுபக் கிரகமாக இந்து சமயம் கூறினாலும் "சனியைப் போல் கெடுப்பவரும் இல்லை கொடுப்பவரும் இல்லை" என்ற பழமொழி பல தடவைகள் நிரூபணமாகியுள்ளது. கஷ்டங்களே இல்லாத வாழ்க்கை எவ்வளவு சலிப்பானது என்பதுவும் கஷ்டங்கள் இல்லாவிடின் சாதனைகள், வெற்றிகள் ஏது? என்பதுவும் நாம் அனைவரும் அறிந்த உண்மை. அத்துடன் இவர் இவ்வாறு கஷ்டங்கள் கொடுப்பதுவும் நீதியானதும் நியாயமானதும் எம்மை நெறிப்படுத்துவதற்கு தான் என்பதும் சான்றோர் வாதம். இங்கு சனீஸ்வரபகவானைப் பற்றிய பொது விடயங்கள் சிலவற்றை ஆராய்வோம்.

புராண வரலாற்றை நோக்குவோமானால், சூரியனுக்கும் சூரியனின் இரண்டாவது மனைவியான சாயா தேவிக்கும் பிறந்தவரே சனிபகவான் ஆவார். சூரியனின் வெப்பம் தாளாமல் சூரியனை பிரிந்து சில காலம் இருக்க நேர்ந்த அவரின் முதல் மனைவி தன் நிழலையே ஓர் பெண்ணாக தன்னைப் போன்று மாற்றிவிட்டு சூரியனுக்கு தெரியாமல் அவரை விட்டு அகலவே நிழல் உருவம் ஆகையால் சாயா தேவி என பெயர் வந்தது. இது சூரியனின் முதல் மனைவியின் மகனாகிய எமதர்ம ராஜனுக்கு தெரிந்து அவருக்கும் சனிஸ்வர பகவானுக்கும் இடையே ஏற்பட்ட "சுயமரியாதை பிரச்சினையால் பாதிக்கப்பட்ட சனிஸ்வர பகவான் சிவபெருமானை நோக்கி தவம் இருந்து" உலகில் உள்ள அனைவருமே என்னை நினைத்து நடுங்க வேண்டும்" என்ற வகையிலான பதவி அதாவது நவகிரகங்களுக்குள்ளேயே ஈஸ்வர பட்டமும் பெற்றார். கால தேவனாகிய எமதர்ம ராஜனுக்கு காரியதரிசியாக இருப்பதும் சனிஸ்வரன்தான்.

சூரியனை சுற்றி வருவதற்கு ஏறத்தாழ முப்பது வருடங்களை எடுத்துக் கொள்ளும் சனிஸ்வர பகவான் ஜாதங்களின் படி ஓர் இராசியை கடப்பதற்கு இரண்டரை வருடங்கள் எடுத்துக் கொள்கின்றார். இதனாலேயே ஒருவருடைய வாழ்க்கையில் முப்பது வருடங்களுக்கு ஒரு முறை **ஏழரை சனி** என்ற வகையில் இரண்டரை ,இரண்டரை வருடங்களாக மூன்று இராசிகளை அவர் கடக்கின்றார். ஏழரை சனிக் காலத்தில் ஒருவரின் சந்திர இராசிக்கு முதல் உள்ள இராசி இரண்டரை வருடங்களும் (அது விரையச்சனி எனப்படும்) அந்த சந்திர இராசியில் இரண்டரை வருடங்களும் (இது ஜென்ம சனி எனப்படும்) அந்த **சந்திர இராசிக்கு** அடுத்த இராசியில் இரண்டரை வருடங்களும் (இது பாதக சனி எனப்படும்) நீடித்திருப்பார். ஒரு மனிதனின் முற்று முழுதான ஆயுட்காலம் 120 வருடங்களாகும் என வரையறுக்கும் இந்து மதம் இக்காலப்பகுதியை முப்பது முப்பது வருடங்களாக சுருக்குமிடத்து ஒருவரின் வாழ்க்கையில் மூன்று தடைவைகளுக்கு மேல் அந்த ஏழரை சனிக்காலம் வராது என கூறுகிறது. முதலாவது ஏழரைச்சனி காலம் மங்கு சனி இரண்டாவது ஏழரைச்சனி காலம் பொங்கு சனி மூன்றாவது ஏழரைச்சனி காலம் அந்திம காலச்சனி எனவும் கூறப்படும். மங்கு சனியானது பொருள், புகழ் மங்கச் செய்தும், பொங்கு சனியானது பொருள் புகழ் பெருகச் செய்தும் அந்நிய காலச் சனி முடிவில் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதகக்காரர் மரணமடைவதும் பொதுவானது. சிலர் அந்திம காலச் சனிக்காலத்தையும் கடந்து வந்தாலும் மிக அரிதாகவே அதுவும் 120 வருடங்களுக்குள்ளேயே அவரின் சாதகத்தின் மாகாதிபதி (மரணத்துக்கான கிரகம்) மூலம் மரணமடைவதையும் காண்கிறோம்.

சனீஸ்வர பகவான் எமதர்ம ராஜனால் அல்லது இராவணனால் தாக்கப்பட்டு தமது ஒரு காலை இழந்து (முடமாகிய நிலை) உள்ளமையாலேயே மிகவும் மெதுவாக நகரும் கிரகமானார். என்று புராணம் கூறுகின்றது. "இந்திரஜீத்" பிறப்பதற்கு சில நாளிகைகளுக்கு முன்னர் இராவணன் தனது கட்டளைப்படி அனைத்து நவ கிரகங்களையும் இந்திர ஜீத்தின் சாதகத்தில் பதினோராவது கட்டமாகிய வெற்றி ஸ்தானத்தில் நிறுத்தி வைத்ததாகவும் அப்படி ஒருவர் பிறந்தால் அவரை எவரும் வெல்ல முடியாது என்ற நாரதரின் கூற்றுப்படி உலக நன்மைக்காக சனீஸ்வர பகவான் தனது வலது காலை இந்திர ஜீத் பிறக்கும் நேரத்தில் அவனது சாதக கட்டத்தில் பன்னிரெண்டாவது கட்டத்தில் (மாரகஸ்தானம் மரண கட்டம்) வைத்ததாகவும் அதனால் ஆத்திரமுற்ற இராவணன் சனீஸ்வரனின் வலது காலை முடமாக்கியதாகவும் புராணங்கள் கூறுகின்றன. இராவணன் தனது அரச சபை படிக்கட்டுக்களாக குப்புர படுத்த நிலையில் நவக்கிரகங்களை பாவித்ததாகவும் "முதுகில் மிதிக்காமல் நெஞ்சில் மிதிப்பவனே வீரன்" என்று நாரதர் கூறவே அனைத்து நவக்கிரகங்களையும் மல்லாந்து கிடக்க கட்டளையிட்ட இராவணன் சனிபகவானின் நெஞ்சில் கால் வைத்து ஏறுகையில் சனிபகவானின பார்வை பட்டதினாலேயே அவனின் நாசம் ஆரம்பமாகியதாகவும் கதைகள் உள்ளன.

அனைவரையும் வேறுபாடு இன்றி பீடிக்கும் சனி பகவான் அவரின் ஆதிக்க காலம் முடிந்தவுடன் அந்த சாதகக்காரர் பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் விமோசனமாக பாரியதொரு வெகுமானத்தையும் கொடுத்து செல்வதையும் காணலாம். எவ்வளவு பெரிய உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவர்களையும் மிக, மிக இழிவான நிலைக்கு தாழ்த்துவது அதன் மூலம் உலக வாழ்க்கை-ஞானம்-யதார்த்தத்தை புரிய வைப்பதும் இவரின் வேலையாகும். கிருஷ்ணர் மீது சுமத்தப்பட்ட **"சியமந்தக மணி"** அபகரித்த வீண்பழி, விக்கிரமாதித்த மகாராஜன் வேறொரு அரசனுக்கு சேவை செய்ய வேண்டி வந்தமை. நளன் தமயந்தி தம்பதியினர் பட்ட கஷ்டங்கள், சத்தியவானின் உயிரை யமதர்ம ராஜன் சாவித்திரிக்கு மீளக்கொடுத்த நேரத்தில் சனிபகவானின் பார்வை யமதர்மராஜனையே விட்டு வைக்காமை, என்பன இவரின் விளையாட்டுக்களுக்கு உதாரணங்களாகும்.

ஏழரைச்சனி என்பதை விட அசஷ்டமத்துச்சனி, அர்த்தஷ்டம சனி என பலவகையாக பீடிக்கும் காலங்கள் உள்ளன. ஜோதிட நூல்களை ஆராய்ந்தால் விளக்கம் பெறலாம். அஷ்டமத்துச்சனி என்பது சந்திர ராசிக்கு எட்டாவது வீட்டில் (ஜாகத்தில்) இரண்டரை வருடங்கள் மட்டுமே சனிப்பகவான் சஞ்சரிக்கும் காலமாகும். இதுவும் அதிகளவு கஷ்டங்களையே தரக்கூடியது. அதாவது எடுத்த காரியம் எதுவும் தடைப்படுதலும் மனவிரக்தியும் வேதனைகளுமே எதிர்பார்க்கப்படலாம். வீண் பழி முதலாக, அந்த ஜாதக காரரைத் தேடிவரும் பல பிரச்சினைகளும் ஏற்படலாம். "அசஷ்டமத்துச்சனி" காலம் முடிவடைந்த ஒரு ஜாதகக்காரர் ஒரு ஞானியைப் போல எதையுமே ஏற்றுக் கொள்ளும் பக்குவ நிலைக்கு வருவார் என ஜோதிடர்கள் கூறுகின்றனர்.

"சனிப்பெயர்ச்சி" "சனிமாற்றம்" என்றெல்லாம் மக்கள் பதறுவதையும் பலன் பார்ப்பதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்கிறோம். நிச்சயமாக அந்த இரண்டரை ஆண்டு இடைவெளியில் ஒரு தனி மனித வாழ்விலும் சரி, தேசிய மட்டத்திலும் சரி , உலக அரங்கிலும் சரி ஓர் பாரிய மாற்றம் அதுவே ஓர் குறிப்பிடத்தக்க அளவு மாற்றம் ஏற்படுவதும் கண்கூடானது.

சனி பகவான் ஒரு ராசியிற்கு வருவதற்கு முன்னரே அந்த ராசிக்காரர்களுக்கு "பலன்" காட்டத்துவங்கி விடுவார். என்பதையும், ஒரு ராசியை விட்டு மாறிய பின்னரும் அந்த ராசிகாரரக்கு சில "கெடுபலன்கள்" நேரலாம் என்பதையும் ஜோதிடம் கூறுகிறது. இதையே தான் "சனிவக்கிரமாதல்" எனப்படுகிறது.

சனி பகவானின் ஆட்சி வீடுகளாக(ராசிகளாக) மகரம் மற்றும் கும்பராசிகளும் , உச்ச வீடாக(சொந்த வீடாக) துலாம்ராசியும் நீச(பகை) வீடாக "மேஷு" ராசியும் இருக்கின்றன. நட்பு ராசிகளாக ரிஷபம் மற்றும் மிதுன ராசிகளும் பகை ராசிகளாக கடகம், சிம்மம்.மற்றும் விருச்சிகம் ராசிகளும் இருக்கின்றன. கடந்த நவம்பர் மாதம் 15 ஆம் திகதி திருக் கணித பஞ்சாங்க படியும் 21 ஆம் திகதி வாக்கிய பஞ்சாங்க படியும் துலா ராசியினுள் பிரவேசித்திருக்கும் சனி பகவான், எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு யூலை மாதமளவில் துலாராசியிலுருந்து விருச்சிக ராசிக்கு பெயர்ச்சியாவார் என்று ஜோதிடர்கள் கூறுகின்றனர்.

இக்காலப்பகுதியில் "நீதியை" குறிக்கும் துலா ராசியில் நிற்கும் சனிபகவானால், இதுவரைக்கும் அநியாயங்கள் நிகழ்த்தியோருக்கு தண்டனைகள் வழங்கப்படும் எனவும் "நீதி" உலகில் நிலைநாட்டப்படும் எனவும் ஜோதிடர்கள் கூறுகின்றனர்.

சுருக்கமாக இவரைப் பற்றி சொல்வதென்றால் "துவைக்க வேண்டிய துணியை அடித்து துவைத்த பிழிந்து, காயவைத்து, இஸ்திரி போட்டு, மடித்து, அலுமாரியில் வைத்துவிட்டு போய்விடுவார்". இந்த சனீஸ்வர பகவான் துவைக்காத துணியை விட, அலுமாரியில் உள்ள துணிக்குத்தானே மதிப்பு அதிகம்? ஒரு கல்லை உளி கொண்டு செதுக்கி அழகிய சிற்பமாக்குவதற்கு அந்த கல், அந்த உளியால் எவ்வளவு அடிவாங்க வேண்டியிருக்கிறது எனச் சிந்திக்கவும். இவர் அந்த உளியைப் போன்றவர் என்பதுதான் சான்றோர்களின் வாதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் அருளிய தமிழ் மந்திரம்

ரசிதா புவனேந்திரன்
இரண்டாம் வருடம்
கலைப்பீடம், பேராதனை பல்கலைக்கழகம்.

"நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என மந்திரத்தின் இலக்கணம் பற்றி தொல்காப்பியர் கூறியுள்ளார். அதாவது எல்லாப் பண்புகளும் நிறைந்து மொழிய வல்ல பெருமக்கள் ஆணையிட்டுக் கூறிய வாய்மொழிகள் யாவும் மந்திரமாகும். இவ்வகையில் தமிழ் மந்திரம் எனவும் தமிழ் ஆகமம் எனவும் புகழ்ந்துரைக்கப்படும். திருமந்திரம் வேதத்தின் பிரிவு என்பது நம்பியாண்டார் நம்பிகளின் கருத்து.

திருமந்திரத்தை அருளிச் செய்த திருமூலர் நந்தியெம் பெருமாள் திருவருள் பெற்ற நான்கு மறைகளை அறிந்த யோகியருள் ஒருவர். எண்வகைச் சித்திகள் கைவரப் பெற்றவர். இவர் பொதிகை மலையிலுள்ள அகத்திய முனிவருடன் சில நாட்கள் தங்குவதற்கு கயிலையினின்று புறப்பட்டு பல சிவத்தலங்களையும் வழிப்பட்டு பின் திருவாவடுதுறையை அடைந்து அங்கிருந்து நீங்கிச் செல்கின்ற வழியிலே காவிரியாற்றின் கண்ணே பசுக்கூட்டங்கள் புலம்புவதைக் கண்டு இரங்கி சாத்தனூர்ப் பசுக்களை மேய்த்தவன் உடலில் புகுந்து

"என்னை இறைவன் படைத்தனன
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே"

எனவுணர்ந்து மீண்டும் திருவாவடுதுறையை அடைந்து தியாகேசப் பெருமானை வணங்கி வெளியே மேற்கு திசையில் அரசமரத்தடியில் இறைவனைத் தன் உள்ளக் கமலத்தில் கொண்டு சிவயோக நிலையில் அமர்ந்திருந்து ஆண்டுக்கு ஒரு மந்திரமாக மூவாயிரம் மந்திரங்கள்அடங்கிய திருமந்திரத்தை அருளிச்செய்தார். "மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழாகிய திருமந்திரம்" பத்தாம் திருமுறையில் அடங்குவது. இந்த நூல் நூற்பாயிரம் எனும் தனிப்பகுதியினையும், ஒன்பது பிரிவுகளையும் கொண்டது. தந்திரம் என்பது ஆகமமாகும். எனவே ஒன்பது ஆகமங்களின் கருத்து திருமந்திரத்தில் உள்ளது எனலாம்.

"நலம் நிறைந்த ஞான யோகக் கிரியா சரியா எலாம் மலர்ந்த
மொழித் திருமூலத் தேவர்" எனலாம்.

"உணர்வை ஞானம் முதலிய
ஒரு நொன்குண்மை தெள்ளு"

தீந்தமிழாய் கூறும் திருமூலர்" எனச் சேக்கிழாரும் போற்றியுள்ளார் கடவுள் வாழ்த்தோடு தொடங்கும் திருமந்திர பாயிரமானது தமிழின் சிறப்பு, மெய்ஞானத் தவிப்பு, மெய்ஞானத் தாகம், மெய்ஞான ஏக்கம், மெய்ஞானத் துடிப்பு என்பவை பரம்பொருளை பரிபூரணமாக உணரப் பிரதானமானவை. இறைவனிடம் முழுமையான ஞானம், அன்பு, கருணை ,அருள் அகியவற்றை மட்டும் வேண்டுங்கள். எல்லாவகையான சித்துக்களும் பேய்க்கும், பிசாசுக்கும் ஒப்பானவை, இவற்றை மறந்தும் ஒரு பொழுதும் நாடாதீர்கள். அக வழிபாடு புறவழிபாடு இரண்டையும் தவறாது செய்யுங்கள். ஒழுக்கத்தை அகப்புற துய்மையைஉயிரிலும் மேலாகப் பேணுங்கள் என பலவற்றை கூறுகிறது. மேலும் சிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையை உயிரிலும் மேலாக பேணுங்கள் என பலவற்றைக் கூறுகிறது. மேலும் சிவம் ஆகிய பரம்பொருளுக்கு ஒப்பான தெய்வம் இல்லவே இல்லை என்கிறது திருமந்திரம்,

"சிவன் ஒடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவன் ஒடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை"

திருமந்திரம் முதல் தந்திரத்தில் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் பலவும் கூறப்பட்டுள்ளன. யாக்கை, செல்வம், இளமை, உயிர் என்பவற்றின் நிலையாமை, கொல்லாமை, பிறன்மனை நயவாமை, கள்ளுண்ணாமை, அன்புடைமை என்பவற்றையும் கூறியுள்ளது. உதாரணமாக

"அட ப் பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மட க்கொடி யாரொடும் மந்தணம் கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிட ந்து ஒழிந்தாரே"

எனும் பாடல் யாக்கை நிலையாமையை கூறுகிறது.

தனது உடம்பின் என்பினை விறகாக்கி சதையை இறைச்சியாக அறுத்தால் தான் என்ன பின்னர் அதனை நெருப்பிலே இட்டு பொன் போல் வறுத்தால் என்ன ஆத்மார்த்த இதய அன்போடு வழிபடுவோரால் தான் இறைவனை அடைய முடியும். வேறெந்த வழிகளாலும் அவனை உணரவே முடியாதென்பதை,

"என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடு உருகி அகம் குழைவார்க்கு அன்றி
என்பொன் மணியை எய்த ஒண்ணதே"

எனும் திருமந்திரப் பாடல் கூறுகிறது.

திருமந்திரத்தின் இரண்டாம் தந்திரம் சில புராண வரலாற்று குறிப்புக்களையும், கரு எப்படி உண்டாகிறது, இறைவனின் ஐந்தொழில் பற்றியும் பேசுகிறது. இறைவன் முப்புரங்களையும் எரித்த செயல் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களை அழித்தமையே என்கிறார்.

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புறம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரம் ஆவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யார் அறிவாரே"

மேலும் குரு நிந்தனை செய்வோர் நாயாய்ப்பிறந்து ஒரு யுக காலமாய்ச் சுழல்வார்கள். பின் இறுதியாய்க் கிருமியாய் மண்ணிலே மாய்ந்து போவார்கள்.

"ஓர் எழுத்து ஒரு பொருள் உணரக் கூறிய
சீர் எழுத்தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊர் இடைச் சுணங்கனாய்ப் பிறந்து அங்கு ஓர் உகம்
வார் இடைக் கிரிமியாய மாய்வர் மண்ணிலே"

எனும் பாடல் மூலம் உணர்த்துகிறார்.

மூன்றாம் தந்திரம் அட்டமா சித்தி, அட்டாங்க யோகம், பிரணாயாமம், ஆயுள் பரீட்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன பற்றியும், நான்காம் தந்திரம் பல சக்கர அமைப்புக்கள், வயிரவி மந்திரம், மந்திரங்களுக்கான மார்க்கம், பற்றியும் ஐந்தாம் தந்திரம் சரியை, கிரியை, யோகம், ஞானம், நால்வகை மார்க்கங்கள், நால்வகை முத்தி நிலைகள் பற்றியும் பேசுகின்றது.

ஆறாவது தந்திரத்தில் சீடனது இலக்கணம், சிவவேடம், அவவேடம், தவ வேடம், திருநீற்று மாண்பு, துறவு பற்றிய செய்திகளையும், ஏழாம் தந்திரத்தில் அடியார் பெருமை, சற்குருவாக அமையாதவர், ஆன்மாவின் இலக்கணம், அடியாருக்கு அன்னமிடலின் சிறப்பு,குரு பூசை விதிப் பற்றியும், எட்டாம் தந்திரம் பதி, பசு, பாச விளக்கம், முக்குற்றம், முக்கரணம், வாய்மை, பக்திபற்றியும் ஒன்பதாம் தந்திரமானது அதி சூக்கும் பஞ்சாட்சரம், சிவதரிசனம், சிவ சொரூபம் முதலிய பல விடயங்களையும் விளக்கும் வகையில் அமைந்துள்ளது.

இவ்வகையில் திருமந்திரமானது சைவ சித்தாந்த, வேதாந்த தத்துவக் கருத்துக்களை கூறும் சமய நூலாக மட்டுமன்றி சிறந்த வாழ்வியல் வழிகாட்டியாவும் இன்றும் திகழ்கின்றது.

"திருமந்திரமே சிவகதிக்கு வித்தாம்
திருமந்திரமே சிவமாம்-அருமந்த
புந்திக் குளேநினைந்து போற்றும் அடியார் தமக்கு
சந்திக்கும் தற்பரமெ தான்"

---

விநாயகப் பெருமானுக்கு கீழ்வரும் இலைகளைக் கொண்டு அர்ச்சனை செய்தால் பின்வரும் பலன்கள் கிடைக்கும் என்பர்



| | |
|---|---|
| 1. மருத இலை | - மகப்பேறு |
| 2. மருவு | - துன்பம் நீங்குதல் |
| 3. எருக்க இலை | - குடும்பத்தில் கர்ப்பராட்சை |
| 4 . ஊமத்தை இலை | - பெருந்தன்மை |
| 5. அரச இலை | - எதிர் வாக்கு அடங்குதல் |
| 6. அகத்தி இலை | - துயரம் தீருதல் |
| 7. இலந்தை | - கல்வி |
| 8. அரளி இலை | - அன்பு |
| 9. தாழை இலை | - கோபம் நீங்குதல் |
| 10. கண்டங் கத்திரி இலை | - இலட்சுமி கடாட்சம் |
| 11. கரிசலாங்கண்ணி இலை | - செல்வம் பெருகுதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளில் சமய வாழ்க்கை

**சரணியா சுப்ரமணியம்**
3ம் வருடம்
கலைப்பீடம், பேராதனை பல்கலைக்கழகம்.

இல்லறத்தினூடாக ஒரு பார்வை

உலகம் என்று குறிப்பிடும் பொழுது, உலகில் வாழும் எல்லா உயிரினங்களை குறிப்பிட்ட போதிலும் அவற்றில் சிறப்பாக சுட்டிக்காட்டப்படுவது ஆறு அறிவைப் பெற்ற மானிட உயிர்களைத்தான். அந்த வகையில் பெரியோர்களால் போற்றி பாதுகாத்து வளர்க்கப்பட்ட மரபுகளை மதித்து வாழ்க்கையை வளமாக அமைத்துக் கொள்வதில் மனிதனுக்கு நிகர் மனிதனே. தன்னுடைய வாழ்க்கை நல்லமுறையில் அமைந்து மற்றவர்களுக்கும் பயன்படும் அளவுக்கு வாழ்வதே வாழ்க்கையின் புகழும் பெருமையுமாகும். இவ்வுண்மையை மிகவும் தெளிவாகச் சுட்டிக்காட்டி அறிவுறுத்திய அரிய பொக்கிஷமே எமது வள்ளுவப் பெருந்தகையாவார்.

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று."

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறலுக்கேற்ப தான் பிறந்த புகழைடைந்தார். இவ்வாறு புகழுடன் வாழ்வதே மனித வாழ்க்கையின் தலைசிறந்த பண்பாகும். அதற்கு உறுதுணையாக அமைந்துள்ளது மனிதனின் சிந்தனையே: மனிதன் என்றாலே தானாக சிந்திப்பவன் என்று பொருளாகும். செம்மையான சிந்தனையை கொண்டுதான் தன்னுடைய வாழ்வை உயர்த்துவதோடு அல்லாமல் மற்றவர்களுக்கும் வழிகாட்டியாக அமைந்து சேவை செய்ய முடியும். அந்த வகையில் அன்பை அடிப்படையாக கொண்டு அந்நெறியில் அமைந்த இல்லறவாழ்க்கை, சமய வாழ்விற்கு முதற்படியாகும் என்னும் கருத்து முதன்மையானது. வாழ்க்கை என்று கூறுவதை பொதுவாகவும் , இல்லறவாழ்க்கை என்று கூறுவதை சிறப்பாகவும் சுட்டிக்காட்டலாம்.

எனவே அச்சிறப்பினை எடுத்துக்காட்டுவதற்கு சில நெறிமுறைகளும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அந்நெறிமுறைகள் மேலும் வளர்ச்சியடைந்து, சீர்மையாகச் செழித்து வளமான வாழ்வைத் தருவதே சமயவாழ்வு ஆகும். அவ்வாறான தீவிர கோட்பாடுகளோடு சமயவாழ்வைப் பின்பற்றும் நிலையில்தான் இறைவனின் தன்மையை உண்மையாக உணரமுடியும் என்பது திருக்குறளில் வலியுறுத்தப்பட்டுள்ளது. சமய வாழ்வில் ஒழுக்கம் என்பது இன்றியமையாததாகும். இந்து சமயங்கள் எல்லாவற்றிற்கும் பொதுவான அறநெறிகள் மனுதர்மசாத்திரத்திலும், இராமயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. எனினும் சைவ சமயத்தில் ஒழுக்க நெறிகள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, ஒழிவிலொடுக்கம் முதலிய நூல்கள் முதன்மை பெறினும் சமயநெறிகளைப் பின்பற்றுவதற்கு முதற்படியாகவுள்ளது இல்லற தருமமே என்பதைச் சுட்டிக்காட்டியது வள்ளுவர் அருளிய திருக்குறளே என்றால் அது மிகையாகாது. இல்லற தருமத்தை கட்டிக் காப்பாற்றும் கடமைப் பொறுப்புடன், அவற்றிற்கு தேவையான அறநெறிகளைச் சுருக்கமாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறிய சான்றோர்களுள் திருவள்ளுவரையும், ஔவையாரையும் உதாரணமாக கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையில் வள்ளுவப் பெருந்தகையின் இல்லறக் கருத்தைப் புலப்படுத்தும் குறட்பாக்களை பார்க்கின்ற வேளை அங்கு சமயவாழ்க்கையின் கருத்துக்கள் பொதிந்துள்ளமையினை நாம் அவதானிக்கலாம். அந்தவகையில் இங்கு சில குறட்பாக்கள் எடுத்துக்காட்டப்படுவதை இனி நோக்குவோம். இதன் அடிப்படையில் அன்பும் அறமும் செம்மையான முறையில் இணைந்து செயல்படும்பொழுது தான் உள்ளத்தில் ஒளி ஏற்படும். அவ்வொளியில் தான் இறையுண்மையை காண முடியும். அதனால்தான் இல்லறத் தருமத்தை ஏத்திக் கூறிய திருவள்ளுவர் அன்பையும், அறத்தையும் இல்லறத்தை தாங்கும் இரு தூண்களாக அமைத்துள்ளார். சமய வாழ்க்கையை பிரதிபலிக்கும் இக்குறட்பாவானது பின்வருமாறு அமைகிறது.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

அடுத்து சமய வாழ்வுக்குத் தேவையான கருத்தாக உயர்ந்த எண்ணங்களை அமைத்தல் அவற்றை செயலாக்க முனைய வேண்டும். வெற்றிக் காணாவிட்டாலும், உயர்ந்த எண்ணங்கள் நிச்சயமாக உயர்வையே ஏற்படுத்தும். என்ற கருத்தினை வழியுறுத்தும் ஒரு குறட்பாவாக பின்வரும் குறள் அமைந்துள்ளது எனலாம்.
அதாவது

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து"
என அமைந்துள்ளது.

அடுத்து அன்பின் அடிப்படையில் ஆணும் பெண்ணும் வாழ்வதே மனித வாழ்வை நல்வாழ்வாக அமைப்பதாகும். அதுவே வாழ்வின் சிறப்பம்சமாகும். இதனையே ஒரு பாடலாசிரியர் "இரண்டு வரிகளில் திருக்குறள் அமைந்திட காரணம் இருக்கிறது: கணவன் ஒருவரி மனைவி ஒருவரி அர்த்தம் கிடைக்கிறத". எனவும் அழகாக குறலுக்கு விளக்கம் தந்துள்ளார்.

"அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச்சிறப்பு"

என்ற குறளைப் பார்ப்போமானால் மனித வாழ்வுக்கு அடிப்படைத்தளமாக அன்பு அமைய வேண்டியதன் அவசியமும், அது ஒருவருக்கு மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கும் பயன்பட்டு அதன் நற்பயன் எல்லோரிடத்திலும் நட்பு ஏற்படுத்தி சிறப்பினையும் உண்டாக்கும் என்ற கருத்தை சுட்டியுள்ளது.

மேலும் உலகத்தில் இன்புற்று வாழ்கின்றவர்கள் அடையும் சிறப்பு, அன்புடையவர்களுக்கு இணைந்து வாழும் வாழ்க்கையின் பலனே என்ற கருத்தை

"அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் குறள் மனித வாழ்வு நல்வாழ்வாக மாறி ஆணும் பெண்ணும் இணைந்த இல்லறத்தில் வாழ்வதையும் இவ்வாறு இல்லறத்தின் பெருமையற்றவர்களுக்கும் வழிகாட்டி அன்பின் அடிப்படையில் அமைந்த இல்லறம் நல்லறமாகப் பூத்துக் குலுங்கும் என்றும் அதன்போது மக்கட்பேறு உண்டாகிறது என்பதை பின்வரும் குறள் மூலம் அழகாக எடுத்துக் கூறியுள்ளார். இதனை

"மங்களம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

என்ற குறள் மூலம் இவ்வாழ்வு புலப்படுமாற்றை அவதானிக்கலாம்.

மனித வாழ்வுக்கு பொருளும் இன்பமும் இன்றியமையாதவாயினும் அவையிரண்டும் அறத்தின் அடிப்படையில் இயங்கும் போதுதான் சமய வாழ்வு நல்வாழ்வாக மலருகிறது. அறவாழ்வும் சமயவாழ்வும் இருவகைப்படுவன அல்லவென்பதை பண்டைத்தமிழ் மக்களின் கொள்கையாம் என்பதற்குச் சங்க இலக்கியங்கள் சான்று தருகின்றன. பண்டைக்கால மரபுகள் அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு பயன்பட்டன என்பதையே திருவள்ளுவரும் எடுத்துக் கூறுகிறார்.

நதிகள் பல இடங்களில் தோன்றிப் பலவாறு பயணம் செய்தாலும் அவை யாவும் முடிவில் சென்றடைவது ஒரே இடம் கடல். அதனைப்போன்றே மனித வாழ்வும் அமைந்துள்ளது. துறவறத்திற்கும் இடமளித்த வள்ளுவர்

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவது எவன்,"

என்ற குறலினூடாக இல்லறம் நல்லறமாக அமைவது, அறத்தை அடிப்படையாக அமைத்துக் கொள்வதால் ஆகும். என்பதையும் வலியுறுத்துகிறார். திருவள்ளுவர் இல்லறத்திற்கு முதலிடம் கொடுத்தமைக்கு முக்கிய காரணமாக தாய், தந்தை குழந்தை மற்றும் சுற்றம் உறவினர் ஆகியோரும் கூடி மகிழ்ந்து இல்லறச் சூழ்நிலையில் தான் எனவும் இல்லறம் ஓர் ஒளிப்பொருந்திய விளக்கென்றும் அதன் வெளிச்சம் இங்கு வாழ்பவர்களுக்கு மட்டுமல்லாமல், மற்றும் பலருக்கும் பயனளிக்கின்றது என்ற உண்மையானது வள்ளுவரின்

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவருக்கும்
நட்யாற்றின் நின்ற துணை"

என்ற குறள் மூலம் சுட்டிக்காட்டப்படுகிறது. ஒரு தனிமனிதனின் வாழ்க்கையை எடுத்துக் கொள்வோமாகில் பருவங்களுடன் இணைந்து இல்லற இன்பங்களை பெறுவதுடன் அவர்கள் நின்றுவிடவில்லை. இல்லற இன்பத்தில் குறுகிய எல்லையை உணர்ந்த பின்பு எல்லையற்ற பேரின்பத்தைப் பெறுவதிலேயே நோக்கம் கொண்டிருந்தனர். அத்தகைய பேரின்ப வாழ்வைத் தேடும் உத்தமர்களுக்கும் உதவி புரிவதற்கு இல்லற தருமம் தான் சிறந்தது என்ற கருத்தினை திருக்குறலுக்கு விளக்கவுரையளித்த பரிமேழலகரும் மேற்குறிப்பிட்ட கருத்தினையே ஆதரித்துள்ளார். திருவள்ளுவரின் இக்கருத்தினை வலியுறுத்தம் குறளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"துறந்தார்க்கும் தவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"

என்ற குறள் அமைகிறது. இவ்வாறு தமிழர்களுடைய வாழ்க்கையையே சமய வாழ்வாகத் திகழ்ந்தது என்று கூறுவோமாகில் அதற்கு அடிப்படையாக அமைந்திருந்த கருத்துக்கள் அனைத்தும் அறக்கட்டளைகளே அதாவது திருக்குறள் கூறும் அறக்கருத்துக்களும் அவற்றுள் உள்ளடங்கும் என்றால் அது மிகையாகாது. அந்தவகையில் தீயன கலைதலும் , நல்லன புகுதலும் செய்தல் அறச் செயல்களாகும். என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் எமக்கு எடுத்துக் கூறிய உண்மை என்பதை இத்தால் நினைவு கூறலாம்.

அறநெறிகளை அயராது பின்பற்றி வாழ்வதே இல்லறம். இல்லற வாழ்வும் சமய வாழ்வும் வெவ்வேறல்ல. இவையிரண்டும் இணைந்தே பண்டைத் தமிழரின் பண்பாக அமைந்துள்ளது என்பது முன்பே கூறப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் தான் இல்லற வாழ்வும் சமய வாழ்வும் ஒன்றாகிவிடுகின்றன. ஏனெனில் தனக்காக மட்டுமல்லாது, பிறருக்காகவும் நற்காரியங்கள் செய்யமுடிவது இல்லறத்தில் இயங்கும் பொழுதுதான் பிறருக்கு உதவுவதும், நன்மை செய்வதும் இறைப்பணியாகவே கருதினர். இந்த உண்மையை உணர்த்துவதே கல்வியின் நோக்கமாகும். என்ற கருத்தினை வலியுறுத்தும் குறட்பாவாக

"கற்றதனாலய பயனென் கொல் வாலரியான்
நற்றார் தொழாஅர் எனின்"

எனும் குறள் அமைகிறது. இந்த வகையில் பார்க்கின்ற போது எவ்வளவு கற்றும் அதனால் அறிவைப் பெற்றிருந்த போதிலும் எல்லாவற்றையும் அறிந்த இறைவனின் திருவடிகளை தொழவில்லையானால் என்ன பயன் ஏற்படும்? என்று வினாவை எழுப்பி நம் சிந்தையை தூண்டிவிடுகிறார் இங்கு திருவள்ளுவர், அடுத்து கல்வி கற்று அறிவைப் பெறுவதும் அதனை வளர்ப்பதும் நற்காரியங்களைப் புரிந்து தனக்கும் பிறருக்கும் நன்மை உண்டாக்குவதே முக்கியம் என்றும் அவை யாவற்றுக்கும் மேலாகவுள்ள இறைவனுக்கு பணிந்து , எல்லா நற்காரியங்களையும் செய்தலே சமயவாழ்வின் மிகச்சிறப்புடையதாகும். அவ்வித சிறப்பான செயலால் ஏற்படும் இன்பமே சமய வாழ்க்கையில் பேரின்பம் என்றும் , பிறப்பு , இறப்பு எனும் சுழற்சியை ஒரு கடலுக்கு ஒப்பிட்டு கூறி அவற்றிலிருந்து விடுதலைப் பெறுவதே பேரின்பம், இதற்கு உறுதுணையாக உள்ளது அறக்கடலாக விளங்கும் இறைவன் திருவடி என்பதாகும். இக்கருத்தை புலப்படுத்தி நிற்கும் குறட்பாவானது,

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது"

என அமைந்துள்ளது.

இந்தவகையில் ஒட்டு மொத்தமாக பார்க்கின்றவேளை வள்ளுவரின் குறட்பாக்களில் இல்லற வாழ்வை அடிப்படையாக கொண்ட குறட்பாக்களில் சமய வாழ்க்கை வாழும் முறையானது பல்வேறு வகையிலும் சில குறட்பாக்கள் மூலம் இங்கு அறியத்தரப்பட்டுள்ளது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி பதில்கள்

சு.சிவப்பிரியன்
இணைந்த சுகாதார
விஞ்ஞான பீடம்

**1. பொட்டு வைப்பது ஏன்?**

முக்கண் பெருமானான சிவனுக்கு மட்டுமன்றி மனிதருக்கும் கூட ஞானக் கண் உள்ள இடம் புருவத்தின் மத்தியாகும். அதனால் தான் இந்த இடத்தில் பொட்டு வைத்து ஞானவுணர்வை தூண்டுகின்றோம். இதனால் மனதில் அமைதியும் பாசமும் ஏற்படுகின்றது.

நெற்றியில் பொட்டு இட்டுக் கொள்ளும் போதெல்லாம் ஊனக்கண்ணால் அழகைப் பார்க்கும் நாம் ஞானம் என்னும் மூன்றாவது கண்ணால் உலகை தெய்வமயமாக பார்க்க வேண்டும் என்ற உணர்வு எழுகிறது. அதனால் தான் பொட்டு வைத்த முகம் தெய்வீக களையோடு அமைதியோடு திகழ்கிறது. அப்படிப்பட்ட ஞானம் திகழ்கிற முகத்தை உடையவரை வேறு எந்த தீய சக்தியும் அடையாது.

**2. துளசியின் சிறப்பு என்ன?**

துளசி மகாவிஷ்ணுவுக்கு மிகவும் உகந்தது. மகத்தான மருத்துவ குணங்கள் நிறைந்தது. விஸ்ணு ஆலயங்களில் துளசி அர்ச்சனையும் துளசி தீர்த்தமும் இன்றியமையாதன.
தெய்வீகமாக, விஷ்ணுவுக்கு உகந்த தளமாக, பிணி நீக்கும் மருந்தாக தம்மை நாடுபவரை காப்பாற்றும் வல்லமையும் சிறப்பும் உடையது துளசி.

**3. பூசையின் போது கைகுவிப்பது, கீழே விழுந்து வணங்குவதன் பொருள் என்ன?**

நாம் நமது வலது கையால் பல வேலைகளை செய்கின்றாம், எழுதுகிறோம், உண்ணுகிறோம், ஆனால் இடது கையை வேறு தேவைகளுக்காக பயன்படுத்துகிறோம். கடவுளை வணங்கும் போது இந்த இரண்டு கைகளையும் ஒன்று சேர்த்து கும்பிடுகின்றோம். இறைவன் முன் உயர்வு தாழ்வு ஏதும் இல்லை, எல்லோரும் சமன் என்பதே இதன் அர்த்தம்.

இறைவன் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சரணாகதி செய்த பக்தர்களின் நலனைத்தான் கவனிக்கிறான். மனமுவந்து அருள் செய்கிறான்.

"என் செயலால் ஆவது எதுவுமில்லை, உன்னுடைய பொறுப்பில் என்னை அர்ப்பணித்து விட்டேன்" என்ற அர்த்தத்தில் தான் உடம்பை தரையோடு தரையாக கிடத்தி பணிவோடு வணங்குகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. வில்வத்தின் சிறப்பு என்ன?**

வில்வம் சிவனுக்கு உகந்தது. மருத்துவ குணங்கள் நிறைந்தது. வில்வமரத்தில் லக்ஷ்மிதேவி வாசம் செய்கிறாள் என்றும் கூறப்படுகிறது.

ஒரு வில்வ இலை, லட்சம் ஸ்வர்ண புஷ்ப்பங்களுக்கு சமம். ஒரு வில்வ இலையை சிவனுக்கு அர்ப்பணம் செய்தால் சகல பாவங்களும் நீங்கி சேமம் உண்டாகும்.

*"த்ரிதளம் த்ரிகுணாகாரம் திரிநேத்ரம் சத்ரியாயும்*
*த்ரிஜன்மம் பாப ஸம்ஹாரம் ஏக வில்வம் சிவர்ப்பணம்"*

என்னும் இந்த ஸ்லோகம் வில்வத்தால் செய்யப்படும் சிவபூஜையின் அருமையைச் சொல்கிறது.

**5. "பதினாறு பெற்று பெருவாழ்வு வாழ்க" என்று ஆசிர்வதிப்பதன் அர்த்தம் என்ன?**

பதினாறு என்பது வாழ்க்கை, நல்ல விதத்தில் அமைவதற்காக பதினாறு பேறுகளைக் குறிக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1.சேஸமம் | 2.ஸ்திரம் | 3.வீரம் 4.விஜயம் | 5.ஆயுள் |
| 6. அரோகியம் | 7.ஐஸ்வர்யம் | 8.தர்மம் 9. ஆர்த்தம் | 10.காமம் |
| 11.மோஸஹம் | 12. சித்தி | 13.ஸமஸ்த( மங்களம்) | 14.வீமஸ்த(துரிதம்) |
| 15.புத்ரபௌத்ர( அபிவிருத்தி) | | 16.சஸ்கல்ய பூர்த்தி | |

இவ்வளவு பேறுகளையும் பெற்று வாழ்ந்திடவே "பதினாறு பெற்று பெருவாழ்வு வாழ்க" என்று வாழ்த்துகின்றனர்.

**6. வடக்கு திசையில் தலை வைத்து ஏன் படுக்ககூடாது?**

காந்தம் முனை வடக்கு நோக்கியே இருக்கும். வடக்கு திசையில் மின்னனு காந்தக் கதிர்கள் இருப்பதனால், தலையை அந்த திசையில் வைத்து படுத்தால், அந்த கதிர்கள் மூளையை பாதிக்கும். எனவே தான் வடக்கு திசையில் தலை வைத்து படுக்ககூடாது.

**7. கற்பூர ஆரத்தி எடுப்பது ஏன்?**

தூய்மையான வெந்நிறத்தையுடையது கற்பூரம். இது எரியும் போது ஏதும் மிச்சமில்லாமல் ஆவியாகிவிடும். அடையாளம் இல்லாமல் நெருப்போடு ஒன்றிவிடும்.

கற்பூரத்தைப் போன்று மனிதர்களும் தூய்மையான மனதுடன் பக்தியில் இரண்டரக் கலந்து ஒன்றிவிட வேண்டும். என்பதைதான் ஆரத்தி காட்டுகிறது.

**8. வெவ்வேறு தீபம் எற்றினால் வெவ்வேறு பலன்கள் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது, அவை ஏன்?**

- ஐந்து திரிகளுடன் விளக்கேற்றினால் குடும்பத்தில் ஒற்றுமை நிலவும், கல்யாணம் நடக்கும், நஸ்டமான பொருள் திரும்ப கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செடி விளக்கு ஏற்றினால் குடும்பத்தில் எல்லோருக்கும் சௌக்கியம் கிடைக்கும், புத்திரர்களுக்கு நன்மை உண்டாகும்.

- தொங்கும் சரவிளக்கில் நெய்விளக்கேற்றினால் பாவங்கள் தீர்ந்து புண்ணியம் கிடைக்கும்.

- நெய்விளக்கேற்றினால் நினைத்தது கைகூடும்.

- நல்லெண்ணெயில் விளக்கேற்றினால் ஆரோக்கியம் கிடைக்கும்.

- தேங்காய் எண்ணெயில் விளக்கேற்றினால் அழகு கூடும்.

- கடலெண்ணையில் விளக்கேற்றினால் பகைவர்கள் வலிமையிழப்பர்.

- இலுப்பெண்ணையில் விளக்கேற்றினால் மறுபிறப்பிலும் நன்மை கிடைக்கும்.

**9. இடது பக்கம் ஒடுக்களித்துப் படுப்பது நல்லது என சொல்லப்படுவது ஏன்?**

நாடிசாஸ்திரத்தின் முக்கியமான அம்சம் இது. வலது நாசிவழியே மூச்சு வந்தால், மனநிலை அமைதியாக நல்ல எண்ணங்களோடு இருக்கும் என நாடி சாஸ்திரம் சொல்கிறது.

இடது பக்கமாக படுக்கும் போது, உடல் பாகங்கள் சுருங்குவதால் சுவாசம் இடது நாசிவழியே வராது வலது நாசி வழியாக வரும். எனவே தான் இடது பக்கம் ஒடுக்களித்துப் படுப்பது நல்லது என கூறப்படுகின்றது.

**10. சிவலிங்கத்தின் தத்துவம் என்ன?**

அருவ வழிப்பாடு, உருவ வழிப்பாடு, அருவுருவ வழிப்பாடு, என மூன்று வழிப்பாட்டு முறைகளை நமது முன்னோர்கள் வகுத்துள்ளனர். இந்த மூன்று நிலைகளிலும் இறைவன் உள்ளார் என சிவலிங்கம் கூறுகிறது.

இந்த உலகம் அமைந்துள்ள பிரமாண்டத்தை சிவலிங்கம் உருவகப்படுத்துகின்றது. பிரம்மா, விஸ்ணு, சிவன் ஆகிய மூன்று மூர்த்தங்களும் லிங்கரூபத்தில் இருப்பதாகவும் ஒரு ஐதீகம் உண்டு.

**11. "ஓம்" என்ற சொல் கடவுளின் ஸ்வரூபமாகக் கருதப்படுவது ஏன் எல்லா மந்திரங்களிலும் இது சேர்ந்து இடம்பெறுவது ஏன்?**

ஓம் என்பது பிரணவ மந்திரம், ஈஸ்வரனை அடையாளம் காட்டும் சொல். அ-உ-ம் என்ற எழுத்துக்களை ஆதாரமாக கொண்ட சொல். நாம் பேச முற்படும் போது முதலில் வெளிப்படும் ஒலிகளை ஆதாரமாகக் கொண்டே சொல் அதனால் இது மொழி பேதமின்றி எல்லா மந்திரங்களுக்கும் ஆதார ஸ்ருதியாக அமைகிறது.

அதனாலேயே எல்லா மந்திரங்களிலும் இது சேர்த்து சொல்லப்படுகிறது. இத்தகைய சக்தி வாய்ந்த சிறப்பு சொல் கடவுளின் சொரூபமாகவும் கருதப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**12. சூரிய நமஸ்காரம் கிட்டும் பலன் என்ன?**

சூரிய நமஸ்காரம் செய்யும் போது சூரியனின் கதிர்கள் கண்ணில்படுவதால் கண்கள் ஒளி பெறுகின்றன.

வயிற்றில் தசைகள் அசைவதால் ஜீரண உறுப்புக்கள் சரியாக இயங்குகின்றன. உண்ட உணவு நன்கு சமிபாடு அடைந்து நல்ல பசி உண்டாகும்.உடல் ஆரோக்கியம் பெறும்.

---

## சைவ சித்தாந்த நூல்கள்

1. திருவுந்தியார்
2. திருக்களிற்றுப்படியார்
3. சிவஞானபோதம்
4. சிவஞானசித்தியார்
5. இருபாஇருபது
6. உண்மைவிளக்கம்
7. சிவப்பிரகாசம்
8. திருவருட்பயன்
9. வினாவெண்பா
10. போற்றிக்கொடி
11. கொடிக்கவி
12. நெஞ்சுவிடுதூது
13. உண்மைநெறி விளக்கம்
14. சங்கற்ப நிராகரணம்

## பதினாறு வகைப் பேறுகள்

1. வீரம்
2. வித்தியம்
3. சந்தாணம்
4. துணிவு
5. தனம்
6. சந்ததி
7. போகம்
8. அறிவு
9. அழகு
10. பெருமை
11. அறம்
12. குலம்
13. பூரணவயது
14. சௌபாக்கியம்
15. அதிதானியம்
16. நோய்நீக்கம்

## அட்ட வீரட்டானேஸ்வரங்கள்

1. திருக்கண்டியூர் - பிரமன் தலை கொய்தமை
2. திருக்கோவலூர் - அந்தகாசுரனைச் சங்கரித்தமை
3. திருவதிகை - திரிபுரத்தை எரித்தமை
4. திருப்பறியலூர் - தக்கன் சிரங்கொய்தமை
5. திருவிற்குடி - சலந்தரனைச் சங்கரித்தமை
6. திருவழுவூர் - யானையுரி போர்த்தமை
7. திருக்குறுக்கை - காமனை எரித்தமை
8. திருக்கடவூர் - யமனைச் சங்கரித்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில் வழிபாடு எதற்காக?

சிவஜாமினி சண்முகசுந்தரம்
3ம் வருடம்
இணைந்த சுகாதர விஞ்ஞானபீடம்

கோயில்கள் பொதுவாக மலைகள், குன்றுகள், கடற்கரைப்பகுதிகள் போன்றவற்றை அண்மித்த இடங்களிலேயே அமைக்கப்படுகின்றது. அந்த அமைதிமிக்க சூழல், தூய்மையான காற்று, இயற்கை அழகு அங்கு செல்லும் போது அந்தப்புறச் சூழ்நிலை மனதில் அமைதியையும் ஆனந்தத்தினையும் ஏற்படுத்தும்.

மலைகள், மரங்கள், செடி, கொடி இவைகள் உயிர்சக்தியினை ஈர்த்து தம்மைச்சுற்றி வைத்துள்ளன. பிரபஞ்சத்தில் உயிராற்றல் இவ்விடங்களில் நிரம்பியுள்ளன. அவற்றினை ஈர்த்து அவை வைத்துள்ளன. அங்கே சென்று அவற்றுடன் இருக்கும் மனிதர்கள் அந்த ஆற்றலை பெற்றுக்கொள்ள முடியும், என்று விஞ்ஞான பூர்வமாக விளக்கப்பட்டுள்ளது. ஆகவே அந்த மலைக்கோயில்களிற்கு செல்லும் போது அத்தகைய பயனைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. நம் முன்னோர் இவற்றினை உணர்ந்தே கோயில்களை கட்டியிருக்கின்றனர்.

அடுத்து கோயில் அமைப்பு, கோயிலில் உள்ள கொடிதம்பம் போன்றவை சக்தியை ஈர்த்து தம்மைச் சுற்றி வைத்துள்ளதாக கூறுகின்றனர். அதன் வடிவ அமைப்பும் அவ்வாறு உள்ளதாக கூறுகின்றனர். அங்கு நாம் செல்லும் போது உயிர்ச் சக்தியினைப் பெற்றுக்கொள்கின்றோம்.

கோயிலுக்கு வரும் மனிதர்கள் அதிகமானோர் நல்ல எண்ணங்களை பிரார்த்தனை செய்யும் போது அங்கு எண்ண அலை மண்டலம் உருவாகின்றது. அது நமக்கு நன்மையைக் கொடுக்கின்றது. ஆனால் இப்பயன்களையெல்லாம் பெறவேண்டுமானால் மனம் இவற்றை பெற்றுக்கொள்கின்ற ஏற்றுக்கொள்கின்ற தன்மையில் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு உருவக் கடவுளையும் பார்க்கும் போது சில உடன்பாட்டு விளக்கச் செய்திகளைப் பெற்றலாம்.

நடராஜரைப் பார்க்கும் போது தொடர்ந்து அவர் நடனமாடிச் செயல் புரிவது போல் செயல் புரிவேன் என்றும், விநாயகரைப் பார்க்கும் போது விரிந்து காதுகொடுத்து கேட்பேன் என்றும் கூரிய கண்களைப் போல் விழிப்புணர்வாய் இருப்பேன் என்றும், எதையும் நுனிப் புல் மேயாமல் ஆய்ந்து அறிவேன் போன்ற செய்திகளைப் பெறலாம்.

இந்தப்பிறவியில் இன்னொரு பெண்ணை சிந்தணையாலும் தொடேன் என்ற ஏகபத்தினி விரதம் கொண்டவர் இராமர் என்கிறது கம்பராமாயணம். இது போன்ற அவரின் உயரிய குணங்களை இராமர் கோயிலில் எண்ணிப் பார்க்கலாம். பக்தி கொண்டு விஸ்வரூபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து கடலைத் தாண்டி சீதையைக் கண்டவன் அனுமன் நானும் அவ்வாறு மனதில் அறிவு, அற்றல், சக்தி, தன்னம்பிக்கை கொண்டு விஸ்வரூபம் எடுத்து ஜெயிப்பேன் என்று அனுமனைப் பார்க்கும் போது எண்ணலாம்.

கோயிலில் பூசை நடைபெறுகின்ற போது மங்கள வாத்தியங்களான மேளம், நாதஸ்வரம் வாசிக்கப்படுகின்றது. மணி ஒலிக்கப்படுகின்றது. மந்திரங்கள் உச்சரிக்கப்படுகின்றது. இவற்றின் மூலம் உண்டாக்கப்படுகின்ற அதிர்வுகள் மனிதனை மேலும் உயிர்பூட்டுகின்றது. கோயிலில் வழிபட ஆண், பெண்ணிற்கு என தனியான வழிபாட்டு முறைகள் உள்ளன. ஆண் அஷ்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்வது வழமை. இந்த வழிபாட்டு முறை உடலிற்கு சிறந்த உடற்பயிற்சியினை வழங்குகின்றது. கோயில் பிரகாரத்தினை சுற்றிக் கும்பிடுவதும் சிறந்த ஒரு உடற்பயிற்சி ஆகும்.

மொத்தத்தில் எங்கும் நிறைந்த பேராற்றல் மிக்க பரம்பொருளில் இருந்து வந்தவர்கள் நாம் என்பதை நினைவூட்டிக் கொள்ள கோயிலுக்குச் செல்லலாம். இது நமக்கு மேலதிக சக்தியினை ஊட்டுகின்றது. எப்படி ஒரு வெள்ளைத் துணியை மீண்டும் மீண்டும் நீலத்தண்ணீரில் நனைத்தால் நீலமாக மாறுகின்றதோ அதுபோல் அடிக்கடி தியானம், கோயில் வழிபாடு இவற்றின் மூலம் பேரானந்த பெரும் சக்தியை தொடும் போது நாமும் பேராற்றல், பேரறிவு பெற்று வெற்றியும் சந்தோஷமும் பெறலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நா காக்க"

**முத்துசாமி சுதர்சன்**
2ம் வருடம்
இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடம்

சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு தனு, கரண, புவன போகங்களை அமைத்து தந்துள்ளார். இவையனைத்தும் நல்ல காரியங்களை செய்வதற்கும் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுவதற்கும் எமக்கு பேருதவியாக உள்ளன. இவற்றை நல்ல வழியிலே பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று நூல்கள் கூறுகின்றன. எமக்கு ஐந்து புலன்கள் உண்டு.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தும் இப்பஞ்ச புலன்களுடனும் தொடர்புப்பட்டவை. பொதுவில் இவை மனிதர்களுக்குள் அடங்கியிருக்க வேண்டியவை. ஆனால் நடைமுறையில் பார்க்கும் போது இவை மனிதன் மீது மேலாண்மை செலுத்தி அவனை ஆட்டிப் படைக்கின்றன. இதனால் மனிதன் தன் இயல்பை இழந்து ஆசைகளைப் பெருக்கி வாழ்க்கையில் அல்லற்படவேண்டியுள்ளது. புலன்களின் செல்வாக்கினை தளர்த்தி அவற்றினை எவனொருவன் தன்னாட்சிக்கு கொண்டு வருகின்றானோ அவனே பெரியவன், மேலானவன் ஆகின்றான். இதற்கு நல்லறிவு தேவை. ஐந்தறிவித்தான் ஆற்றல் மிகப் பெரியது. செயற்கரிய செய்த பெருமையும் கிடைக்கின்றது. இந்த வகையில் இன்று சுவையோடு சம்பந்தப்பட்ட வாய் என்ற புலன் பற்றிச் சிறிது நோக்குவோம்.

வாய் என்பதன் முக்கிய அங்கம் நாக்கு என்பதாகும். நாக்கு சுவைத்தல், வழங்குதல் ஆகிய இரண்டு முக்கிய தொழில்களைச் செய்கின்றது. பொருட்களின் அறுசுவைகளையும் உணர்ந்து அறிவிப்பது நாக்கு. நாக்கின் அடுத்த தொழிற்பாடு ஒலியுடன் தொடர்புடையது. ஒலிதான் முதலில் தோன்றியது என்பர். மனிதனும் ஒலியை நாவிலிருந்து பிறப்பிக்கின்றான். இந்த ஒலியைப் பயன்படுத்தி மனிதன் தன் எண்ணங்களையும், கருத்துக்களையும் பிறருக்கு வழங்குகிறான். அதாவது அவற்றை வெளிப்படுத்துகிறான். அதுவே நாவின் வழங்கள் தொழிற்பாடு. வழங்கல் என்பது தானம் செய்தல் ஆகும். தானம் தர்ம வழியில், தர்ம முறையில் செய்யப்பட வேண்டும். வேண்டாதன தவிர்த்து விலக்கப்பட வேண்டியன நீக்கி வேண்டியன மாத்திரம் கொடுக்கப்பட வேண்டியது நீதியாகும். இந்த வகையில் வாயிலிருந்து வெளிப்படும் வாக்கு அல்லது சொல் ஒளிப் பொருந்தியதாக இருக்க வேண்டும். "உள்ளத்தில் உண்மை ஒளியுண்டாயின், வாக்கினில் ஒளியுண்டாகும்" என்கிறார் மகாகவி பாரதி. இவ்வாக்கிலே உண்டாகும் ஒளி வாய்மை எனப்படும்.

"வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும் தீமை இலாத சொலல்" என்பது வள்ளுவர் வாய்மொழி.

மற்றையோருக்கு ஒரு சிறிதும் தீமையை விளைவிக்காத சொற்களைச் சொல்கின்ற அறம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மை ஆகும். அப்பர் பெருமானும் "வாயே வாழ்த்து கண்டாய்" என நாவுக்கு பணிப்புரை வழங்குகிறார். நாவினை ஆண்டு அவர் நாவுகரசர் ஆனார். வாழ்த்துவதற்குதான் வாயை பயன்படுத்த வேண்டுமே தவிர பிறரை தூற்றுவதற்கோ, துன்புறுத்துவதற்கோ அல்ல என்பதை உணர்ந்துக் கொள்ள வேண்டும்.

மனிதனின் அற்புத சாதனையாக மொழிப்பயன்பாடு விளங்குகிறது. மொழியின் ஒலிவடிவம் உருப்பெருவது மனிதனின் நாக்கில் ஆகும். எனவே நாக்கு நன்றாக கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கின்றது. இதற்கு இறைவனே வழியமைத்துக் காட்டியுள்ளான். இறைவன் நாவினைப் படைக்கும் போதே அது செய்யப் போகின்ற செயலை உணர்ந்து முன்னேற்பாடாக அதனை வாய் எனும் அரண் ஒன்றினுள் அதனைச் சூழக் கூரிய பற்களால் வேலிப்போட்டு கடுமையான காவலுக்குட்படுத்தியுள்ளான். நாக்கு என்ற அருமையான உறுப்பு அது வழங்கும் சொற்களினால் ஆக்கத்தை தருவிக்க முடியும், கேட்டினையும் வருவிக்க முடியும். ஆகையால் நா காத்து ஓம்பப்பட வேண்டியது என்பது இறைவனின் சித்தமும் ஆகும் என்பதனையே இந்த கட்டுக்காவல் உணர்த்துகின்றது.

"யாகாவா ராயினும் நா காக்க" என்றார் வள்ளுவர். மனம், வாக்கு, காயம் என்பவற்றினால் அறம் செய்ய முடியும். இவற்றுள் வாக்கு என்பதனால் செய்யப்படுகின்ற அறத்துக்கு பெரும் பொருட்செலவும் தேவையில்லை. உண்மை பேசுதல், இன் சொற்களால் இனியவை கூறல் ,வாழ்த்துரை வழங்குதல், வார்த்தைகளின் வகையறிதல், சொற்களின் திறனறிந்து பேசுதல் , பயனுள்ளவற்றை பேசுதல் என்பன சிறந்த அறம் தழுவிய செயல்களாகும். இதே வேளை எதிர்மறையான குற்றங்கள் சார்ந்தவற்றில் நாக்கு ஈடுபாடு கொள்ளாதிருத்தலும் அறம் ஆகின்றது. புறங்கூறாமை, வஞ்சினம் பேசாமை, கடுஞ் சொல் கூறாமை, பொய் பேசாமை, விதண்டாவாதம் புரியாமை, சூழுரையாமை, சபதம் செய்யாமை, சாபம் செய்யாமை, கோழ் மூட்டாமை போன்றவற்றை கடைப்பிடிப்பதன் மூலமும் நா காத்தோம்பப்படுகிறது.

பெரும் பொருள் செய்து புரியும் ஈகையை விட அன்புடன் முகம் மலர்ந்து பிறருக்கு இன்சொல் வழங்குவதன் மூலம் புரியும் ஈகை மிகச் சிறந்தது. இதனாலேயே திருமூலரும் "யாவர்க்குமாம் பிறருக்கு இன்னுரைதானே" என்றார். பாரதியாரும்
"எதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருளீர்" என்றார். இனிய உளவாக இன்னாது கூறல் தேவையற்றது. எனவே குடும்பத்திலும் சரி, வேலைத்தளத்திலும் சரி மற்றும் சமூகத்திலும் சரி இன்முகத்துடன் யாவருடனும் இனிய சொற்களையே பேசி அன்பினைச் சொரிந்து, மக்கட் பண்பினைப் பேணி அறம் பரப்பி எல்லோரும் இன்புற்று வாழ வழிசெய்வோம்.

"நாவினுக்கருங்கலம் நமசிவாயவே" கல்விக்கும் பயன் அறிவு அறிவுக்குப் பயன் பணிதல் எனும் ஒழுக்கம் என்பதை நாம் சிந்தையில் நிறுத்துவோமாக".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்தின் அச்சாணி சமயம்

**ச. ரகுராஜ்**
மூன்றாம் வருடம்
மருத்துவ பீடம்

இந்து மதமானது தமிழ்ச் சமூகத்தின் பிராதான நிறுவனமாகக் காணப்படுகின்றது. உலகிலுள்ள பெரும்பாலான சமூகங்களில் எல்லாம் அடையாளப்படுத்தக்கூடிய ஒன்றாக மதம் எனும் சமூக நிறுவனம் விளங்குகின்றது. ஆனாலும் மதத்தின் செல்வாக்கு புராதன காலங்களில் இருந்ததைவிட இன்று அதனது செல்வாக்கு வீழ்ச்சியடைந்து செல்லக்கூடிய போக்கினையும் காணக்கூடியதாகவிருக்கின்றது. இந்து மதம் பற்றி ஆராய முற்படும் ஒருவர் பின்வரும் வினாக்களுக்கு விடைகாண வேண்டியது அவசியமாகும்?

1. இந்து மதம் என்றால் என்ன?
2. அதனை எவ்வாறு வரையறை செய்யலாம்?
3. மதம் பற்றிய அறிஞர்களினாலும் சாதாரண பொது மக்களினாலும் எவ்வாறு பொருள் அர்த்தம் செய்யப்படுகின்றது?.

இந்து மதத்தை உலகம் முழுவதிலும் அண்ணளவாக 900 மில்லியன் மக்கள் பின்பற்றுகின்றனர். அத்துடன் உலகில் பிரதான மதங்களில் ஒன்றாகவும் கருதப்படுகின்றது.

**மதம் பற்றிய கோட்பாடுக் கண்ணோட்டம் செயற்பாட்டுவாதம்**

செயற்பாட்டு வாதத்தினைப் பொறுத்தவரையில் மதமானது சமூக முறையின் ஒரு உபதொகுதியாகக் கருதப்படுவதுடன் பல்வேறு சமூக நிறுவனங்களையும் ஒன்றிணைக்கின்ற அவசியமான சமூக நிறுவனமாக விளங்குவதுடன் விழுமியம் சார் ஒருமித்த நிறையமையைத் தோற்றுவிப்பதுடன் அதனைத் தொடர்ந்து பேணுவதற்குரிய பங்கினை ஆற்றுவதாகக் குறிப்பிடுகின்றனர். அதாவது சமூக மாற்றத்திற்கு எதிரான ஒரு பழமைவாத சக்தியாக மதம் அடையாளப்படுத்தப்படுகின்றது.

1.இந்துமதம் இந்துக்களாக விளங்கும் தமிழர்களின் சமூகப் பண்பாட்டு அடையாளத்தினை வெளிப்படுத்துவதற்கு உதவுகின்றது.

உதாரணமாக இந்துக்களாக விளங்கும் இலங்கைத் தமிழர்களும், இந்திய தமிழர்களும் நாட்டு வேறுபாடு எனும் செயற்பாடுகளை மேற்கொள்வது வெளிப்படையாகும். அத்துடன் தமிழர்களின் இனத்துவ அடையாளத்தை வெளிப்படுத்தும் பிரதான சக்தியாக இந்து மதம் விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இந்து சமயம் இலங்கையில் வேறு வேறு மாவட்டங்களில் வாழும் சமூகத்திலுள்ள மக்களை ஒருங்கிணைப்பதற்குத் தேவையான தொழிற்பாட்டினை ஆற்றுகின்றது.
சமூகத்தில் கூட்டொருமைப்பாட்டினை வகிபங்கினை ஏற்கின்றது. உதாரணமாக பிரதேச வேறுபாடுகள், பால்நிலை வேறுபாடுகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சாதி முரண்பாடுகள், ஆகிய சமூக வரையறைகளைக் கடந்து மக்கள் தங்களது சமய நிகழ்வுகளைக் கொண்டிருக்கின்றனர். அவ்வகையில் இந்துக்கள் தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, கார்த்திகைத் தீபம், நவராத்திரி, சிவராத்திரி, தீபாவளி ஆகிய விழாக்களைக் கொண்டாடி மகிழ்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

3.சமயமானது சமூகக் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளும் பொறிமுறையாகக் காணப்படுகின்றது.
உதாரணமாக இந்து மதம் வலியுத்துகின்ற பஞ்சமாபாதங்களைத் தவிர்த்தல் கொள்கை, புருடார்த்தக் கோட்பாடு ஆகியவை சமூகக்கட்டுப்பாட்டுகளின் மூலமாக மனிதனை ஒழுங்குபடுத்துகின்றது.

4.இந்து மதம் மக்களின் அடிப்படைப் பழக்கவழக்கங்களையும் பண்பாடுகளையும் கற்றுணர்வதற்கு வழி செய்வதுடன் அவர்களை மனிதத்துவம் நிறைந்த சமூக அங்கத்தவர்களாக மாற்றுவதற்கும் வழி செய்கின்றது. அதாவது சமூகமயமாதல் செயன்முறைக்கு ஒரு பொறிமுறையாக மதங்கள் காணப்படுகின்றது.

5. அத்துடன் எமது சமயம் மனித வாழ்விற்கு ஒரு பெறுமதியினையும் அர்த்தத்தினையும் கொடுக்கின்றது. உலகிலுள்ள அனைத்து மதங்களும் ஏதோ ஒரு வகையில் ஒவ்வொரு மனிதனுடைய கடமைகளையும் அவற்றைச் சரிவர ஆற்ற வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றன.

ஒவ்வொரு மனிதனதும் வாழ்க்கை வட்டத்தில் சடங்குகள் மற்றும் கொண்டாட்டங்களில் மதங்களின் செல்வாக்கினைக் கண்டுகொள்ள முடியும். குறிப்பாக இந்து ஒருவரின் வாழ்க்கையில் பிறப்பு, திருமணம், இறப்பு ஆகிய வாழ்க்கை வட்ட நிகழ்வுகள் மதங்களுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளது என்பது வெளிப்படையாகும். இது மட்டுமின்றி தூய்மையாக இருத்தல் மதவழிபாட்டு இடங்களில் அமைதி பேணுதல், மனக்கட்டுப்பாட்டுடன் தியானங்களில் ஈடுபடுதல், தெய்வங்களிற்கு அல்லது கடவுளிற்கு கட்டுப்படுதல் போன்ற சமூக நியமங்கள் மற்றும் விழுமியங்கள் ஊடாகச் சமூகமானது ஒரு ஒழுங்கில் தொழிற்படுவதற்கு இந்து மதம் உதவி புரிகின்றது.

சமூக ஒழுங்கமைப்பினை ஏற்படுத்தும் பிரதான மூலமாக மதம் விளங்குகின்றது. மக்கள் பொதுவான சமய நம்பிக்கைகளைத் தங்களிடையே பகிர்ந்து கொள்கின்றனர். மனித நடத்தையானது சமயங்கள் வலியுறுத்தும் சில சமூக நியமங்களினூடாக ஒழுங்குபடுத்தப் படுகின்றது. விஞ்ஞானத்தினால் விடைகாண முடியாத சில வினாக்களுக்கு இந்து மதம் விடையளிக்கின்றது. உதாரணமாக நெருக்கமான நேரங்களில் மனிதர்களின் மன எழுச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தேவைகளை சமயம் நிறைவு செய்கின்றது.

முரண்பாட்டுவாதிகள் சமயம் தொடர்பில் எதிர்மறையான கருத்துக்களைக் கொண்டுள்ளனர்.

6. மதமானது ஒரு சமூகத்தில் மோதல்கள் அல்லது முரண்பாட்டுவாதிகள் தோற்றுவிக்கக் காரணமாகின்றது. (குறிப்பாக இந்தியாவில் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே ஏற்பட்ட ராமர் கோயில், பாபர் மசூதி தொடர்பாக இடம்பெற்ற கலவரத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். அது இரண்டு மதப்பிரிவினர்களிடையில் பகையுணர்வினையும் ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் மதமானது சமூகத்தில் சமூக அடுக்கமைவுகளைத் தோற்றுவிக்கின்றது.

குறிப்பாக இந்து மதத்தில் காணப்படும் வர்ணக்கோட்பாடு, (பிராமணர், சத்தியர், வைஷகர், சூத்திரிகர்) இந்துமதம் மறைமுகமாக சாதி முறைமையினை நிலைநிறுத்துவதாகச் சிலர் கூறுகின்றனர்.

7. மதங்கள் மூட நம்பிக்கைகளினைத் தோற்றுவிப்பதுடன் சமூக முன்னேற்றத்திற்கு தடையாக இருப்பதாகவும் ஒரு சாரார் கருதுகின்றனர். உதாரணமாக இந்து மதத்தில் காணப்படும் கன்ம மறுபிறப்பு கோட்பாடு, மறுபிறவி, பரிகாரங்கள், சடங்குகள், கடவுளின் தோற்றம் என்பன தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

சமூகத்தின் மீதான சமயத்தின் செல்வாக்கானது என்றுமில்லாதவாறு குறைவடைந்து செல்கின்றது. கைத்தொழில் புரட்சி, விஞ்ஞான வளர்ச்சி, தொழில்நுட்ப முன்னேற்றம் என்பவை காரணமாக சமூகத்தின் மீதான சமயத்தின் செல்வாக்கு அருகி வருகின்றது. அத்துடன் மக்களிடம் காணப்படுகின்ற மதநம்பிக்கைகளும் குறைவடையத் தொடங்குகின்றது. இந்து மதம் எனும் சமூக நிறுவனம் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு வருகின்றது. உதாரணமாக இந்து ஆலயங்களில் பாரம்பரிய மணி, தவில் கருவிகளுக்குப் பதிலாக இலத்திரணியல் உபகரணங்கள் மூலம் மங்கள வாத்தியங்கள் இசைக்கப்படுவதனைக் குறிப்பிட முடியும்.

இந்து மதம் மனிதர்கள் கடைப்பிடிப்பதற்குத் தேவையான சில நற்பழக்கவழக்கங்களை வலியுறுத்துகின்றன. உதாரணமாக சைவமரக்கறி உணவின் மகத்துவத்தினை வலியுறுத்துகின்றது. (உதாரணமாக உடற்பருமன் அதிகரித்தல், நீரிழிவு, உயர் குருதி அமுத்தம், கொழுப்புப்படிதல் எனும் நோய்களிலிருந்து விடுபடமுடியும்) மற்றும் இந்து மதத்தில் கூறப்படும் யோகா, தியான முறைமை மூலம் மனக் கட்டுப்பாடும் அமைதியும் பேணும் முறைமை மூலம் மனக் கட்டுப்பாடும் அமைதியும் பேணும் முறைமை தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இவ்விரு சமூக நற்பழக்கவழக்கங்கள் இன்று மேலைத்தேய சமூகத்தினால் கூடப் பின்பற்றப்படுவது குறிப்பிடத்தக்கது. இதைவிட சில சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைவியக்கங்கள் (பிரம்மகுமாரிகள், அன்னை திரசோ, தங்கம்மா அப்பாக்குட்டி, ஸ்தாபனம், அம்மா பகவான், மிஷனறிகள்) இந்து மதத்தைச் சார்ந்து இயங்குகின்றன.

தொகுத்து நோக்குமிடத்து இந்து மதம் சமூகத்தில் முக்கியமான ஒரு பங்கினை ஆற்றுகின்றது. பல்வேறு விமர்சனங்களுக்கு அப்பால் மனிதர்களை மனிதத்தன்மையுடன் வாழ்வதற்கு நல்வழிக்காட்டி நிற்கின்றது. மதநம்பிக்கைகள், சடங்கு முறைகள், புனித இலட்சிணைகள், கடவுள் வழிபாடு, தியானம், புனித நூல்கள் என்பனவற்றினூடாக இந்துமதம் சமூகத்தினை சுமூகமான முறையில் தொழிற்படச் செய்வதற்கு துணைபுரிகின்றது. இவ்வாறு மனித வாழ்வின் மகத்துவத்தினையும், மனிதப் பிறவியின் அர்த்தத்தினையும் எமக்கு எடுத்து விளக்கும் மதங்களையும் அவற்றின் பெருமைகளையும் நாம் உலகறியச் செய்தல் வேண்டும்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

---

### *பொன்மொழிகள்*

| | |
|---|---|
| வருவதும் போவதும் | இரண்டு இன்பம், துன்பம் |
| வந்தால் போகாது | இரண்டு புகழ், பழி |
| போனால் வராதது | இரண்டு மானம், உயிர் |
| தானாக வருவது | இரண்டு இளமையும், முதுமையும் |
| நம்முடன் வருவது | இரண்டு பாவமும், புண்ணியமும் |
| அடக்க முடியாதது | இரண்டு ஆசையும், துக்கமும் |
| தவிர்க்க முடியாதது | இரண்டு பசியும், தாகமும் |
| நம்மால் பிரிக்க முடியாது | இரண்டு பந்தமும், பாசமும் |
| அழிவைத் தருவது | இரண்டு பொறாமையும், கோபமும் |
| எல்லோரும் நமனானது | இரண்டு பிறப்பும், இறப்பும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் அன்பு

பா. நிர்விகலா
முதலாம் வருடம்
பொறியியற் பீடம்

நவநாகரீக யுகத்தில் அன்பு என்ற மூன்று எழுத்தின் பொருள் அறிவதே அன்னை என்னும் மூன்றெழுத்து உயிரால் தான். அத்தனை அழகாக அன்பைப் பொழிந்து எம்மை நல்வழிப்படுத்தும் அன்னையை அன்பு செலுத்தி ஆதரவளிக்கும் கடமை எம்மைச் சார்ந்ததே. "தாயிற் சிறந்ததொரு கோவிலும் இல்லை" என்பது குழந்தைப் பருவத்திலேயே நமக்குச் சொல்லி வைக்கப்பட்ட வாசகம். அன்பு என்ற சொல்லின் பொருள் முழுவதையும் எமக்குப் புரிய வைத்தல் அன்னையவள் பயன் கருதாத அன்பைப் பொழிபவள். அனைத்துக் குழந்தைகளிடமும் ஒன்று போல் அன்பு பாராட்டுகின்றவள். குழந்தைகளின் குற்றங்களைப் பெரிதுபடுத்தாமல் மன்னித்து மறந்து போகும் பெருமனம் கொண்டவள். மன்னிப்பதில் அவளுக்கு நிகர் அவளேதான். உணவோடு அன்பையும் பரிவையும் குழைத்து நமக்கு ஊட்டுபவளும் அவளே.

அன்னையை வணங்கவேண்டும். தந்தையை வணங்க வேண்டும், முன்பின் தெரியாத அதிதி எனப்படும் விருந்தினரையும் வணங்க வேண்டும் என சொல்லும் போது

"மாத்ரு தேவோ பவ"

தாயாரை வணங்க வேண்டும் என உபநிடதம் கட்டளை பிறப்பிக்கின்றது. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என அன்னையை முன்னிலைப்படுத்தினர் ஆன்றோர். மேலும் "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே" என ஆன்றோர் சொல்லி எமக்கு வழிக்காட்டினார். நாம் ஒவ்வொருவரும் எமது தாய்க்குக் கடன்பட்டிருக்கின்றோம். நாம் யார் யாருக்குகெல்லாம் கடன்பட்டிருக்கின்றோம் என்று எண்ணிப்பார்க்கும் பொழுது நம்மைப் படைத்த இறைவன், எமக்கு முன்னின்று வழிகாட்டிய குரு, எம்மை தன்னுயிராய் சுமந்து பெற்ற தாய், எம்மை மனதில் சுமக்கும் தந்தை என சான்றோர் வகையிடுகின்றனர். குருவிற்குப் பட்ட கடனை அவர் காட்டிய நல்வழியில் எலலோர்க்கும் பயன்பட வாழ்ந்து வருவதாலும், இறைவனுக்குப் பட்ட கடனை அவர் அடியார்களுக்குத் தொண்டு செய்வதன் மூலமும் சிறிது அடைக்கலாம். ஆனால் தாய்க்குப்பட்ட கடன் திருப்பி அடைக்க முடியாது. அதனை எவ்வளவு பொருள் கொடுத்தாலும் ஈடுகட்ட முடியாது. தாய்க்கு கைமாறு செய்ய இயலாது என்பதால் சான்றோர் தாயை வணங்கவேண்டும் என வழிகாட்டினார். தாய் இப்பூமியில் வாழும் போதே அவளிடம் அன்பு பாராட்டி, அவள் மனம் குளிரும் படி நாம் நடந்து கொள்ளல் வேண்டும். வாழும் போது உதாசினம் செய்து விட்டு அவள் இவ்வுலக வாழ்க்கையை நீத்த பின்னர் அஞ்சலி செலுத்துவதால் யாது பயன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் தன் குழந்தைமேல் பொழியும் அன்பிற்கு ஈடு இணை ஏதும் இல்லை என்பது உலகறிந்த உண்மை. ஆயிரக்கணக்கான பாடல்களில் இராமாயணத்தை உயிர்க் காவியமாகப் படைத்த கம்பன் பல புதிய உவமைகளைக் கையாண்டு தன் மனக்கருத்தை நமக்கு புரிய வைத்த புதுமைப் பாவலர், அவரும் அன்புக்கு விளக்கம் சொல்ல வரும் போது தாயன்பு தான் சிறந்தது என்கிறார். வெற்றிகரமாக பலகாலம் அரசாட்சி செய்த தசரத மகாராஜா தன் குடிமக்களைத் தன் குழந்தைகளாகப் பாவித்து அன்புடன் நாட்டையும், நாட்டு மக்களையும் வழிநடத்திச் சென்றான் எனச் சொல்ல வந்த புலவர் கம்பன் தசரதன் அன்பு பாராட்டுவதில் தாய்க்கு நிகராகின்றான். எனப் பின்வரும் பாடலால் காட்டுகின்றான்.

"தாயொர்க்கும் அன்பில் தலம் எக்கும் நலம் பயப்பில்
செய்க்கும் முன்னின்று வர செல்கதி உய்க்கும் நீரால்
கொய் ஒக்கும் என்னில் மறந்து ஒக்கும் நுணங்கு கேள்வி
ஆயப் புகுங்கால் அறிவு ஒக்கும் எவருக்கும் அன்னான்"

எந்த அளவு கோல் கொண்டும் தாயின் இனிய அன்பை அளந்திட முடியாது என்ற உண்மையை நம் வாழ்வில் பலமுறை பல சம்பவங்கள் நமக்கு உணர்த்தியிருக்கும். ஐரோப்பிய மேலைநாட்டுக் கலாசாரம், சின்னத்திரை, பெரிய திரை மூலமாக நம் சமூக வாழ்க்கையில் நுழையத் தொடங்கிய நாட்களில் இருந்து, நமது பாரம்பரியம் மிக்க பண்பாட்டின் அம்சங்களை நாம் மறந்தும் இழந்தும் வருகின்றோம். அன்னை, தந்தை, உற்றார், உறவினர் என்ற பந்தப் பிணைப்புகள் கொஞ்சம் கொஞ்சமாக நமக்கு அன்னியமாகிக் கொண்டே போகின்றன.

வாழ்நாளெல்லாம் குழந்தைகளுக்குச் சேவகம் செய்யும் தாய்க்கு வயதான பின்னர் சேவகம் செய்வோர் எத்தனை பேர்? வயதான தாய் வீட்டில் தகுதியற்றவள் என வசதிபடைத்தோரும் அவளை முதியோர் இல்லத்தில் கொண்டு போய்ச் சேர்க்க செய்யும் எம் கண்முன்னே காட்சிகளாய் அரங்கேறுகின்றன. தள்ளாத வயதிலே தன் மக்களின் அன்புப் பார்வை தன்மீது விழாதா என ஏங்கித் தவிக்கும் தாய்களின் எண்ணிக்கையோ எண்ண எண்ணக் குறையாது. பெற்றவளைப் பேணுவது ஒவ்வொரு சேயினதும் கடமையல்லவா?

அரசன் கோயில் கட்டினான், குடமுழுக்கு செய்தான், ஆயிரம் பேர்க்கு அன்னதானம் செய்தான், பசுக்களைத் தானமாகக் கொடுத்தான், காசிக்குச் சென்றான், கங்கையில் ஸ்நானம் செய்தான், ஆனால் தாய்க்குச் செய்யவேண்டிய கடமையை மட்டும் செய்யவில்லை அவனுக்கு உணவு தரும் கடமையைக் மட்டும் ஆற்றவில்லை. அவனுக்கு தெய்வம் அருள்பாலிக்குமா என்றால் அன்னையைத் துதிக்காதவனுக்கு ஆண்டவனும் அருளமாட்டான் எனத் திட்டவட்டமாக நம் ஆன்மீக நூல்கள் குறிபிடுகின்றன. அதனால் அன்னையைப்போற்றி அவர்கள் வாழ்வைப் பேணிக்காப்பதே எமது வாழ்வின் முக்கிய கடமையாகும். தன் உடலில் சுமந்து. உயிரைப் பகிர்ந்து உருவம் தந்த தாயைப்போற்றிப் பாதுகாப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மிக வழியில் சமயத்தினதும் விஞ்ஞானத்தினதும் பிரதிபலிப்பு

சோபிகா சூரியகுமாரன்
இறுதிவருடம்,
பொறியியற் பீடம்.

வளர்ந்து வரும் விஞ்ஞான அறிவு விழிப்படைந்த சமூகமுன்னேற்ற சம்பந்தமான அறிவு, உலக ஒருமையில் ஏற்பட்டடுள்ள சிராத்தை ஆகிய இவைகளை இன்றைக்கும் நம் மக்களிடையே ஆன்மீக இலட்சியத்தில் அவ நம்பிக்கை பிரச்சினையை உண்டாக்கி விட்ட சக்திகளுள் முதன்மை பெற்றவை ஆகும். நமது காலத்தில் மேலோங்கி நிற்கும் விஞ்ஞான தாகத்தை திருப்தி செய்ய முடியாத சமூக முன்னேற்றம் சம்பந்தமான ஆவல்களுக்கு நெஞ்சில் இடம் கொடுக்காத, உலக ஒருமைப்பாட்டை வளர்க்க பாடுபடாத எந்த மதமும் இப்போது அழியாமல் வாழ முடியாது.

ஓய்வு ஒழிவு இல்லாமல் அறிவை பெருக்குவதற்காக கேட்கும் கேள்விகள், எதையும் நம்பிக்கையின் அடிப்படையில் ஒப்புக்கொள்ள விருப்பமின்மை, ஏந்த கொள்கையையும் சந்தேக கண்ணோடு நோக்கும் உரிமை இவற்றைத்தான் இலட்சியங்களாக கொண்ட விஞ்ஞான தாகமே தற்கால வீரதீர செயல்களுக்கும் சோதனை தத்துவத்திற்கும் தூண்டுகோளாக இருந்து வருகின்றது. ஆராய்ச்சி செய்யாமலும் குற்றம் குறை சொல்லாமலும் இக்கால விஞ்ஞான மூளை எந்த இலட்சியத்தையும் ஒப்புக்கொள்வதில்லை அதைப்பற்றிக் கேள்விகள் கேட்டு ஆராயவும் அந்த இலட்சியத்தின் முடிந்த முடிவுகளில் ஐயப்படவும் இந்த மூளைக்கு உரிமை உண்டு.

சமயக்கொள்கைகள் விஞ்ஞானத்தின் இலட்சியத்திற்கு முரணானவை என்பதே மக்களிடையே பொதுவாக உலவும் நம்பிக்கை விஞ்ஞான இலட்சியம் கண்கண்ட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது. சமய இலட்சியங்களின் அடிப்படையே காரணம் தோன்றாத கட்டளைகள் அந்த முறையில் பழகிய எந்த மனமும் புரிந்து கொண்டு மதிப்பிடக்கூடிய வகையில் ஒருவருக்கு ஒருவர் நிரூபிக்கக் கூடிய சாட்சியங்களையே விஞ்ஞானம் தன் இலட்சியங்களை நிலைநாட்ட துணைகளாக நாடுகிறது. இந்த முறைக்கு மாறுபட்ட அதிகாரபூர்வமான குருட்டுக்கட்டளைகளை விஞ்ஞானம் ஒப்புவதில்லை அறிவாராய்சிக்கும் சோதனை முறைக்கும் எல்லை உண்டு என்பதை விஞஞ்ஞானம் நம்புவதில்லை புது அறிவையும் புது அனுபவத்தையும் விஞ்ஞானம் வரவேற்கிறது. இது இப்படித்தான் என்ற காரணம் இல்லாத கட்டளை எதையும் உண்மை விஞ்ஞானி மதிப்பதில்லை தன்னைவிட அறிவாளிகள் உண்டு என்ற அடக்கம் தன் குற்றம் குறைகளை மறைக்காத பண்பு பிறரிடம் இருந்து எதையும் கற்றுக்கொள்ள தயங்காத எளிமை இவைகளே விஞ்ஞானியின் தன்மைகளாம் ஆராய்ச்சிச் சுதந்திரத்தை நாம் மதித்தோமானால் அது அதிகார பூர்வமான கட்டளை என்ற தத்துவத்திற்கு முரணானது என்பதை ஒப்புக்கொள்ளவே வேண்டும் ஆனால் பின்னதுதான் சமய அடிப்படையின் மூலக்கல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோடு விஞ்ஞான விடயங்களைப் பொறுத்தவரையில் ஓரளவு உலகம் முழுவதுமே ஒப்புக்கொள்ளக் காரணமான அம்சம் ஒன்று அவைகளில் இருக்கிறது ஆனால் சமயக் கொள்கைகளில் இந்த அம்சம் காணப்படவில்லை. விஞ்ஞானிகள் தம் கொள்கைகளை நாடு என்ற அரசியல் எல்லைக்குள்ளே, பூகோள சம்பந்தமான இயற்கை எல்லைகளுக்குள்ளே சிறைப்படுத்துவதில்லை ஒரு நாட்டு விஞ்ஞானிகள் இன்னோர் நாட்டு விஞ்ஞானிகளோடு ஆராய்ச்சி உண்மைகளைப் பரிமாறிக் கொள்கிறார்கள். விஞ்ஞான அடிப்படைக்கே இரகசியம் முரணானது.

ஒவ்வொரு சமயமும் தன்வேதம் ஒப்புயர்வில்லாதது, இறைவனுடைய உபதேசங்களே இவை எனவே எந்தக் குறைக்கும் அதில் இடமில்லை என்று தீர்மானமாகக் கூறுகின்றது. குறைகளே இல்லை, பிழைகளே இல்லை என்று வேதங்களுக்கு கூறப்படும் தன்மை விஞ்ஞானத்தின் அடிப்படைக்கே முரணானது குறையே இல்லாத தன்மை சமய வேதங்களுக்கு உண்டு என்பதை இப்போது அடிப்படைவாதிகளான சிலரல்லாத யாரும் வற்புறுத்துவதில்லை சமய உண்மையின ஒளியை ஏற்கும் அல்லது அந்த உண்மை ஒளிக்கு ஏற்ப இயங்கும் குற்றம் குறைகள் நிறைந்த மக்கள் மனதில் அல்லது நெஞ்சில் அந்த ஒளி சம்மந்தமாக உருவாகும் எண்ணங்களையே வேதங்கள் சொல்கின்றன.இவர்களுடைய உபதேசங்கள் குற்றங்குறை இல்லாதவை என்று நினைப்பது சரியல்ல.

வேத உபதேசங்களில் பலவற்றிற்குச் சொற்களில் காணும் பொருட்களைப் பொருளாக கொள்ள முடியாது உதாரணமாக சிருஷ்டியின் காலக்கணக்கு சிருஷ்டி ஒன்றன் பின் ஒன்றாக தொடர்பில்லாமல் திடீர் திடீர் என்று கிளம்பிய செயல்லென்று சொல்லப்படுவது வானத்தை பருபபொருளென்று பூமி அசைவில்லாத பொருள் என்றும் கூறும்கூற்று இவைகள் எல்லாம் விஞ்ஞானத்தால் தெளிந்த முடிவுகளுக்கு முரணானவை என்றாலும் சரித்திர அடிப்படை ஆத்மீக அனுபவம் இவற்றை ஆதாரமாக கொள்ளாத எந்த சமயமும் அழியாமல் வாழமுடியாது காரணம் தெரியாத முடிவுகள் பரம்பரையாக வந்த கொள்கைகள் புராணக்கதைகள் இவற்றை விலக்கி விட்டால் சமயம் என்பது இல்லாமல் போய்விடும். சமய சம்மந்தமான வேதங்கள் புராணங்கள் இவைகளில் உள்ள நம்பிக்கையை அளிக்க காரணமான முயற்சிகளையெல்லாம் சமய சாரியர்கள் கண்டிப்பதற்கு காரணம் இதுதான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகிய வாழ்க்கை

துவாரகா சிவலிங்கம்
மூன்றாம் வருடம்,
கலைப்பீடம்.

மனமும், செயலும் இணைந்ததே வாழ்க்கை. எமக்கு கிடைத்த வாழ்வை அழகியதாக அமைத்துக் கொள்ள இவ்விரண்டும் உயர்வானதாகவும், தூய்மையானதாவும் இருத்தல் அவசியம். இவற்றின் மூலம் நாம் மகிழ்வாக வாழலாம். மகிழ்வாக வாழும் போதுதான் நம் மனதில் தூய்மை சிந்தனைகளும், உயர் இலட்சியங்களும், நம்பிக்கைகளும் தோன்றுகின்றன.

வாழ்க்கை என்பது விசித்திரமானது. அது இன்பம் துன்பம் இரண்டையும் தரவல்லது. எல்லோர் வாழ்விலும் இன்பமும் துன்பமும் இருந்த போதிலும் இதில் அதிகம் துன்பப்படுபவர்கள் மனப்பக்குவம் இல்லாதவர்களே. அதாவது வாழ்க்கையின் அர்த்தத்தை, அதன் அழகை புரியாதவர்களே வாழ்வில் அதிகம் துன்பப்படுவதை நாம் நேரில் காணமுடிகின்றது. எனவே நமது வாழ்வை நல்லப்படி ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு மனத்திடம் அவசியம், அதற்கு வாழ்வைப் பற்றிய அறிவும், அதனை எவ்வாறு மகிழ்வாக அமைத்துக் கொள்ளலாம் என்பது பற்றிய சிந்தனையும் அவசியம் இருக்கவேண்டும்.

"எண்ணறிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதுகாண் "என முன்னோர் கூறியதுபோல் இம்மானிடப் பிறவியை விட உயர்வானது வேறொன்றுமில்லை. கடவுளாலே உலகில் படைக்கப்பட்டிருக்கும் நல்லவையனைத்தையும் அனுபவிக்கவும், நமது அறிவின் ஒளியாலே நம்மைப் படைத்த இறைவனின் திருவருளைப் பெற்று இன்பத்தையடையும் கருவியாக இருப்பது இம்மானிடப் பிறவியே. இத்தகைய அரிய பிறவி எடுத்த நாம் வாழ்வினை எழிலாக அமைத்துக் கொள்வதற்கு உடலாலும், உள்ளத்தாலும், செயலாலும் அழகியவர்களாக இருக்க வேண்டும்.

அழகு என்பது வாழ்வுடன் சம்பந்தப்பட்ட எல்லா அம்சங்களதும் குறைவற்ற, பூரணமான ஓர் இணைப்பு. நம் ஒவ்வொருவரையும் அழகிய சிற்பமாக அமைத்துக் கொள்ள நம்மால் மட்டும் தான் முடியும். புராதன கிரேக்கர்கள் இதனை நன்கு உணர்ந்து இருந்ததினால் தான் அவர்கள் மற்றையகலைகளைப் போல உடலை அழகாகப் பேணுவதிலும் கைதேர்ந்தவர்களாக இருந்தனர்.

தோற்றத்தில் மட்டுமன்றி நடை, உடை, பாவணை, வாழ்வை அமைக்கும் விதம் என்பவற்றிலும் அழகு பரிணமிப்பதைக் காணலாம். ஏழிலான தோற்றம், அழகிய அசைவு, எண்ணங்களின் நேர்த்தி என்பவை அழகின் படி நிலைகளாக உள்ளன. நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பாடுகள் நன்மை பயப்பனவாக மட்டுமன்றி ஒவ்வொருவர் உள்ளத்திலும் மகிழ்ச்சியை ஏற்படுத்துவனாகவும் அமைந்துள்ளன. பிறரை நேசிக்கும் இதயத்தில் தான் அன்பு சுரக்கிறது. இதன் மூலம் நாமும் எம்மைச் சூழ்ந்தோரும் நன்மையில் திழைக்கமுடிகிறது.

மகிழ்ச்சியும் இன்பமும் வாழ்வின் மூலமாகவும், சிருஸ்டியின் உற்பத்தி ஸ்தானமாகவும் உள்ளன. இதனை உபநிடதம் "இப்பிரபஞ்சம் அனைத்தும் ஆனந்தத்திலேயே பிறக்கின்றது, ஆனந்தத்திலேயே வளர்கிறது, முடிவில் ஆனந்தத்திலே அடங்குகிறது" எனக் கூறுகின்றது. இவ்வாறிருப்பின் ஏன் எமது வாழ்வில் இத்தகைய இன்பம், மகிழ்ச்சி என்பவற்றை அனுபவிக்க முடிவதில்லை எனும் ஐயம் எம்மிடத்தே எழலாம். இதனை ஸ்ரீ அரவிந்தர் என்பவர் "வாழ்வது ஒரு கலை, ஒரு சாத்திரம். இதனை மறந்து இயந்திர கதியிலே நாம் இயங்கிவருகின்றோம். வாழ்வை சீர்ப்படுத்தி, எப்படியும் வாழலாம். என்பதைவிடுத்து இப்படித்தான் வாழவேண்டும் என்பதை வகுத்துக் கொள்வதில்லை. மனம் போன போக்கிலேயே வாழ்கின்றோம். இவைதான் நமது துன்பங்களுக் கெல்லாம் காரணம்" என்கிறார். அது மட்டுமன்றி அன்றாட வாழ்வில் இறையம்சத்தை பிரதிப்பலிக்கும் அறிவு, தயை, பெருந்தன்மை, தூய்மை, மகிழ்ச்சி ஆகியவற்றை ஓரளவிலேனும் வெளிப்படுத்தினால் தான் நமது பிறப்பின் பொருள் ஓரளவேனும் வெளிப்படும் என்கிறோம்.

வாழ்வின் ஒவ்வொரு அசைவிலும் அழகு உள்ளது. பொருட்களை கவனத்துடன் பயன்படுத்துவது, அவற்றை சீரான முறையில் அழகுணர்ச்சியுடன் வைப்பது எல்லாவற்றிலும் அழகு வெளிப்படுகின்றது. யப்பானியர்கள் இதனை நன்கு பின்பற்றுகின்றனர். அவர்களின் வீடு, கோயில்களில் இதன் சிறப்பினை காண முடிகின்றது. அவர்களின் தேநீர் சடங்கு மற்றும் ஏனையோருடன் அவர்கள் பழகும் முறை எல்லாவற்றிலும் அழகு, நளினம், ஒழுங்கு, இசைவு, மகிழ்ச்சி என்பவற்றை காண முடியும் என ஸ்ரீ அன்னை கூறியதை இங்குநோக்கலாம்.

எதை நாம் அடிக்கடி காண்கின்றோமோ அது எமது குணயியல்பை பாதிக்கும் என்பது மனோதத்துவம் அறிவுறுத்தும் உண்மை. எனவே எம்மையும் எம்மை சூழ உள்ளவர்களையும் அழகியவர்களாக அமைத்துக் கொள்வதோடு எம்மைச் சூழ்ந்து காணப்படும் பொருட்களையும் அவ்வாறே அமைத்துக் கொள்ளவேண்டும். அதன் மூலம் மனதில் மகிழ்ச்சியைப் பெறமுடிகின்றது.

எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை விட்டு நாம் விலகிவிடமுடியாது. நீக்கமற நிறைந்துள்ள அப்பரம்பொருளை அடையாளம் கண்டு பேரின்பம் பெற முயற்சிக்க வேண்டும். ஏழையோ, செல்வந்தனோ, மலையோ, மலரோ எதுவாக இருந்தாலும் அவற்றில் இறைவனை காணும் போது ஆனந்த பிரவாகம் பெருகும். அதன் மூலம் எத்தகைய துன்ப சூழலிலும் கூட மகிழ்வாக வாழ முடியும். இம் மகிழ்வானது வாழ்வை அழகியதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்துக் கொள்ள அடிப்படையாகின்றது.

மனிதரின் தியாக உணர்ச்சிகள் கூட அழகின் வெளிப்பாடாக உள்ளன. ஒவ்வொருவரும் இதை நன்கு உணர்ந்து, அதற் கிணங்க செயற்பட்டு சிறந்த வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். வாழ்வின் ஆரம்பத்திலிருந்தே எல்லாச் செயல்களிலும் அழகு, சந்தோசம், இசைவு(Harmony) என்பவை வளர்வதற்கு எம்மை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். இங்கு இசைவு என்பது அழகின் ஜீவன் ஆகும். இதன் நோக்கம் இறைவனால் நமக்கென அளிக்கப்பட்ட எவ்வொன்றையும் நல்லமுறையில் பயன்படுத்துவதே. இதை சரியான முறையில் உணர்ந்து செயற்படுவது அவசியமானது.

வாழ்க்கை இன்பமானது என உணரத் தொடங்கியதும் துன்பங்கள் யாவும் நமது நிலையிலிருந்து மாறிவிடுகின்றன. இதுவே "உலகம் இறைவனின் லீலை" எனும் தத்துவத்தின் மூலமாகும். மனித வாழ்வானது மாயம், ஏமாற்றம், பொய்மை, வஞ்சகம் நிறைந்தது. அதை உதறி சொர்க்கத்திற்கு சென்று ஆனந்தமாய் இருங்கள் என கூறுவோரும் உள்ளனர். மாறாக "இந்த உலகம் இறைவனின் லீலை: இறைவனின் விளையாட்டு மையம். எனவே இறைவனை அழகனாக, இசையாக, இனிமையாக உணர்ந்து போற்றினால் உண்மையில் அது இன்பத்தை தருவதாகவும் இறைவனின் லீலை என்பதாகவும் உணர முடியும் எனக் கூறுவோரும் உள்ளனர்.

எப்படியிருந்த போதிலும் உலகில் யாவரும் இறக்க விரும்புவதில்லை. மிகவும் ஏழ்மையில் வாழ்பவன் கூட இதற்கு விதிவிலக்கானவனல்ல. இதற்கு காரணம் துயரங்களை அனுபவித்தாலும் கூட மனதின் அடித்தளத்தில் வாழ்வு மகிழ்ச்சியானது, அழகியது எனும் உணர்வு உறைந்திருப்பதே ஆகும். எனவே இவற்றை சீர்தூக்கிப் பார்க்கும் போது வாழ்வின் துன்பத்தை விட இன்பம் அதிகம் என்பது புலனாகும். இதனால் தான் வாழவேண்டும் எனும் உறுதி மனிதர்களிடம் அதிகளவில் நிலைத்திருக்கிறது.

வாழ்வின் இரகசியமும் இதுவேயாகின்றது. எமதுவாழ்வில் மகிழ்வு நிறைந்துள்ள போதும் அது மறைந்தே காணப்படுகின்றது. கல்வி, கலாசாரம், மதம் ஆகியன மூலம் மகிழ்ச்சி, ஆனந்தம், அழகுணர்ச்சி என்பவற்றை மலரச் செய்யலாம். எனவே இவ் இலட்சியத்தை கடைப்பிடித்து எந்தளவிற்கு நாம் செயற்படுகின்றோமோ அதன் மூலம் வாழ்வை அழகியது ஆக்கிக் கொள்ளலாம். அது மட்டுமன்றி மனிதவர்க்கத்திற்கு நன்மை செய்தோர் ஆவதோடு இறைவனிற்கு சேவை செய்தவர்களாகவும் ஆகமுடியும்.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வியல்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கால ஒழுக்கவியல் சிந்தனைகளில் ஜி.ஈ. மூரின் பங்களிப்பு

தி. திலீபன்
உதவி விரிவுரையாளர்
மெய்யியல், உளவியல் துறை

மனிதன் தனது உள்ளம் பற்றியும் வாழ்க்கை முறைகள் பற்றியும் சிந்திக்கத் தொடங்கிய காலத்தில் இருந்தே ஒழுக்கவியல்சார் சிந்தனைகள் தோற்றம் பெற்றன எனலாம். மனிதன் என்பவன் மூவகைப் பேரியக்கங்களை தன்னுள் அமைத்துக்கொண்டு நடமாடும் தொழிற்சாலையாக விளங்குகின்றான். விருப்பு அல்லது இச்சை என நின்ற பேராற்றல், அறிவை உள்ளீடாகக் கொண்ட சிந்தனை ஆற்றல், செயற்படும் ஆற்றல் ஆகிய மூன்றின் இணைப்பு நிலையமாகவே கருதப்பெறுகிறான். சிந்தனையை செம்மைப்படுத்தி, நேர்மையான முறையில் சிந்திக்க வைத்து ஒருவனைப் பண்படுத்தும் துறை அளவையியலாகும். அவ்வாறே உணர்ச்சியை மிகுவித்து, விரும்பிய ஒன்றை விரைந்து பெறத்துடிக்கும் மனிதனின் உயர் குறிக்கோளை உள்ளிட்ட விருப்பத்திற்கு ஆட்படுத்தி, அவனுடைய விருப்பத்தை முறைப்படுத்தி, அவ்விருப்பம் பற்றிய துறையைச் செம்மைப்படுத்தி இயக்குகிற மேனிலை அறிவியல் துறையே அழகியலாகும். அறிவு, விருப்பம் ஆகியவற்றைப் பண்பட நிறுத்திய துறைகளைப் போலவே அவனுடைய நடத்தையைச், செம்மை செய்து வளப்படுத்தும் துறையே அறவியலாகும்.

மேலும் தனிமனிதன் தன்வாழ்வோடும் சமூக வாழ்வோடும் தன்னை இணைத்துக் கொண்டு வாழும் நிலையில் காலம், இடம் ,சூழ்நிலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எவை எவை செய்யக் கூடியன என தேர்ந்தெடுக்கவும், அல்லாதவற்றை நீக்கவும், தேர்ந்து எடுத்தவற்றை செம்மையான முறையில் செயற்படுத்தவும் இவ்வாறான நிலைகளில் அவன் செயற்படுவதற்கு வேண்டிய செயலறிவை தருவதே ஒழுக்கவியலாகும். ஒழுக்கவியல் சிந்தனைகள் மெய்யியல் வரலாற்றுக் காலகட்ட ரீதியில் வெவ்வேறுபட்ட ஒழுக்கவியல் எண்ணக்கருக்களுடன் வளர்ச்சி பெற்று வந்திருந்தன.இந்தவகையில் தற்கால ஒழுக்கவியலில் மிகவும் செல்வாக்கு செலுத்தக் கூடிய இயக்கங்களில் மனவெழுச்சிக்கோட்பாடு, (Emotive Theory) இதன் பின்னணியில் மூரின் தாக்கம், அவரது நன்மை பற்றிய எண்ணக்கரு பகுப்பாய்வு, பௌதீக அதீதத்திற்கு எதிரான தாக்கங்கள் முக்கிய இடம் பெற்றிருந்தன. மூரின் "Principia Ethica" என்ற நூல் வெளிவந்ததோடு ஒழுக்கவியல் புரட்சி ஆரம்பமாகியது. இதற்கு முன்னர் காணப்பட்ட கோட்பாடுகள், சிந்தனைகள் மனக்குழப்பத்தினையும், தெளிவின்மையையும் தருவதாக இருந்தது. மூர் இவற்றை எல்லாம் மாற்றியமைத்து தெளிவுபடுத்தியிருந்தார். எனவேதான் ஒழுக்கவியலில் மூரின் சிந்தனைகள் ஒரு திருப்பு முனையாக விளங்கியது எனலாம்.

ஒழுக்கவியலில் சமகால பகுப்பாய்வு ஒழுக்கவியலாளர்கள் ஒழுக்கவியல்சார் எண்ணக்கருக்களையும், கருத்துப்படிமங்களையும், ஒழுக்கக் கொள்கைகளையும் தர்க்க ரீதியாக பகுப்பாய்வு செய்து அதனடிப்படையில் ஒழுக்கவியலின் தாற்பரியம் என்ன என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கிக்காட்ட முன்வந்தனர். அந்தவகையில் ஒழுக்கவியல் எண்ணக்கருவான நல்லது, நேரியது, சரியானது போன்றன பற்றி பகுப்பாய்வுகள் செய்யப்பட்டன. மேற்குறிப்பிட்ட எண்ணக்கருக்களுள் நன்மை (Good) எனும் எண்ணக்கருவானது தற்கால பகுப்பாய்வு மெய்யியலாளரான மூரினால் தர்க்க ரீதியாக ஆய்வு செய்யப்பட்டது.

ஒழுக்கவியல் பிரச்சினைகள், விவாதங்கள் பற்றிய பங்களிப்பில் மூர், அயர் என்ற இருவரும் பிரதான இடம் வகிக்கின்றனர். ஒழுக்கவியலில் அதன் எடுப்பு நிலைப்பாட்டில் விளங்கிக் கொள்வதில் மூர், அயர் இருவருடைய பங்களிப்புக்கள் வெவ்வேறு நிலைப்பாட்டில் இருந்தன. மூரின் நோக்கம் நன்மை என்ற பதம் தன்னளவிலே நன்மையாகாது என்று கூறுவது பொதுவாக அதன் அகத்தளவிலே நன்மையாக இருப்பது தனித்துவமானது. எளிமையானது, விபரிக்க முடியாது, பகுப்பாய்வு செய்ய முடியாது என்ற கருத்துக்கு உள்ளாகிறது. இங்கு நன்மையை ஒரு சாதாரண மனிதன் பயன்படுத்தும் ஒரு நிலைக்கு கொண்டு வருகிறார். மூர் கூற விரும்புவது மொழியிலுள்ள சில பதங்கள் அடிப்படைப் பதங்களாக இருக்கின்றன. அவற்றை நோக்கி நாம் ஒரு விளக்கத்தை கேட்பது சாத்தியமில்லை. இவ்வாறுதான் அவர் நன்மை பற்றிய எண்ணக்கருவை பகுப்பாய்வு செய்ய முடியாது எனக் கூறுகிறார்.

மேலும் நன்மை எனும் எண்ணக்கரு தொடர்பாக பாரம்பரிய ஒழுக்கவியலாளர்கள் கொண்டிருந்த நிலைப்பாட்டை முதலில் மூர் சுட்டிக் காட்டினார். மூர் தமது "Principia Ethica" எனும் நூலில் பாரம்பரிய ஒழுக்கவியலாளர்களான இயற்கைவாதிகள் நல்லது எனும் எண்ணக்கருவை ஒழுக்கவியல் செயல்களுக்கு மதிப்பீடு செய்வதற்கு நன்கு பயன்படுத்தியிருந்தனர். ஆனால் இவர்கள் நல்லது என்றால் என்ன? கெட்டது என்றால் என்ன? என்று தெளிவாக ஆராயவில்லை. நன்மை என்பது பற்றிய சொல்லை மட்டுமே நன்கு பயன்படுத்தியிருந்தனர்.

- எப்போதும் உண்மை பேசுவது நல்லது
- பெற்றோருக்கு கீழ்படிவது நல்லது
- ஏழைகளுக்கு உதவுவது நல்லது
- களவு செய்வது நல்லது அல்ல
- கொலை செய்வது நல்லது அல்ல

மேற்குறிப்பிட்ட வாக்கியங்கள் மூலம் நல்லது எனும் சொல்லைக் கொண்டு எவை எவை ஒழுக்கச் செயல்கள், எவை எவை ஒழுக்கமற்ற செயல்கள் என்று வேறுபடுத்தி காட்டுவதற்கு பாரம்பரிய ஒழுக்கவியலாளர்கள் முயற்சித்து இருக்கிறார்கள். அத்தோடு அவர்கள் நல்லது எனும் சொல்லானது ஒழுக்க விழுமியங்களை அல்லது ஒழுக்க செயல்களை மதிப்பீடு செய்து காட்டும் ஓர் இயற்கைப்பதம் என்றும் கூறியிருந்தனர். இதன் மூலம் அவர்கள் இயற்கைவாத அடிப்படையில் நன்மையை வாதிட்டு இருந்தனர். ஆனால் பாரம்பரிய ஒழுக்கவியலாளர்கள் குறிப்பிட்டது போல் நன்மையை விளக்க முடியாது என மூர் கூறுகின்றார். அவ்வாறு விளக்க முற்படின் அது இயற்கைவாதப் போலியை உண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணுகிறது ஆகும். எனவே மூர் நோக்கில் நன்மை என்ற பதம் ஒழுக்கச் செயல்களை மட்டும் மதிப்பீடு செய்து காட்டுகின்ற இயற்கைப் பதமாக மட்டும் விளங்கவில்லை. அது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு கருத்துக்களில் பயன்படுத்தப்படுகிறது. இதனாலேயே நன்மையை வரைவிலக்கணப்படுத்த முடியாது எனக் கூறினார்.

(Moore asserted that philosophical arguments can suffer from confusion between the uses of a term in particular argument and the definition of the term, He named this, confusion the naturalistic fallacy. For example – An Ethical argument)

மேலும் மூர் விளக்குகையில் ஒரு குருடனுக்கு மஞ்சள் நிறத்தினைப் பற்றி விளக்குவது எவ்வளவு கடினமோ, அது போலவே நன்மை பற்றிய எண்ணக்கருவுமாகும்.

(Similarly, we cannot describe to a blind person exactly what yellow is? We can only show a sighted person a place of yellow paper or a yellow scrap of cloth and say' that is yellow')

நன்மை என்ற பதம் நாம் பயன்படுத்துகின்ற சந்தர்ப்பத்திற்கேற்பவும், சூழ்நிலைக்கேற்பவும் மாறுபடும் தன்மையானது. இதனால் நன்மை என்ற பதம் விசேடமாக ஒரு குறிப்பிட்ட விடயத்தினை மட்டும் தெளிவுபடுத்துகிறது எனக் கூறமுடியாது. இதற்கு சில உதாரணங்கள் வருமாறு,

- அந்த ஓவியம் நல்லது - இங்கு "நல்லது" என்பது அழகை விளக்குவதற்காக வபயன்படுத்தப்பட்டுள்ளது.
- அந்தப் பேனா நல்லது - இங்கு "நல்லது" பேனா தரத்தையும், பயன்பாட்டையும் குறிக்கின்றது.
- அது நல்ல சாப்பாடு - இங்கு "நல்லது" என்பது சாப்பாட்டின் சுவையினை குறிக்கிறது.
- இன்று நல்ல மழை பெய்தது - இங்கு "நல்லது" என்பது அதிகமான எனும் கருத்தினை குறிக்கிறது.
- அவளுக்கு நல்ல அடி விழுந்தது - இங்கு "நல்லது" என்பது கொடூரமான செயலில் விளக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட வாக்கியங்களில் நல்லது என்பதற்கு வெவ்வேறு கருத்துக்கள் வெளிப்படையாக காட்டப்படுவதைக் அவதானிக்கலாம். ஆனால் சில வாக்கியங்களில் நல்லது என்பதற்கு வெளிப்படையான கருத்துக்கள் காட்டப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக அவன் நல்லவன் எனும் வாக்கியத்தில் நல்லது எனும் சொல் வெளிப்படையான ஒரு கருத்தை தருவதில்லை. இதன்படி எச்சந்தர்ப்பத்தில், எத்தேவைக்காக அவன் நல்லவன் என்று கூறப்பட்டதோ அதற்கேற்ப அந்த வாக்கியத்தின் கருத்தும் தீர்மானிக்கப்பட வேண்டியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனாலேயே மூர் நன்மை என்பதனை விளக்க முடியாது எனக் கூறுகிறார். (In addition to categorizing 'good' as indefinable, Moore also emphasized that it is a non – natural property. This means that it cannot be – empirically or scientifically tested or verified)

மூர் மேற்கூறப்பட்டவாறு, கையாண்ட மாதிரியே பிந்திய விக்கின்ஸ்ரைனும் மொழியின் அர்த்தம் பற்றி தெளிவுபடுத்தியுள்ளார். அதாவது மொழியின் அர்த்தம் பற்றிய விடயத்தில், அர்த்தமானது பயன்படுத்துகின்ற சந்தர்ப்பங்களுக்கேற்பவும், தேவைகளுக்கேற்பவும் மாறுபடும் என விளக்கிக்காட்டினார். இதனாலேயே மொழியின் பயன்பாட்டை கருவிப்பெட்டிக்கு ஒப்பிட்டுக்காட்டினார். எடுத்துக்காட்டாக "அறிதல்" எனும் சொல்லை எத்தகைய சந்தர்ப்பங்களில் பயன்படுத்துகின்றோம் என்பதனை நோக்கினால்,

- அவளை நான் அறிவேன்.
- சோக்கிரடீஸ் பற்றிய அறிவுண்டு
- கண்டி பற்றிய அறிவு எனக்குண்டு.
- மொழி பற்றிய அறிவுண்டு

போன்ற பலவற்றை குறிப்பிடலாம். எனவே இவற்றுடைய உண்மை யாதெனில் சந்தர்ப்பங்களுக்கேற்ப மாறுபடும் தன்மை என்பதாகும். மேலும் நன்மை பற்றி வில்லியம்லில்லி கூறுகையில் நான் "சுமித் நல்லவன்" என்று கூறுகிறேன். ஆனால் எனது நண்பன் சுமித் நல்லவன் அல்ல என்று கூறுகின்றான். நான் சுமித் நல்லவன் என்பதற்கு பல ஆதாரங்களைக் காட்டி நண்பனுக்கு எடுத்து விளக்கினேன். சொன்னவற்றைக் கேட்டும், சுமித் நல்லவன் அல்ல என்று நண்பன் கூறினான். இங்கு சுமித் நல்லவனா, கெட்டவனா என்பதனை அறிய முதல் நானும் நண்பனும் நல்லது என்றால் என்ன? என்பது தொடர்பாக ஒரு வரையறைக்கு வர வேண்டும் எனக் கூறினார்.

மூர் நன்மை பற்றிய எண்ணக்கருவில் இப்பிரச்சினையை ஏற்படுத்தியக் காரணம் இயற்கைவாதிகள், பயன்பாட்டுவாதிகள் கையாண்ட முறையேயாகும். இவர்களுடைய நோக்கில் நன்மையும், மகிழ்ச்சியும் ஒரே வார்த்தையில் சமமானது என்பதாகும். இதனை பின் தொடர்ந்து வந்தவர்களும் அவ்வாறே பயன்படுத்தினர். இதில் மோசமானது என்னவெனில் நன்மை எல்லா சந்தர்ப்பங்களிலும் மகிழ்ச்சியைத் தரும் என்ற கருத்தினை கொண்டிருந்தார்கள். அது எவ்வாறு? இதனாலேயே மூர் ஒரு தெளிவான முறையை கையாண்டு விளக்கியிருந்தார்.

நன்மை பற்றிப் பேசும்போது இதனை இன்னொரு விதத்திலும் கூறலாம். இறையியலாளர்கள் இறைவனுக்காக செய்பவை யாவும் நன்மையான சித்தமாகும். இதனை மூர் இயற்கைவாதப் போலியோடு தொடர்புபடுத்தினார். இதுபோன்றே நன்மை பற்றிய விடயத்தினையும் விளக்கியுள்ளார். அவரது கருத்தில் ஒழுக்கவியலாளர்களே ஒழுக்கவியல் ஆய்வுகளில் சில மனக்குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசித்த கிரேக்க மெய்யியலாளர்களான அரிஸ்ரோட்டில், எபிக்கூரஸ் போன்றோர்கள் நன்மை என்பதனை முழுக்க முழுக்க இன்பம் என்றே கூறுகின்றனர். இன்னும் பிளேட்டோ நன்மையை கருத்துலகுடன் தொடர்புபடுத்துகின்றார். மூரின் கருத்தில் அவர் இன்பம் என்பதோடு முரண்படவில்லை. அவருடைய கேள்வி நன்மை என்பது அதனளவில் முழுமையான பொருளா? என்பதோடுதான் தொடர்புபடுத்தி இப்பிரச்சினையை விளக்கிறார். பொதுவாக இன்பவாதிகளின் நோக்கில் நன்மை என்பது பயன்தரக் கூடியது அல்லது இன்பம் தரக்கூடியது என்ற அர்த்தத்தில் கையாளுகின்றார்கள். நன்மை என்பது ஒரு ஐயப்பாட்டிற்குரிய விடயம் என்பதோடு நாம் இன்பத்தைத்தராத விடயங்களில் கூட நன்மை என்பதைப் பயன்படுத்துகிறோம். அப்படியானவை பல காணப்படுகின்றன. இவற்றை எல்லாம் ஆராயும் போது "Pleasure as the meaning of good" என்று நினைப்பது இயற்கைவாதப் போலியை உண்டுபண்ணுகிறதாகும். அத்தோடு நன்மை என்பது எந்தவொரு இயற்கை உடமைகளோடு எவ்விதத்திலும் உடன்பாடுடையதல்ல என மூர் விளக்குகின்றார்.

மேலும் மூர் ஒழுக்கவியலில் நன்மை பற்றிய எண்ணக்கருவினை விளக்கியிருந்த போதிலும் அவருக்கெதிரான சில விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன. அந்தவகையில் அறிவியல் அடிப்படையாக விளங்கும் நன்மை என்பதனை விபரிக்க முடியாது என எடுத்துக் கொண்டால் அறிவியல் ஆராய்ச்சியே பயனற்றதாகிப் போய்விடும் என விமர்சிக்கின்றனர். இதே நிலையினை தர்க்கப்புலனறிவாதிகளும் கொண்டிருந்தனர்.

தற்கால மெய்யியல் சிந்தனைப்பள்ளிகளில் தர்க்கப்புலனறிவாதக் கருத்துக்களும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மெய்யியலாளர்கள, கணிதவியலாளர்கள் போன்றோர்களால் உருவாக்கப்பட்டதே இச்சிந்தனை. இவர்களுடைய நோக்கில் பௌதீக அதீத சிந்தனையை மெய்யியலிருந்து நிராகரிப்பதேயாகும். தர்க்கப்புலனறிவாத சிந்தனையாளருக்கு அடிப்படையாக இருந்தவர்களில் நவீனகால அனுபவமுதல்வாதியான "David Hume" குறிப்பிடத்தக்கவராவார். இச்சிந்தனையாளர்கள் ஒழுக்கவியல் சிந்தனைகளை பௌதீக அதீதத்திற்குள்ளேயே உள்ளடக்கி நோக்கினர். எடுத்துக்காட்டாக "இவ்வுலகத்தில் நன்மை செய்தால் சுவர்க்கம் செல்லலாம்" என்பதாகும். மேற்குறிப்பிட்ட இத்தகைய கூற்றினை அனுபவத்தில் வாய்ப்புப்பார்க்க முடியாது என்பதனால் அவற்றினை நிராகரித்தார்கள்.

மூர் பௌதீக அதீத சிந்தனைகளில் பல பிரச்சினைகளைச் எதிர்ப்பதில் தீவிரமாக இருந்தனர். ஆனாலும் Hume போல முற்றாக நிராகரித்து விடவில்லை. பொதுவாக பௌதீக அதீதவாதிகள் ஒழுக்கவியலினை பௌதீக அதீதத்தின் அடிப்படையில் எது உண்மை என பார்க்கின்றார்கள். இறையியல்வாதிகள் கடவுள்தான் ஒழுக்கவியலின் அடித்தளமாக விளங்குகிறது என்றனர். கிறிஸ்தவ ஒழுக்கவியலில் இது அடிக்கடி சுட்டிக்காட்டப்பட்டது. நாம் அன்பு செலுத்த வேண்டும் ஏனெனில் கடவுள் நமக்கு நன்மை செய்வார். கடவுள் அதனை விரும்புகிறார் கூட. ஆகவே இங்கு உண்மையில் அன்பின் உண்மையான ஈர்ப்பு என்ன? என்பதனை அறியவும், அத்தோடு கடவுளின் அன்பினை அறியவும் வாய்ப்பில்லாமல் இருக்கின்றது. இத்தகைய பௌதீக அதீத நிலைப்பாட்டில் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகள் இருப்பதாக மூர் சுட்டிக்காட்டுகின்றார். குறிப்பாக முடிவில்லாத நன்மை பற்றி பௌதீக அதீதவாதிகள் கூறுவதாக மூர் கூறுகின்றார்.

மேலும் மூர் பௌதீக அதீத மொழிபற்றி மிகவும் கலவரம் அடைந்திருந்ததோடு பௌதீக அதீதம் தொடர்புடைய சொற்களையும், மொழி உணர்வுடைய சொற்களையும் அவர் ஒப்பிட முயன்றார். ஏனெனில் அவை ஏற்படுத்தும் நம்பமுடியாத மனித சிந்தனை கடந்த விடயங்களை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. உதாரணமாக மெக்டகார்ட் என்ற மெய்யியலாளரது கூற்றுக்களில் முக்கியமானதொன்று "நேரம் என்பது உண்மையல்ல" என்பதாகும். இவ்வித நிலை தற்காலச் சிந்தனைக்கு பொருந்தாது என்றும், எல்லா விடயங்களையும் மொழிப்பகுப்பாய்விற்கு உட்படுத்த வேண்டும் எனவும் கூறினார்.


| | | |
|---|---|---|
| ❖ அனஸ்,எம்.எஸ்.எம் | 2006 | மெய்யியல் - கிரேக்க மெய்யியல் தொடக்கம் தற்காலம் வரை. |
| ❖ ................................ | 2003 | மெய்யியல் அறிமுக உரைகள். |
| ❖ வில்லியம் லில்லி | 1966 | அறவியலுக்கு ஓர் அறிமுகம். |
| ❖ நாராயணன்.க | 1989 | மேலைநாட்டு மெய்ப்பொருள். |
| ❖ இராதாகிருஸ்ணன்.ச | 1970 | கீழை மேலைநாடுகளில் மெய்ப்பொருளியல் வரலாறு |
| ❖ முத்துமோகன்.க | 2002 | ஐரோப்பிய தத்துவங்கள். |
| ❖ ஜமாஹிர்.பி.எம் | 2010 | மெய்யியல் பிரச்சினைகளும் பிரயோகங்களும். |
| ❖ கிருஸ்ணராஜா.சோ | | பகுப்பாய்வு மெய்யியல் பற்றிய கட்டுரை. |

- G.E Moore — Principia Ethica
- A.C Ewing — Ethics
- www.answers.com
- www.iep.utm.edu




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயமும், விஞ்ஞானமும்

**திருஞானசம்பந்தர் கேதீஸ்வரன்**
மூன்றாம் வருடம்,
இணைந்த சுகாதார, விஞ்ஞான கற்கையில் பீடம்.

இந்து சமயம் சமயங்களுக்கெல்லாம் முன்னோடியும், முதன்மையுமான சமயம். ஒரு வரையறைக்குள் அடக்கி விட முடியாதளவிற்கு பெரியது. ஆராய்ச்சிக்கு உட்படுத்த முடியாத அளவு தொண்மையானது. ஏனைய அனைத்து சமயங்களாலும் கூறப்பட்ட அனைத்து மார்க்கங்களும் இந்து சமயத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே, இதையே ஆதிச் சமயம் என்றும் ஏனைய சமயங்கள் இந்துசமயத்தில் கூறப்பட்ட அடிப்படை கருத்துக்களில் ஒன்றையேனும் அடியொற்றி உருவாக்கப்பட்டவை எனவும் கூற முடியும்.

சிறு குழந்தை முதல் அறிவில் முதிர்ந்த ஞானிவரை இறைவனை அடைவதற்கு பல்வேறு வழிமுறைகளை கூறுகின்றது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று இல்லறத்தினூடும் துறவறத்தினூடும் இறைவனை அடையும் வழிகளை விளக்குகின்றது. பாமரனுக்கு உருவ வழிப்பாட்டையும் ஞானிகளுக்கு அருவ வழிப்பாட்டையும் எடுத்தியம்பியுள்ளது.

இவ்வாறு பரந்த சமுத்திரம் அளவு பரவிக் கிடக்கும் இந்து மார்க்கம் கூறும் விஞ்ஞான உண்மைகள் ஏராளம். இதுவரை கண்டுப்பிடிக்கப்பட்ட விஞ்ஞான உண்மைகளையும் இனிமேல் அறியப்பட வேண்டிய இன்றைய விஞ்ஞானிகளின் சிந்தனைக்கு கூட எட்டாத விஞ்ஞான தகவல்களையும் இந்து சமயமும், சமய நூல்களும் விளக்கி நிற்கின்றன. இவை பெரும்பாலும் மறைப்பொருள் கருத்துக்களாகவே கூறப்பட்டுள்ளன. எனவே இவற்றை விளங்கிக் கொள்வதற்கு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. மேலும் மொழியறிவு கொண்டவர்கள் விஞ்ஞான அறிவற்றிருப்பதாலேயோ அல்லது அதற்குரிய பாதையில் விளக்கம் காண முயற்சிக்காமையினாலேயோ இன்று வரை இவை மறைப்பொருள் கருத்துக்களாகவே தங்கிவிட்டன. பண்டைய நாகரிகங்களின் கலை, இலக்கியம், பண்பாடு விஞ்ஞானம் என்பன அவற்றின் சமயம் சார்பாகவே கட்டியெழுப்பட்டன. கீழைத்தேய நாகரிகம் போலல்லாது மேலைத்தேய நாகரிகங்கள் மெய்ஞானத்திலிருந்து விஞ்ஞானத்தை வேறுப்படுத்தி கையாண்டதால் அவர்களால் விஞ்ஞானத்தில் ஒரு சீரிய நிலையை அடைய முடிந்தது. நமது அறிஞர்கள் இன்றுவரை அதற்கான உத்திகளை கையாளவில்லை என்பது வருத்துத்துக்குறிய உண்மை. எனவே எமது சமய சமுத்திரத்தில் விஞ்ஞான உண்மைகள் புதையல்கள் போல அடி ஆழத்தில் தங்கிவிட்டன.

பெரும்பாலான இந்துக்களுக்கு பகவத்கீதையில் ஒரு வரி கூட தெரியாது. பெரும்பாலானவர்கள் வேத ஆகம நூல்களை கண்களால் கூட கண்டதில்லை. சித்தர் பாடல்களும் உபநிடதங்களும் இன்றைய இளைய சந்ததியினருக்கு என்னவென்றே தெரியாத அருஞ்சொற்களாகிவிட்டன. தமிழ் வேதமான தேவார திருவாசகங்களில் பொதிந்துள்ள விஞ்ஞான உண்மைகள் தான் எத்தனை. பின் நாளைய டார்வினின் பரிணாமத் தத்துவத்தையும் அண்மைக்காலத்து உளவியல் விஞ்ஞான மேதைகளின் கருத்துக்களையும் தான் மாணிக்கவாசகர் சிவபுராணத்தில் அன்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல் மிருகமாகிப்
பறவையாய் பாம்பாகிக் கல்லாய் மனிதராய்ப்
பேயாய் கணங்களாய் வல்லசுரராகி மனிதராய் தேவராய்"

என்றவாறு இதனை முழுமையாக ஆராயப்பட்டிருந்தால் பரிணாமத் தத்துவமும் உளவியற் தத்துவங்களும் தானே வழிப்படும். மருத்துவ விஞ்ஞானத்தில் இந்துக்களின் வளர்ச்சி மலைக்க வைக்க கூடியது. மூன்றே விரல்களினால் நோயாளியின் முன்கைப்பற்றி அவ்வுடலின் சகல நோய்களையும் அச்சொட்டாக கண்டறிந்த குறித்த நோய்க்கு மட்டும் பக்கவிளைவற்ற மருந்துகளை தந்தது மட்டுமன்றி அக்காலத்திலேயே அறுவை சிகிச்சைகளையும் மேற்கொண்டது பற்றி மருத்துவ உடற் கூற்று விஞ்ஞானிகளாம் காலக்கணக்கறியா சித்தர்களின் பாடல்களிலேயே அறியக்கிடக்கின்றது.

கையில் வெண்ணெய்யை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவது போல் நம்மிடம் உள்ள சீறிய அறிவைப் பயன்படுத்தாது மேலைத்தேயத்தின் விஞ்ஞான சாதனைகளில் மலைத்து நிற்கின்றோம். மேலைத்தேயத்தின் விஞ்ஞானத்தில் அளப்பரிய வளர்ச்சி ஏற்பட்டது 16ம் நூற்றாண்டிற்கு பிற்பட்ட காலத்திலேயே ஆகும். அக்காலப்பகுதியிலேயே மேலைத்தேயத்தின் வருகை இந்திய உப கண்ட பிரதேசங்களில் ஏற்பட்டது. அவர்களால் எமது தேசத்திலிருந்து கவர்ந்து செல்லப்பட்ட செல்வங்களில் ஒன்றான அறிவுச் செல்வத்தின் விளைவாகவே இது சாத்தியமாயிற்று.

நாம் மொழியின் இலக்கணத்தையும் சொல் வளத்தையும் ரசித்து இலக்கியங்களாக கண்ட வேளை ஆன்றோர் எடுத்தியம்பிய கருத்துக்களின் உள்ளர்த்தத்தை மேலைத்தேய அறிஞர்கள் உணர்ந்துக் கொண்டமையினாலேயே அவர்கள் விஞ்ஞானிகளானார்கள். நம்மை ஆண்டவர்களானார்கள். நாங்கள் அவர்களின் அடிமைகளாக இருந்தோம். இவ்வாறாக அளப்பரிய விஞ்ஞான தகவல்களை அறியாமையினாலேயோ பிறர் அறியக் கூடாது என்ற தன்னலத்திலேயோ தொலைத்துவிட்டோம். எமது சமய நூல்கள் எவ்வளவு தூரம் விஞ்ஞான உண்மைகளை உள்ளடக்கியுள்ளனவோ அந்தளவிற்கு எமது சமய சடங்குகள் மனித உடல் உள ஆரோக்கியம் சார்ந்த நற்பலன்களைத் தருவதோடு விஞ்ஞானம் சார்ந்தவையாகவே உள்ளன.

ஆலய வழிப்பாட்டிலேயுள்ள அட்டாங்க நமஸ்காரம், பஞ்சாங்க நமஸ்காரம், அடியழிப்பு போன்றவற்றையும் குழந்தைகளுக்கு காது குத்தல் போன்ற சடங்குகளும் உடலியல் விஞ்ஞானத்தை மதத்துடன் இணைந்த பண்பாட்டுக் கோலங்கள், ஆலயம் முன்பாக மிகச்சிறந்த கிருமிநாசினியான கற்பூரம் எரித்தல் மூலம் ஆயிரம் கணக்கிலும் இலட்சக் கணக்கிலும் பக்தர்கள் கூடும் இடத்தில் தொற்று நீக்கும் சுகாதார விஞ்ஞானம் செயற்படுகிறது.

உடலின் சகல உறுப்புக்களையும் வலுப்படுத்தும் யோகாசனம் இந்துக்களால் உருவாக்கப்பட்ட மிகச்சிறந்த உடற்கூற்று விஞ்ஞானம். திருமூலர் கூறும் " உடல் வளர்ந்து உயிர் வளர்க்கும்" செயன்முறை அது. எனவே இந்து மதமும் அது கூறும் வாழ்வியல்களும் வெறும் மாயைகளால் உருவாக்கப்பட்டவையல்ல. விஞ்ஞான அடிப்படையிலான திடமான கொள்கைகளின் அடிப்படையில் உருவான கோபுரங்கள் என்பதை அனைவரும் மனங் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு இனிவரும் காலங்களிலாவது எமது சமயத்தின் உன்னதத்தையும் மேன்மையையும் உணர்ந்து அதைப் போற்றி பாதுகாப்பதோடு அதன் பெருமைகளை உலகறியச் செய்திட இந்து சமயிகள் அனைவரும் முன்வர வேண்டும்.

**"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"**

---

### அஷ்ட மூர்த்திகள்

பவன் சர்வன் பசுபதி வீமன்
உக்கிரன் மகாதேவன் வீமன்
ருத்தரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைளும்,
# கீழைத்தேய மதங்களும்

சசிகலா சண்முகம்
விடுகை வருடம்,
கலைப்பீடம்.

**"கற்றதனால் ஆய பயனென் கொள் - வாலறிவான்
நற்றாள் தொழார் எனின்"**
என்கிறது வள்ளுவம்.

ஒருவன் எத்துணைத்தான் கற்றறிந்தாலும் அவன் கடவுளை தொழுது கொள்ளாவிட்டால் அந்தக் கல்வியில் யாதொரு பயனுமில்லை என்பதே இதன் கருத்தாகும். காரியத்தின் கடைத்தொகையை கேட்போமாக. தேவனுக்கு பயந்து அவரது கற்பனைகளை கைக்கொள்ளுங்கள். எல்லா மனிதர் மீதும் விழுந்த கடமை இதுவே என்கிறது பரிசுத்த வேதாகமம். கடவுள் வழிபாடு இதன்வழி கடமையாக்கப்பட்டுள்ளமையை காணலாம்.

கலீமா கூறுதல், நோன்பிருத்தல், சக்காத்து செய்தல், ஹஜ் சொல்லுதல் ஆகிய கடமைகளுடன் ஐந்து நேர தொழுகையும் கட்டாயமாக்கியுள்ளது இஸ்லாம். ஐந்துக் கடமைகளையும் ஆண்டவனை நேசிக்கும் மார்க்கமாக அது காட்டுகிறது. குறிப்பாக ஒரு கடவுளின் பெயரைக் குறிப்பிட்டு கௌதமபுத்தர் போதிக்காவிட்டாலும் கூட புத்தம், சங்கம், தர்மம் ஆகிய மும்மணிகள் ஆசிர்வாதம் மனிதனுக்கு அவசியமான திரிபீடத்திலே அவர் கூறுகின்றார். அதுவே பரிநிர்வாணத்திற்கு செல்ல கருமாவை அறுக்கும் வழி என்பது அவர் போதனை.

இவ்வாறு கடவுளின் பால் மனிதனை ஈர்த்து செல்லும் மதங்களை மனிதர்கள் பின்பற்றுதல் அவர்கள் வையகத்தில் வாழ்வாங்கு வாழ பேருதவியாக அமையும் என்பது இரு கருத்திற்கு இடமில்லாத ஒரு விடயம். அதனாலேயே பல சந்தர்ப்பங்களில் மதங்களை ஒரு வழிகாட்டு முறை என்பதற்கு மேலாக ஒரு வாழ்க்கை நெறி அல்லது மார்க்கம் என்பதாக நாம் நம்புகின்றோம்.

இத்தகைய மதங்கள் அவை கீழைத்தேய மதங்கள் என்று அழைக்கப்படும் பௌத்தம், இந்து , இஸ்லாம், போன்றவையாக இருக்கட்டும் அல்லது மேலைத்தேய மதம் என்று அழைக்கப்படும் கிறிஸ்தவமாகட்டும் அவற்றின் கோட்பாடுகளும், சித்தாந்தங்களும் தத்துவங்களும் எந்தளவிற்கு மனித உரிமைகளை பேணி பாதுகாக்கின்றன அல்லது அவற்றை மீறுகின்றன அல்லது அவற்றை அனுபவிப்பதற்கு எந்தளவிற்கு தடையாக உள்ளன என ஆராய முற்படும் எவரும் முதற்கண் மனித உரிமைகள் பற்றி ஒரு சுருக்க விரரணத்தை அறிமுகம் செய்தல் அவசியமாகின்றது.

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் அனுபவிக்க உரித்துடையவையனைத்தும் மனித உரிமைகள் என நாம் சுருக்கமாக அறிமுகம் செய்யலாம். எடுத்துகாட்டாக தனது உடல் சார்ந்த கட்டாயத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய ஒருவன் உழைப்பதற்கும் அதற்கான வருமானத்தைப் பெற்று அனுபவிப்பதற்கும் உரித்துடையவன் ஆகின்றான். சமூகத்தில் பிற மனிதனைப் போல் வாழ விரும்புகின்ற எவர் ஒருவரும் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்க உரித்துடையவராகிறார். இத்தகைய உரித்துடைய காரியங்கள் அனைத்துமே அவனது உரிமைகளாகும்.

இவ்வுரிமைகள் ஒன்றில் அடிப்படை உரிமைகளாகவோ, மனித உரிமைகளாகவோ இருக்கலாம். ஒரு நாட்டின் அரசியற் சாசனத்தில் விதந்துரைக்கப்பட்டவை அடிப்படை உரிமைகள் என்றும் ஐக்கிய நாடுகள் சபை போன்ற உலக அமைப்புக்களின் சாசனங்களிலும் பட்டயங்களிலும் வரையப்பட்டு நாடுகளால் கையொப்பமிடப்பட்டு சட்டவாக்கம் பெற்றவைகள் மனித உரிமைகள் என்றும் கூறுமாறு அமையும். உதாரணமாக இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பின் அத்தியாயம் - 3 இன்-10-14 உறுப்புரைகளில் கூறப்பட்டுள்ளவைகளும் நாம் அனுபவிக்கத் தக்கவைகளுமாய் இருப்பவை இலங்கை குடிமகன் ஒருவனின் அடிப்படை உரிமைகளாகும் அதே நேரத்தில் 1957ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சிறுவர் உரிமைகள் சாசனத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ள

1. வாழும் உரிமை
2. அபிவிருத்தி உரிமை
3. பங்கேற்கும் உரிமை

போன்ற உரிமைகள் அனைத்தும் இலங்கை சிறார்கள் யாவரும் அனுபவிக்கத்தக்க உரிமைகளாகும்.

இம்மனித உரிமைகள் யாவும் எந்தெந்த பிரிவினருக்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமோ அந்தந்த பிரிவினருக்கு இயைபுடையதாகும் வண்ணம் விசேட சாசனங்கள் மூலம் வரையறுக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதற்குச் சான்றாக பெண்கள் உரிமைகள், சிறுவர் உரிமைகள், சிறுபான்மையினர் உரிமைகள், அங்கவீனர் உரிமைகள், நுகர்வோர் உரிமைகள், ஆதிக்குடிகள் உரிமைகள் என்பவற்றை இங்கு சுட்டிக் காட்டலாம்.

எமது மதங்கள் யாவும் மனித உரிமைகளைப் பேணும் பல சிறப்பம்சங்களை கொண்டிருப்பது நாம் மகிழ்ந்து நினைவில் கொள்ள வேண்டிய ஒன்று. அவை மனிதன் வாழ வேண்டிய வழிமுறைகளை கூறுவதினின்று மனித உரிமைகளுக்கு பெருமதிப்பு அளித்துள்ளன. சக மனிதனை நேசிப்பதன் மூலம் அவர்களின் உரிமைகளை மதிப்பதற்கு அவை கற்றுக் கொடுத்துள்ளன. பிறரிடத்தில் அன்பு காட்டுவாயாக என்கிறது இந்து மதம். அன்பில்லாதவன் தேவனை அறியான். ஏனென்றால் தேவன் அன்பாகவே இருக்கிறார் என்கிறது கிறிஸ்தவம். உலக மக்கள் அனைவரும் சகோதரர்கள் என்ற சர்வதேச சகோதரத்துவம் பேசுகிறது இஸ்லாம். அன்பே உலக மகாசக்தி என்கிறது. பௌத்தம்.
மற்றவர்களின் உரிமைகளை மீறுவதற்கு எதிராக அவை கடுமையான விதிகளை வகுத்துள்ளன. பொய்,களவு, காமம், சூது, கொலை என்பன பஞ்சமாபாதகங்கள் என இந்து மதம் விபரிக்கிறது. இதே விடயங்களை களவு எடுக்காதிருப்பாயாக, பொய் சொல்லாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக போன்ற பத்துக் கட்டளைகள் மூலம் விவிலியம் விதந்துரைக்கிறது. இத்தகைய உரிமை மீறலுக்கெதிரான கண்ணுக்கு கண் பல்லுக்கு பல் என்ற கடுமையான சட்டத்தை இஸ்லாம் வகுத்துள்ளமையையும் இங்கு நோக்கற்பாலது. மனிதர்களை மட்டுமல்ல விலங்குகளைக் கூட கொல்லாதிருக்க வேண்டும் என்பதை தனது வாழ்வில் செய்துக் காட்டினார் புத்தப் பிரான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் இத்தகைய மதங்களின் பல கோட்பாடுகளும் அவற்றை பின்பற்றுபவர்களால் வழங்கப்படும் வியாக்கியானங்களும் எந்தளவிற்கு இவை மனித உரிமைகளை பாதுகாக்க உதவியுள்ளன என்பதை கேள்விக்குறியாக்கியுள்ளது. சில எடுத்துக் காட்டுக்களை இங்கு நோக்குவோம். இந்து மத வர்ணாச்சிரம தத்துவத்தின் படி சத்திரர், வைசிகர், சூத்திரர் தவிர்ந்த பிராமணர் மட்டுமே கடவுளுக்கு பூஜை செய்யும் அதிகாரத்தை வழங்கியுள்ளது. பிராமண குலத்தவர்களுக்குள்ளும் பெண்களுக்கு இவ்வுரிமை மறுக்கப்பட்டுள்ளது. எவர் ஒருவர் தமது மேலங்கியையோ, தலைத் தொப்பியையோ, பாதணிகளையோ அணிந்து செல்ல உள்ள உரிமை இந்து ஆலயங்களில் இல்லை.

மதம் என்ன கூறுகிறது என்பதை விட அதை நடைமுறைப்படுத்தும் மக்களால் இந்து மதத்தில் பல விதங்களில் பெண் உரிமைகள் மிக மோசமாக மீறப்படுவதை நாம் காணலாம். அவர்கள் அவர்களது அன்பானவர்களை இழக்கும் போது சுடலை வரைச் செல்லும் உரிமை அவர்களுக்கு இல்லை. ஒருத்தி கைம்பெண்ணாகிவிட்டால் சமூகத்தில் வாழவே அருகதையற்றவள் என்பதற்கான பல சடங்குகளும் சம்பிரதாயங்களும் இந்து மதத்தில் உள்ளதாக கருதப்பட்டு பின்பற்றப்படுகிறது.

"சீன தேசம் வரை சென்றாவது கல்வியைப் பெற்றுக்கொள்" என்றார் நபி நாயகம். இத்தகைய இஸ்லாத்தின் பெயராலேயே பெண்கள் கல்வி கற்பதற்கோ, தொழில் பார்க்கவோ இஸ்லாம் அனுமதிக்கவில்லை என்று தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் தடை விதித்த போது உலகமே அதிர்ந்து நின்றமையை இங்கு நாம் கட்டாயம் கருத்தில் கொள்ள வேண்டும். பெண்கள் தங்கள் அங்க அவயங்களை பூரணமாக மூடும் பர்தாக்களை அணியவேண்டும் என்று வற்புறுத்தப்படுவது பெண்கள் உரிமைக் குழுக்களாலேயே உரிமைகள் மீறலாக சுட்டிக் காட்டப்படுகிறது.

மற்றொரு கீழைத்தேய மதமாகிய பௌத்தம் மனித உரிமை மீறல்களில் இருந்து ஒப்பீட்டளவில் தப்பிக் கொள்வதைப் போல் இருக்கிறது எனக் கூறலாமே ஒழிய அங்கும் மனித உரிமை மீறல் இல்லை என்று வாதிட்டு விட முடியாது. தாழ்ந்த குலத்தவர் என்று கருதப்படும் எந்த ஒரு பௌத்தரும் இலங்கையின் உயர் பௌத்த பீடங்களாகிய அஸ்கிரியமல்வத்தை பீடங்களுக்கு தலைமை பிக்குவாக முடியாது என்பது மட்டுமல்ல அது போன்ற நிக்காயாக்களுக்கு அதிபதியாக வரவாய்ப்பில்லை என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று.

மனித உரிமைகளைப் பெரிதும் பாதுக்காப்பதாக கூறிக்கொள்ளும் மேலைத்தேய மதங்களாகிய கிறிஸ்தவம் கூட பல சந்தர்ப்பங்களில் மனித உரிமைகளை மீறுவதைக் காணலாம். எது எவ்வாறாயினும் இதுவரை கூறப்பட்டுள்ளவற்றை தொகுத்து நோக்கின் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் மத சித்தாந்தங்களே அவற்றை மீறுவதற்கும் வழிகோழுவது போல் தோன்றுகிறது. ஆனால் உண்மைநிலை யாதெனில் மதக் கோட்பாடுகளுக்கு பதிலாக அம்மதங்களை நடைமுறைப்படுத்துவதற்காக கூறிக் கொள்கின்ற மக்களாலேயே இவை சம்பவிக்கின்றது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். தத்தமது சந்தர்ப்பங்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் வசதிகளுக்கும் ஏற்ப மனிதன் மதக்கோட்பாடுகளை பிரயோகிக்கும் போதே மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்படுகின்றன என்பதே உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் கயிலையின் வரலாற்று நாயகன் குளக்கோட்ட மன்னன்

**லோகநாதன் தஷாந்தன்**
இறுதியாண்டு
இணைந்த சுகாதார
விஞ்ஞானபீடம்

திருகோணமலை மக்களின் வரலாற்று நாயகனாக விளங்கும் குளக்கோட்ட மன்னனின் ஆட்சிக்காலம் திருகோணமலை வரலாற்றின் முக்கிய அத்தியாயம் ஆகும். திருகோணமலை வரலாறு கோணேசர் ஆலயத்தை அடிப்படையாகக் கொண்டது. என்பதனால் குளக்கோட்ட மன்னன் வரலாற்று புகழ் பெற கோணேசர் ஆலயத்திருப்பணியும், கந்தளாய்க் குளமுமே அடிப்படைக் காரணிகளாகும். இதை தவிர திருகோணமலையில் வன்னியராட்சி ஏற்பட குளக்கோட்டனே காரணமென்ற வரலாற்று ஆதாரமும் வரலாற்றில் குளக்கோட்டன் முக்கியத்துவம் பெற மற்றுமொரு காரணமாகும். திருகோணமலை மட்டுமன்றி தம்பலகாமம், கந்தளாய், வெருகல், கங்குவேலி, கொக்கட்டிச் சோலை, போரதீவு, திருக்கோவில் போன்ற இடங்களிலும் திருப்பணிகள் செய்ததுமட்டுமன்றி அவனால் திருப்பணி செய்யவென அழைத்துவரப்பட்டவர்கள் கட்டுக்குனம்பற்று, ஈச்சிலம்பற்று, மல்லிகைத்தீவு, ஆனைத்தீவு, பள்ளிக்குடியிருப்பு, திருமங்கலம், சிந்துவெளி, இலங்கைத்துறை, கிளிவெட்டி, சம்பூர், மூதூர் போன்ற இடங்களில் குடியேறி பற்பல திருப்பணிகளை மேற்கொண்டுள்ளனர். கோணேசர் கல்வெட்டு, மட்டக்களப்பு மான்மியம், தட்சணகைலாயபுராணம், யாழ்ப்பாண வைபவமாலை, கைலாசமாலை, திருக்கோணாசலவைபவம், திருக்கரசைப்புராணம், திருக்கோணாசலபுராணம், கோணமலைஅந்தாதி போன்ற நூல்களும் கந்தளாய்க் கல்வெட்டு, குச்சவெளிக் கல்வெட்டு, திரியாய் கல்வெட்டு, கங்குவேலிக்கல் கல்வெட்டு, பளமோட்டைச்சாசனம், பிரட்ரிக் கோட்டைச் சாசனம், குடுமியாயலைக் கல்வெட்டு, தென்னிந்திய கோயிற்சாசனம் முதலியனவும் குளக்கோட்டன் தொடர்பான தகவல்களை தருகின்றன.

மனுநீதிகண்ட சோழன் மரபில் வந்த வரராமதேவன் திருக்கோணேஸ்வரத்தின் புகழைக் கேட்டறிந்து இங்குவந்து தொண்டுகள் செய்தார். அதன்பின் அவன் மகன் குளக்கோட்டனும் திருக்கோணேஸ்வரம் வந்து ஆலயங்கள், கோபுரங்கள், வாவிகள் அமைத்து அடியார்கள் நீராட பாவநாச தீர்த்தத்தையும் அமைத்தான். ஆலய நிர்வாகம் சிறப்புற தமிழகத்திலிருந்து வன்னியர், தானத்தார், வரிப்பத்தார், கருகுலக்கணக்கர், தொடும்பர்கள் ஆகியோரை அழைத்து வந்து அவர்களுக்குரிய கடமைகளையும் வகுத்தார். பின்னர் உன்னரசுகிரி எனப்பட்ட திருக்கோயில் பிரதேசத்தை ஆட்சிசெய்த ஆடகசௌந்தரியை மணம் முடித்து திருகோணமலை முதல் திருக்கோயில் வரை திருப்பணி செய்தது மட்டுமன்றி கந்தளாய் குளத்தையும் கட்டினான். என்பது கோணேசர் கல்வெட்டு கூறும் கதையாகும்.

வாராமதேவன் மச்சேந்திர புராணத்தில் கூறப்படும் கோணேசர் ஆலயத்தின் பெருமைகளை அறிந்து கோணேஸ்வரம் வந்து பூசைகள், விழாக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தி, தான் கொண்டு வந்த பொற்குவியலை ஒரு கிணறு தோண்டி புதைத்து வைத்தான் எனவும் பின்னர் கோணேஸ்வரம் வந்த அவனது மகன் குளக்கோட்டன் அதன்மூலம் கோயில், குளம் என்பனஅமைத்து திருப்பணிகள் செய்தான் என்பது கைலாசபுராணம் கூறும் கதையாகும்.

சோழ மண்டலத்தை ஆட்சிபுரிந்த வாராமதேவன் திருகோணமலை வந்து திருப்பணிகள் செய்தான். இவன் திரும்பிச்செல்லும் போது சேர்த்து வைத்துவிட்டு சென்ற திரவியங்களை குளக்கோட்ட மன்னன் இங்கு வந்து எடுத்து திருப்பணிகள் செய்தான். அதேவேளை கலிங்க அசோகசுந்தரன் தம்பதிகளுக்கு சீவி முடித்த குழலோடும் பற்களோடும் பிறந்த குழந்தை சோதிடர் சொற்படி பேழையில் வைத்து கடலில் விடப்பட அப்போது உன்னரசுகிரியை ஆண்ட மனுநேய கஜபாகு மன்னனால் கண்டெடுக்கப்பட்டது. பின்னர் ஆடக சௌந்தரி என்ற பெயருடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இக்குழந்தை சந்தர்ப்பவசத்தால் குளக்கோட்ட மன்னனை திருமணம் செய்தாள். குளக்கோட்டன் உத்தரபிரதேசம், மருங்கடர், திருநெல்வேலி போன்ற இடங்களில் இருந்து குடிகளைக் கொண்டு வந்து குடியமர்த்தினான் என்பது திருக்கோணாசலவைபவம் கூறும் கதையாகும்.

பிரன்னசித்து என்பவன் கலி வருடம் 3110 இல் (கி.பி 8) மட்டக்களப்பில் ஆட்சிக்கு வந்தான். இவனது ஆட்சியின் போது புவனேக கஜபாகு எனும் கலிங்க இளவரசன் சோழநாட்டு அரசன் மகள் நள்ளால் என்பவளை மணந்து புத்திரபாக்கியம் இல்லாமையால் யாத்திரை மேற்கொண்டு இராமேஸ்வரத்தை தரிசித்துபின் மட்டக்களப்பை வந்தடைந்தான். அவன் பிரசன்னசித்துவின் கோரிக்கைக்கு இணங்கி தமிழகத்திலிருந்து சிற்பங்களை வரவழைத்து திருக்கோயில் ஆலயத்திற்கு திருப்பணிகள் செய்தான். அவன் மகன் மனுநேய கஜபாகு (மேகவர்ணன்) கலிவருடம் 3150 இல் (கி.பி 48) உன்னரசுகிரி இராச்சியத்தின் ஆட்சிக்கு வந்தான். அவன் ஆட்சியின் போது கரைசேர்ந்த பேழையொன்றில் இருந்தபெண் குழந்தையை கண்டெடுத்து அவளுக்கு ஆடகசௌந்தரி எனப்பெயரிட்டு வளர்த்து வந்தான். அவனுக்குப்பின் ஆட்சிக்கு வந்த ஆடகசௌந்தரி அப்போது திருமலையில் திருப்பணிகள் செய்து வந்த மகாசேனனை மணந்து அவனுடன் இணைந்து கந்தளாய்க் குளத்தை கட்டினாள் என்று மட்டக்களப்பு மாண்மியம் கூறும் கதையாகும். மகாசேனன் இந்து ஆலயங்களை அழித்தவன் என மகாவம்சம் கூறுவதன் அடிப்படையில் மேற் கூறப்பட்ட கதையில் வரும் மன்னன் மகாசேனனாக இருக்க முடியாது.

மனுநீதி கண்ட சோழன் மகன் குளக்கோட்டன் கி.பி 436 இல் திருகோணமலைக்கு வந்து திருப்பணிகள் செய்து அவை ஒழுங்காக நடைபெற வன்னியர்களை நியமித்துச் சென்றார் என்பது யாழ்ப்பாண வைபவமாலையில் குறிப்பிடப்பட்ட போது அவனது நாடு பெயர் என்பவை சரியாகக் குறிப்பிடப்படவில்லை. கோணேஸ்வரத்தில் குளக்கோட்டன் திருப்பணிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி 1604 இல் போர்த்துக்கேய தளபதி கொன்ஸ்ரான் ரைன்பீசா என்பவன் கோணேசர் கோயிலை இடித்தழிப்பித்தான் எனவும், அப்போது ஆலயத்திலிருந்த கல்வெட்டுப் பிரதியொன்றை போர்த்துக்கேய மன்னனுக்கு அனுப்பி வைத்தான் எனவும் தெரியவருகிறது. அச்செய்தியில் மனுராசா அல்லது மாணிக்கராசா என்ற மன்னன் இலங்கையை ஆண்ட காலத்தில் (கி.மு1300) கோணேசர் கோயில் கட்டப்பட்டது எனக் கூறப்பட்டுள்ளது. எனவே இக்கோயிலை குளக்கோட்டன் கட்டினான் என்பதற்கில்லை. ஆனால் கோணேசர் கோயிலுடன் குளக்கோட்டனை தொடர்புபடுத்தும் சில செய்திகள் இக்கோயிலை குளக்கோட்டன் கட்டினான் எனக் கூறியபோதும் வேறு சில தகவல்கள் இதை மறுத்தன. ஏற்கனவே இருந்த கோயிலிலேயே திருப்பணிகளை செய்தான் என கூறுகின்றன. எவ்வாறாயினும் இக்கோயிலுக்கு குளக்கோட்டன் செய்ததிருப்பணிகள் பற்றி கி.பி 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிராஜவரோதயரால் எழுதப்பட்ட கோணேசர் கல்வெட்டு விரிவாகக் கூறுகிறது. இதன்படி கோயில் திருப்பணிகள் செய்வதற்கு திருகோணமலையில் குடியமர்த்தப்பட்ட மக்களை பராமரிப்பதற்காக வன்னியரகள் அழைத்துவரப்பட்டு கட்டுக்குளம்பற்று, இதம்பலகாமப்பற்று போன்ற இடங்களில் குடியேற்றப்பட்டனர். கோயில் வருமானத்திற்கென வழங்கப்பட்ட வயல்களின் நீர்ப்பாசனத்திற்கென அல்லைக்குளம், வெண்டரசன்குளம், கந்தளாய்க்குளம் ஆகியவற்றையும் அமைத்துக் கொடுத்ததாக கூறப்படுகின்றது.

**குளக்கோட்டன் காலம்**

இதுவரை செய்யப்பட்ட ஆய்வுகள் குளக்கோட்டன் காலம் பற்றி முரண்பாடான முடிவுகளையே வெளியிட்டுள்ளன. பேராசிரியர் பரணவிதான குளக்கோட்டன் கி.பி 1223 சித்திரை 14ஆம் திகதி காலை திருகோணமலையை வந்தடைந்ததாக கூறுகின்றார். திருக்கோணாசலபுராணம் குளக்கோட்டன் காலம் கி.மு 2590 எனக் கூறுகிறது. கலாநிதி செ.குணசிங்கம் குளக்கோட்டன் கி.பி 1223 இல் இலங்கை வந்ததாக கூறுகின்றார். சாலிவாகனசகாப்தம் 358ஆம் ஆண்டு மனுநீதி கண்ட சோழன் மகன் குளக்கோட்டன் இலங்கை வந்ததாக யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. குவேரோஸ் அடிகளார் குளக்கோட்டன் கி.மு 1300 காலத்திற்குரியவனாக குறிப்பிடுகின்றார். திருகோணமலை பிரட்ரிக் கோட்டை அகழ்வில் கண்டெடுக்கப்பட்ட வடமொழிச்சாசனம் உரியமுறையில் மொழிபெயர்க்கப்படாமை, குளக்கோட்டனின் பணியை மிகத்தொண்மையான திருக்கோணேஸ்வரத்துடன் தொடர்புபடுத்தும் போது ஏற்படும் மிகையான ஆர்வம் என்பனவையே குளக்கோட்டன் குறித்த ஆய்வுகளில் கால முரண்பாடு உருவாகுவதற்கு காரணங்களாகும். குளக்கோட்டனின் காலம், பெயர், செயற்பாடுகள் என்பவற்றுக்கு ஆதாரமாக கோணேஸர் கோயில் கல்வெட்டு, பிரட்ரிக் கோட்டையின் சிதைந்த சமஸ்கிருதகல்வெட்டு, கங்குவேலிக் கல்வெட்டு, திருக்கோயில் (தூண்) கல்வெட்டு, திருக்கோயில் (சதுரக்) கல்வெட்டு என்பனவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் கோணேசர் கல்வெட்டு அவற்றுள் பிரபலமானதாக அமைகின்றது.

**திருக்கோணேசர் ஆலயக் கல்வெட்டு**

தீர்க்கதரிசனக் கல்வெட்டு எனப்படும் இது கி.பி 1624 இல் கோணேசர் ஆலயத்தை இடித்துக் கட்டியபோது கோட்டை வாசலில் பொருத்தி வைக்கப்பட்டது. கிருஷ்ண ஸாஸ்திரி என்பவர் இக்கல் வெட்டின் அழுத்த அமைப்பினைக் கொண்டு இது கி.பி 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததென கூறுகின்றார். ஆனால் குடுமியா மலைச்சாசனத்தை நோக்கும் போது இதில் பொறிக்கப்பட்டுள்ள இரு கயல்களும் கி.பி13 ஆம் நூற்றாண்டைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தவை என கருதமுடியும்.

**கல்வெட்டுவாசகம்**

ன னேகுள
காடமுடத
ருபபணியை
னனேபறங்கி
ககவேமனன
ன பொணாணா
னை ய ய ற ற
தே வை த
ரை
கள

இக்கல் வெட்டினை குவரேஸ் பாதிரியார் கொட்றிங்ரன், முதலியார் இராசநாயகம் ஆகியோர் மொழி பெயர்த்துள்ள போதிலும் பாரம்பரியமான மொழிபெயர்ப்பொன்று கூறப்படுகின்றது. வின்ஸ்போ அகராதியில் காணப்படும் இம் மொழிப் பெயர்ப்பு முற்காலத்தில் குளக்கோட்டன் எனப்படும் மன்னன் திருப்பணி செய்த இவ்வாலயத்தை பிற்காலத்தில் பறங்கியர் எனப்படும் சாதியினர் அழிப்பார்கள். அதன்பின் இக்கோயிலைக் கட்டுவதற்கு வேறு அரசர்கள் எவரும் எண்ணமாட்டார்கள் என்பதாகும். இங்கு பொதிந்துள்ள தீர்க்கதரிசினம் கவனத்திற்குறிய போதிலும் இவ்வகையான சான்றாதாரங்கள் மறைக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றன. பின்னாளில் பெருமை மிக்க இவ் வரலாற்று உண்மைகளை உலகறியச் செய்வது காலத்தின் கைகளிலேயே......

**உசாத்துணை நூல்கள்**


1. திருக்கோணாசலவைபவம் -வே.அகிலேசப்பிள்ளை
2. ஈழத்தவர் வரலாறு -கலாநிதிக.குணராசா
3. கோணேசர் கல்வெட்டு - கவிராஜவரோதயர்
4. கோணேஸ்வரம் - குணசிங்கம் செல்லத்துரை
5. குளக்கோட்டன் தரிசனம் - க.தங்கேஸ்வரி
6. தட்சணகையிலாயபுராணம் - பண்டிதராசர்
7. திருக்கோணேஸ்வரம் தொண்மையும் வன்மையும் - இ.வடிவேல்
8. யாழ்ப்பாணவைபவமாலை - மயில்வாகனப்புலவர்
9. வன்னியர் - கலாநிதி சி.பத்மநாதன்
10. வரலாற்றுத் திருகோணமலை - கனகசபாபதிசரவணபவன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிப் பேரழகா

மு. பிரதீபா
இரண்டாம் வருடம்
கலைப்பீடம்

பனிமுடிதாங்கிடும் வேளையிலே
சுடும் பகலவன் உதித்த நல் சோலையிலே
மலை மீது வீற்றிருக்கும் வீரனவன் வியர்வையை
விரட்டியடித்திட விரைந்து வந்த தென்றலுடன்
மன்னனவன் மனம் குளிர குயில் மங்கையவள்
இசைமீட்ட என்றும் குன்றா குன்று
குறிஞ்சி எனும் நெடும் சிம்மாசனத்தில்
வள்ளி எனும் தெய்வானை எனும்
இருமங்கையரின் மனம் கவர்ந்த
கள்வன் அவன் செங்கோல் நடக்குதய்யா.

செக்கச் சிவந்த அவன் உதடுகளில்
சிக்கித் தவிக்குதய்யா எமது விழி
பட்டுத் தெரிந்த அவன் கண் ஒளியில்
பல கவலை மறக்குதய்யா எம் மனதில்
திட்டம் இன்றி அவன் திருவடியை
தொழுவோர்க்கெல்லாம் திகட்டாத இன்பம்
தந்தான் அந்த சின்னக் கதிர் வேலன்
வெள்ளை மனத்தோடு அவனை வேண்டி
மகிழ்வோர்க்கெல்லாம்
கள்ளமில்லா புன் சிரிப்பாய் அவன் மேல்
காதல் பிறக்குதய்யா..

பல்கலையும் கற்பவருக்கு நீ பாலிக்கும் தெய்வம்
ஆறுமுகம் கொண்ட நீ அருளுவதோ ஏறுமுகம்
முருகா உன் திருநாமம் இசைத்தாலே போதுமைய்யா
உன் இசையாலே அருள் வெள்ளம் பாயுமைய்யா
பக்கத்தில் இரு பத்தினி பெண் பார்த்திருக்க
இச்சையுடன் நீ அருள் வேல் அமர்ந்திருக்க
துன்பம் தொட்ட இடமெல்லாம் உடன் சென்று
துடைத்திடவே துகிலுடனே மயில்துவும் காத்திருக்க
குறிஞ்சி மலைச் சாரலிலே மலையோன் அவன்
மீதினிலே கோல விழி நீ காட்டி கொள்ளையிடும்
குறிஞ்சிப் பேரழகா உன் பாத மலர் தழுவிடவே
துடிக்குதய்யா எம் ஆவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான் தொடும் குறிஞ்சிக் குமரன்

ப.கஜன்
மூன்றாம் வருடம்
பொறியியற் பீடம்

சரவணப்பொய்கையில் அக்கினிப்பூ - வான்
தொடும் குறிஞ்சியின் குமரன்
பேராதனைப் பல்கலைக்கழகமாணவர் நாம்- உம்
பேரருளைபெற்றிடவே - நாளும்
ஆராதனைசெய்கின்றோம்.

மயில் ஏறும் மாமணியே முருகையா
மங்களம் பரவட்டும் எம் வளாகமதில்
குளிர் காற்றும் பச்சைப் பசேல் வெளியும்
காட்சிதரும் குறிஞ்சியில் குடிகொண்ட - குமரனே
உம் பாதம் பணிந்து நிற்கின்றோம். பார் போற்றஎமை
உயர்த்திடுவாய். அதர்மம் அழித்து தர்மம் காத்தவனே
இத்தரணியிலும் தர்மத்தை நிலைநாட்டு.

வேல் கொண்டுவிணைதீர்க்கும் வேலா
வேதனைகள் கலைத்திடுவாய் வேரோடு
மாங்கனிக்காய் உலகை சுற்றிய காங்கேயனே
எம்மனக் குறைகழைய மலைதனில் அமர்ந்தாயே
நான்முகனைச் சிறைப்பிடித்தாய் நாதனுக்கே பாடம் சொன்னாய்
நாளும் பணிந்துநின்றோம் உன் திருவடியில்
வான் தொடும் குறிஞ்சியின் குமரனே வாகை
சூடிடுவோம் உன் துணையோடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் புரிவாய் குறிஞ்சிக்குமரா

**கோபிசங்கர்**
இரண்டாம் வருடம்
பொறியியற்பீடம்

கோள திண்மத்தின்
இரத்தின தூவீபம் இலங்கை
இலங்கை தாயின் வயிற்றில்
கருவாய் பொங்கிய மலைநாடு

வெண்முகில் மேகங்கள்
தரை தொட்டு விளையாடும் குன்றுகள்
மகாவலி இசைக்கருவியில்
கச்சேரி நடாத்தும் நீரோடைகள்

இலங்கை தாயின் புராதன
கலாச்சார நகரமாம் கண்டி
கற்றவர் புடை சூழும்
அறிவுச் சூழலாம் பேராதனை

வானுயரும் பச்சைப்பசேல்
மூலிகைக் காடுகள்
குரங்குகள் ஊஞ்சல் ஆடும்
ஊஞ்சல்களாய் பெருமரங்கள்

மரத்துளைகளில் புல்லாங்குழல்
வாசிக்கும் தென்றல் காற்றுகள்
பண்டை தமிழன் வகுத்த
குறிஞ்சி நிலத்திற்கு இலக்கணமாய் குறிஞ்சிமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபம் கொண்டு ஆண்டியாக
பழனிமலை
அறிவுதேட அடைக்கலம் புகுந்தவரை அரவணைக்க
குறிஞ்சி மலை

மலை தோறும் உச்சியிலே
அதர்மம் அழிக்கும் தேவசேனாதிபதியாய்
முத்தமிழ் கடவுளாய்
குடி கொண்டான் அழகு முருகன்

திரை கடல் ஓடி திரவியம்தேட
கல்வி ஆயுதத்தை கையில் எடுத்தார் தேடிப்போற்ற
பேராதனையில் பேரணையாய்
அருள் புரிவாய் குறிஞ்சிக்குமரா

---



பஞ்ச பூத தலங்கள்:

1. சிவன் நில வடிவமாகக் காட்சி தரும் தலங்கள் - காஞ்சிபுரம், திருவாரூர்
2. சிவன் நீர் வடிவமாகக் காட்சி தரும் தலம் - திருவானைக்கா
3. சிவன் தீ வடிவமாகக் காட்சி தரும் தலம் - திருவண்ணாமலை
4. சிவன் காற்று வடிவமாகக் காட்சி தரும் தலம் - திருக்காளத்தி
5. சிவன் விசும்பு வடிவமாகக் காட்சி தரும் தலம் - சிதம்பரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிமலை அழகா

**ச.அதீஷன்**
மூன்றாம் வருடம்
பொறியியற் பீடம்

பார் காக்கும் நாயகனே
விநாயகனே'..
உன் பாதம் பணிந்துஅருள்தரவே
நல் குறிஞ்சிக் குமரன்
புகழ்பாட அருள்தருவீர்....
அருள்முகம் காட்டும்
திருமுகனின் ஆறுமுகம் கண்டு
அடிபணியஅருள்தருவீர்
ஐங்கரப் பெருமானே....

குறிஞ்சிமலைஅழகா
வள்ளி குஞ்சரி துணையழகா
ஆறுமுகஅழகா
தோகைமயிலாடும் பேரழகா
சக்திவேலழகா
கோவை இதழழகா
தேனமுதகழலழகா
வீறுநெற்றியழகா
சேவற்கொடி குமரழகா
கண்ணளிரண்டும் போதலையே
உன் பேரழகைக்காணமுருகா...

நற்றவர் கற்றவர்
நாவலர் போற்றும்
குறிஞ்சிமலைமுருகா...
சரவணபவனே...
நித்தமும் உன் பாடல்
நிதர்சனம் தருவாயோ'...
அருணகிரிதிருநாவில்
திருவடிஎழுதிய
செந்தமிழ் கோனே.....
நாவற்பழம் தந்து
அவ்வைக்கொளியூட்டி
தமிழ்ச்சுவைகாட்டிய
தமிழ்ச்சங்கத் தலைவா'...
உன் புகழ்பாட
குறிஞ்சிதனில் நற்றமிழ்
தந்து அருள்வாயோ
எமக்கையா'....

பூத்தநகை மினுமினுக்கும்
புன்சிரிப்பு உலகளக்கும்
பாவலர்கள் பாட்டிசைக்கும்
நல்லூரான் அடிபணிந்தேன்.....
செல்வனவன் சந்நிதியில்
அடியேனும் உணவாறி
பழனிப்பழம் உன்சுவையை
உலகிற்கும் எடுத்துரைப்பேன்'....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்போற்றும் பெருமஞ்சம்
இணுவையில் மணிநாதம்
இணுவையூர் சுப்ரமண்யா
தைப்பூசம் உன்வாசம்.....
திருப்புகழ் வாங்கிய
திருமலைக் கந்தா...
கதிரமலைவாசா...
உன் திருவருள் வேண்டிட
தடையேதும் உண்டோ...
நாற்திசையும் உன்நாமம்
குறிஞ்சிதனில் உன்னில்லம்
உலகெங்கும் அருளளக்கும்
சங்கரன் குருவே..
உன் திருவடியில்
என்தலைக்குபணியேதும்
உண்டோ....

கண்களில் கண்ணீர்
துதிக்கின்றேன் ஐயா...
உருகதையா மனம்
உன் திருவழகு கண்டு..
உறக்கம் மறந்தேன்
உணவும் வெறுத்தேன்
திக்கேதும் அறியேன்
தொண்டுசெய் தொண்டரின்
முகம் பார்க்கும் குருபரனே...
வேதனைதணிக்கும் தரணீதரா
ஜெயம் நல்கும் கந்தனே
கோடிவரம் தரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1952ம் ஆண்டு முதல் இன்று வரை
## இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர்கள், தலைவர்கள்

| ஆண்டு | பெருந்தலைவர் | ந்தலைவர் |
|---|---|---|
| 1952/57 | பேராசிரியர் ரி.ஆர்.வீ.மூர்த்தி | |
| 1957/58 | பேராசிரியர் த.நடராஜா | திரு. ஏ.முத்துக்கிருஷ்ணன் |
| 1959/62 | | |
| 1962/63 | பேராசிரியர் த.நடராஜா | திரு. க.சிவஜோதி |
| 1963/64 | பேராசிரியர் த.நடராஜா | |
| 1964/65 | பேராசிரியர் த.நடராஜா | திரு. எஸ்.நவரட்ணராஜா |
| 1965/66 | பேராசிரியர் த.நடராஜா | திரு. மு.கனகரட்ணம் |
| 1966/67 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. து.அப்புலிங்கம் |
| 1967/68 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. கு.சண்முகநாதன் |
| 1968/69 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. க.கிருஷ்ணானந்தசிவம் |
| 1969/70 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. ந.சுகுமாரன் |
| 1970/71 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. க.ஜெயபாலன் |
| 1971/72 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. என்.சந்திரகாந்தன் |
| 1972/73 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. என்.சந்திரகாந்தன் |
| 1973/74 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. பா.பத்மநாதன் |
| 1974/75 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. க.குமரேசன் |
| 1975/76 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு. கு.கந்தசாமி |
| 1976/77 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு. கு.கந்தசாமி |
| 1977/78 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு. இ.கைலாசாதநாதன் |
| 1978/79 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. எஸ்.சிவனந்தன் |
| 1979/80 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. கு.சிவகணேசன் |
| 1980/81 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. பொ.யுசீலாந்தன் |
| 1981/82 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. ச.தயாபரன் |
| 1982/83 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. சி.பாலகிருஷ்ணன் |
| 1983/84 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. சி.பாலகிருஷ்ணன் |
| 1984/85 | பேராசிரியர் த.யோகரட்ணம் | திரு. ஏ.விஜயரஞ்சன் |
| 1985/86 | பேராசிரியர் த.யோகரட்ணம் | திரு. ஏ.விஜயரஞ்சன் |
| 1986/87 | பேராசிரியர் சி.சிவயோகநாதன் | திரு. பீ.தயாபரன் |
| 1987/88 | பேராசிரியர் சி.சிவயோகநாதன் | திரு. பீ.தயாபரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1952ம் ஆண்டு முதல் இன்று வரை
## இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர்கள், தலைவர்கள்

| ஆண்டு | பெருந்தலைவர் | தலைவர் |
|---|---|---|
| 1988/89 | பேராசிரியர் சி.சிவயோகநாதன் | திரு. எஸ்.குகநேசன் |
| 1989/90 | பேராசிரியர் து.விநாயகலிங்கம் | திரு. இ.சந்திரகுமார் |
| 1990/91 | பேராசிரியர் து.விநாயகலிங்கம் | திரு. செ.இரவீந்திரநாதன் |
| 1991/92 | பேராசிரியர் து.விநாயகலிங்கம் | திரு. க.வல்லபவானாந்தன் |
| 1992/93 | பேராசிரியர் இ.சிவகணேசன் | திரு. தி.நவநீதன் |
| 1993/94 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. க.கணேசநாதன் |
| 1994/95 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. க.நந்தகுமார் |
| 1995/96 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. பா.சஞ்சயன் |
| 1996/97 | கலாநிதி செ.திருச்செல்வம் | |
| 1997/98 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. உதயசீலன் |
| 1998/99 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. க.இராகவன் |
| 1999/00 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. நே.ராஜரூபன் |
| 2000/01 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. க.கருணாநிதி |
| 2001/02 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. இ.மயூரன் |
| 2002/03 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. ச.சிவஜோதி |
| 2003/04 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. து.அரவிந்தன் |
| 2004/05 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. ப.தயாபரன் |
| 2005/06 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. நெ.நந்தகுமார் |
| 2006/07 | வைத்திய கலாநிதி தி.ஆனந்தமூர்த்தி | திரு. சா.மோகனஜீவ் |
| 2007/08 | வைத்திய கலாநிதி தி.ஆனந்தமூர்த்தி | திரு. சி.திவாகரன் |
| 2008/09 | வைத்திய கலாநிதி தி.ஆனந்தமூர்த்தி | திரு. செ.ஜெயசுதன் |
| 2009/10 | திரு.வ.தர்மதாசன் | திரு. ந.சிந்துஜன் |
| 2010/11 | திரு.வ.தர்மதாசன் | திரு. த.கோபிராம் |
| 2011/12 | திரு.சிவயோகலிங்கம் | திரு. ச.சசிக்குமார் |
| 2012/13 | திரு.சிவயோகலிங்கம் | திரு. கு.ஜெயமோகன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2011 - 2012ம் ஆண்டுக்கான இந்து மாணவர் சங்க 55வது செயற்குழுவின் ஆண்டறிக்கை

என் கடன் பணி செய்து கிடப்பதே. எல்லாம் வல்ல எம் பெருமான் குறிஞ்சிக் குமரன் அருளாசியினால் எமது செயற்குழு தன்னாலான பணியினை வழங்கியது. அவ்வகையில் எமது ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதில் மன மகிழ்வடைகின்றோம்.

**07-01-2011 எமது செயற்குழு பொறுப்பேற்றது**

11-01-2011 முதல் 19-01-2011 வரை **அலங்கார உற்சவம்** தினமும் மாலை அபிஷேக பூஜையும் வசந்தமண்டப பூஜையும் இடம்பெற்று எம்பெருமான் திருவீதியும் வலம் வந்தார்.

15-01-2011 **தைப்பொங்கல்** அனைத்துப் பீட மாணவர்களாலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

20-01-2011 **தைப் பூசத்திருவிழா** காலை அஸ்டோத்திர சதசங்காபிஷேகம் சிறப்பாக நடைபெற்று எம்பெருமான் குறிஞ்சிக்குமரன் வள்ளி தேவசேனா சமேதராக திருவீதி உலா வந்தார். அடியார்களுக்கு இராப்போசனமும் வழங்க்கப்பட்டது.

21-01-2011 **வைரவ விஷேட அபிஷேக பூஜை**

26-01-2011 **சிரமதானம்.** பல்கலைக்கழக தமிழ் மாணவர்களாலும் ஏனைய அடியார்களாலும் ஆலயத்தில் கிரியை தொண்டு இடம்பெற்றது.

02-03-2011 **மகாசிவராத்திரி.** வழமைபோல் இம்முறையும் நான்கு ஜாம பூஜை இடம்பெற்றது. மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் "இந்து தருமம்" நூல் வெளியீடும் நடைபெற்றது. அடியார்களுக்கு இராப்போசனமும் வழங்க்கப்பட்டது.

14-04-2011 **கர வருடப்பிறப்பு.** திருவிழா அபிஷேக பூஜைகளுடன் சிறப்பாக கொண்டாப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17-04-2011 **சித்திரா பூரணை.** விஷேஷ அபிஷேக பூஜைகள் இடம்பெற்றன. பக்தர்களுக்கு சித்திரைக் கஞ்சியும் வழங்கப்பட்டது.

30-07-2011 **ஆடி அமாவாசை.** விஷேஷ அபிஷேக பூஜையைத் தொடர்ந்து விரதம் அனுஷ்டித்தோருக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

02-08-2011 **ஆடிப்பூர உற்சவம்.** விஷேஷ அபிஷேக பூஜையைத் தொடர்ந்து அம்பாள் திருவீதியுலாவும் இடம்பெற்றது.

01-09-2011 **விநாயகர் சதுர்த்தி.** விநாயகப் பெருமானுக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் இடமபெற்று விநாயகப் பெருமான் திரு வீதி உலா வந்தார்.

14-09-2011 **மணவளாக் கோல தின நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம்** காலையில் நவோத்ரசகஸ்ர (1009) சங்காபிஷேகமும் நடைபெற்று மதியம் மகேஸ்வர பூஜையும் இடம்பெற்றது. மாலை வசந்த மண்டப பூஜையும் அதனைத் தொடர்ந்து திருவூஞ்சலும் இடம்பெற்று எம்பெருமான் மணவாளக் கோலத்தில் திருவீதியுலா வந்து அடியார்களுக்கு அருள் பாலித்தார்.

28-09-2011 முதல் 06-10-2011 வரை **நவராத்திரி விஷேட பூஜை.** பிரதமை முதல் நவமி ஈறாக ஒன்பது நாட்கள் கொலு வைக்கப்படும். விஷேட பூஜைகள் இடம் பெற்று தேவி தோத்திரங்கள் ஓதப்பட்டன இறுதி நாளான விஜய தசமியன்று காலையில் ஏடு தொடக்கம் வைபவமும் மாலை அம்பாள் திரு வீதியுலாக் கொண்டு ஆலய முற்றலில் மாணம்பூ உற்சவமும் நடைபெற்றது. அடியார்களுக்கு இராப்போசனமும் வழங்கப்பட்டது.

06-10-2011 **புதிய நீர்த்தாங்கிக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.**

22-10-2011 **புதுமுக மாணவர் வரவேற்பு.** சகல பீட மாணவர்களாலும் ஆலய சுற்றாடலில் சரியை தொண்டு இடம்பெற்று மதிய போசனமும் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆலய குருக்கள் மற்றும் பெருந்தலைவர் அவர்களுடைய ஆசியுரையும் இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26-10-2011 **தீபாவளி.** காலை அபிஷேகத்துடன் அனைத்து விக்கிரங்களுக்கும் புத்தாடை அணிவித்து விஷேட பூஜையுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

27-10-2011 முதல் 01-11-11 வரை **கந்தஷஷ்டி.** தினமும் எம்பெருமானுக்கு விஷேட பூஜை இடம்பெற்று கந்தஷஷ்டி கவசம் பஞ்சபுராணம் பாராயணம் செய்யப்பட்டது. இறுதி நாளன்று சூரஸம்ஹாரமும் சிறப்பாக இடம்பெற்று அடியார்களுக்கு இராப்போசனமும் வழங்கப்பட்டது.

02-11-2011 **திருக்கல்யாணம்.** முருகப் பெருமான் திருவேட்டைக்கு சென்றமை, வள்ளியை மணந்தமை, எட்டுக்குடி ஏசல், யாகசாலை பிரவேசம் என்பனவற்றுடன் விநாயகப் பெருமான் முன்னிலையில் திருமாங்கல்ய தாரணமும் இனிதே நடைபெற்றது.

12-11-2011 சைவ திருமுறை அடியார் சங்கமத்தினரால் **திருவாசக முற்றோதல் இடம்பெற்றது.**

08-12-2011 **திருக்கார்த்திகை உற்சவம்.** எம்பெருமான் மாவிளக்கு, ஆலயம் அகல் விளக்குகளின் ஒளிவெள்ளத்தில் மிதக்க வள்ளி தேவசேனா சமேதராக குறிஞ்சிக் குமரன் திருவீதி உலா வந்தார்.

30-12-2011 **விநாயக விஷேஷ உற்சவம்.** விநாயகப் பெருமானுக்கு விஷேட அபிஷேக பூஜைகள் இடம்பெற்று எம் பெருமான் திருவீதி உலா வந்தார்.

30-12-2011 முதல் 08-01-2012 வரை **திருவெம்பாவை.** தினமும் அதிகாலை சிவகாம சுந்தர் சமேத நடராஜ பெருமானுக்கு விஷேட பூஜை ஆராதனைகளுடன் திப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை பாராணயங்கள் ஓதப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. இறுதி நாளன்று நடேசர் ஆருத்திரா அபிஷேகமும், ஆருத்தரா தர்சனமும் சிறப்பாக நடைபெற்றது.

2010-2011 இதற்கான இந்து மாணவர் சங்கத்தினால் வழங்கப்படும் **புலமை பரிசில்கள்** வழங்கப்பட்டன.

மேற்குறிப்பிட்ட விடயங்களுடன் கார்த்திகை உற்சவங்கள் நடேசர் அபிஷேக தினங்கள் பங்குனி உத்தரம். ஆனி உத்தர நடேசர் தரிசனம். கிருஷ்ண ஜெயந்தி, சுவர்க்கவாயில் ஏகாதசி விஷேடஅபிஷேக பூஜைகள், வெள்ளிக்கிழமை பூஜைகள், பஜனைகள் மற்றும் பல நிகழ்ச்சிகளும் அவன் அருளால் சிறப்புற நடைபெற்றன. எமது செயற்குழு சிறப்பாக இயங்க அருளாசி தந்த எம்பெருமானை குறிஞ்சிக் குமரனுக்கும், ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது மணமார்ந்த நன்றிகள்.

**"மேன்மைக் கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

செயலாளர் - **க.பிரதீபன்,** இணைசெயலாளர் - **சி.தேவகி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**சிவராத்திரி கலை**
**நிகழ்வின்**
**போது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவராத்திரியின்
போது





தைப்பூசத்தின்
போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாண்மைக் குழு

**2011 - 2012**

தலைவர் : பேராசிரியர் திரு வை.நந்தகுமார்

பொதுச் செயலாளர் : திரு இரா.மகேஸ்வரன்

நிர்வாக செயலாளர் : கலாநிதி திரு த.சிவானந்தவேள்

பொருளாளர் : திரு வ.தர்மதாசன்

செயற்குழு உறுப்பினர்கள் : பேராசிரியர் திரு செ.சிவயோகனாதன்

: கலாநிதி திரு வ.மகேஸ்வரன்

: திரு ஏ.அரியரத்தினம்

: திரு கே.நீலகண்டன்

: திரு து.சிவசுப்பிரமணியம்

: திரு நா.அகிலன்

: திரு வே.சிவயோகலிங்கம்

: ச.சசிக்குமார்

: ச.கோபிநாத்

: க.பிரதீபன்

: செ.கரிகாலன்

: கு.ஜெயமோகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கம்

## செயற்குழு 2011 - 2012



நிற்பவர்கள் (இ.வ.) : எ.திபியா, சி.துவாரகா, கோ.வேணுகோபன், இ.இராகுலன், கி.கிருஷ்ணானந்தா, பு.சத்தியதாஸ், க.றொபின்சன், ப.கஜன், கு.ஜெயமோகன், செ.கரிகாலன், க.கேசிகன், யோ.நிஷாந்தன், ச.அதீசன், ச.செல்வலோயினி, சி.தேவகி

இருப்பவர்கள் (இ.வ.) : க.பிரதீபன், நா.அகிலன், திரு வே.சிவயோகலிங்கம், பேராசிரியர் எஸ்.பி.அபயகோன் (துணைவேந்தர்), ச.சசிக்குமார், கலாநிதி திரு த.சிவானந்தவேள், சு.கோ[illegible]நாத்

படத்தில் இல்லாதிருப்போர் சு.நரேஸ்குமார், த.இந்துஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாண்மைக்குழு

## 2011 - 2012



நிற்பவர்ககள் (இ.வ.) : க.பிரதீபன், ச.சசிக்குமார். கு.ஜெயமோகன், செ.கரிகாலன், ச.கோபிநாத்.

இருப்பவர்கள் (இ.வ.): கலாநிதி திரு த.சிவானந்தவேள், கலாநிதி திரு வ.மகேஸ்வரன், பேராசிரியர் திரு வை.நந்தகுமார், பேராசிரியர் எஸ்.பி.அபயகோன் (துணைவேந்தர்), திரு இரா.மகேஸ்வரன், பேராசிரியர் திரு செ.சிவயோகனாதன், திரு நா.அகிலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து பட்டதாரிகள் சங்கம்

## 2011 - 2012



இருப்பவர்கள் (இ.வ.): திரு. திலீ[illegible] திரு. க.பா[illegible]தாசன், பேராசிரியர் திரு. வை.நந்தகுமார், கலாநிதி திரு. வ.மகேஸ்வரன்,
திரு. இரா.[illegible]கேஸ்வரன், பேராசிரியர் திரு செ.சிவயோகனாதன்,
வைத்திய [illegible]லாநிதி திருமதி கோமதி மகேஸ்வரன், கலாநிதி திரு [illegible]சிவானந்தவேள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**COMMERCIAL HARDWARE**



No 43, Colombo Street,
Kandy.

Tel : 081-5627723,081 2234323
Fax : 081-2223565
Mobile : 0777-3260074



*VIGNESWARAN STORESS*



Dealers in Coconut Oil



No 173, Colombo Street,
Kandy.

Tel: 081-2223014



**KRISHNA STORES**

Crop Care
&
Pest Control
Services



163, Colombo Street,
Kandy.

Tel: 081-2224204
Fax: 081-2224522



**RAJAH & SONS**



*Dealers in*
*Tobacco, Perfumes,*
*Video Cassettes &*
*Photo Films.*

No 109, Colombo Street,
Kandy.

Tel: 081-2222835



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S.K.COMPANY

**Wholesale & Retailers**

**No 93, Colombo Street,
Kandy.**

Tel: 081-2222492

# SRI MURUGAN'S

Wholesale &
Retail Dealers
in Textiles



**94,
Colombo
Street, Kandy.**

Tel: 081-2223399

# RANJITHA TRADERS

**IMPORTERS, GENERAL
MERCHANTS &
COMMISSION AGENTS**

**180, Colombo Street,
Kandy.**

Tel: 081-2232350,2229155
Fax: 081-2229156

# LATHA JEWELLERS

Express Your
**LOVE**
with
**GOLD**



**No: 27, Kotugodella Veediya,
Kandy.**

Tel: 081-2232027

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Sri Muthumari Stores



150, Colombo Street,
Kandy

Tel: 081-2234205

## ஹோட்டல் சௌமியா



இல 09
டி.எஸ். சேனாநாயக்க வீதி,
கண்டி

## CENTRAL ESSENCE SUPPLIERS

(Suppliers to Confectioners & Bakers)





No 76B, Kings Street,
Kandy.

Tel : 081-2224187
081-2204480

## GANGA TEXTILES

Wholesale & Retail
Dealers
in Textiles
Specialist in
High Quality Sarees.



No 123, Kotugodella Veediya,
Kandy.

Tel: 081-2222911
081-4477334


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்யாணி ஸ்ரோர்ஸ்



55, யட்டிநுவர வீதி,
கண்டி.

# SRILEKAH JEWELLERS

House of 916 Gold Jewellery

SINCE 1976



57, Yatinuwara Veediya,
Kandy.
Tel: 081-2202925, 2229105

# SRI HARAN HARDWARE

Deakers in Machinery, Water pumps, Tools, Paints, PVC pipes, Power Tools and Agents for Asian paints & Anton products.



182, Colombo Street,
Kandy.
T.P: 081-2232371
081-2223750
Fax: 081-2232371

# *Mangalaa* JEWELLERY



WESTERN UNION
MONEY TRANSFER



*E-mail: mangalaa_kandy@pre.sltnet.lk*

68, Yatinuwara Street,
Kandy.
Tel: 081-2234064
Fax: 081-2222431


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LANKA CENTRAL BOOK DEPOT



DEALERS IN BOOKS, MAGAZINE AND STATIONERY

**No 84, Colombo Street, Kandy.**

Tel: 081-2222562

SHARAN STORES



**213/5 A, Colombo Street, Kandy.**

Tel: 071-4998888

ஸ்ரீ கணேசானந்த பிராமணாள் சைவ உணவகம்



42, பேராதனை வீதி, கண்டி.

Tel: 0094 81 2233231
0094 81 2220489

RAVI JEWELLERS

FOR 22 CARAT SOVEREIGN AND PAWN BROKERS



**No.95, Colombo Street, Kandy.**

Tel: 0602 991010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ANOKI JEWELLERS



*Your Partner in Gold*

**No 72, Yatinuwara Veediya, Kandy.**

Tel: 081-2232932

## SUN TRADERS





**154, Colombo Street, Kandy.**

Tel: 081-2225212

## இந்திரன் ஜுவல்லர்ஸ்





இல 10, நவீன சந்தை,
சாவகச்சேரி

## சுமங்கலி

புடவையகம்



இல 16, A9 வீதி,
சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# MURUGAN STORES





# 36, Colombo Road,
Peradeniya.




Tel: 081 - 2387057
0777-2533795


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்வரன் புத்தகாலயம்

# &

# இன்டர்நெட் கெபே

உங்கள் நெடுநாளைய புத்தகத்
தேவைகளை நிறைவு செய்ய
நாங்கள் கண்டி மாநகரில்





126/1, கொழும்பு வீதி,
கண்டி.

தொலைபேசி 081 - 2220820
0777 - 663709

E.mail: eswarancybervila@yahoo.com
eswarancybervila@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CHANDRA STORES

*Importers, Exporters & Wholesale Dealers*

**# 207, Colombo Street,**
**Kandy.**

Tel: 081-2234332, 2232756, 2229175, Fax: 081-2229174

E.mail: chandraimports@yahoo.com

***Branch:***

*No. 60, New Moor Street, Colombo -12*
*Tel: 011-2448420, 2343959, 2343960*
*Fax: 011-2436108*



# Nagalingams Jewellers

பாரம்பரிய நகைத்தொழிலில் 108 வருட கால அனுபவமுள்ளவர்கள்

***Exclusivity for over a century***

***No. 101, Colombo Street,***
***Kandy.***

***Tel: 081 - 2232545***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KAJAMUGAN HARDWARE

# கஜமுகன் ஹாட்வெயர்

கட்டடப்பொருட்கள், கம்பி வகைகள், சீமேந்து, PVCபைப் வகைகள்,
பெயின்ற் வகைக், Mecson Mesh நெற் வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்




**147, 149 ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**Tel: 021 - 2222833**
**Fax: 021 - 2222368**




## *Niruthiga Jewellers*





*177, Kasthurirar Road,*
*Jaffna*

*Tel: 21-2222694*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறந்திலோம்.....

இவ்விதழ் இடையூறின்றி வெளிவருவதற்குப் பல்வேறு வழிகளிலும் துணை நின்ற உதவும் உள்ளங்களுக்கும் நன்றிகூற நாம் கடமைப்பட்டுள்ளோம்

- இம்மலர் சிறப்பாக அமைய ஆசியுரைகள் வழங்கிய அனைத்துப் பெரியார்கள்.
- பெறுமதிமிக்க ஆக்கங்களை தந்துதவிய உதவி விரிவுரையாளர்கள், மாணவச் சகோதரர்கள்.
- விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தகப் பெருமக்கள்.
- நூல்தொடர்பாக இயன்றவரை எழுத்துப்பிழைகள் தீர்த்துதவிய உதவி விரிவுரையாளர் தி.திலீபன்.
- வாழ்த்தியல் சேகரிக்க உதவி ம.ஜெயசுதன்.
- அட்டைப்படம் வரைந்த ப.விஸ்வலிங்கம்.
- கணணி வடிமைப்பில் உதவிய துணை நின்ற திரு. மனோஜ், செனித் அச்சகம்
- இந்நூலை சிறப்புற அச்சிட்டு வெளியிட உதவிய ருச்சிர பதிப்பகத்தாருக்கும்.
- ஏனைய நன்றி கூற மறந்த நன்றி கடன்பட்டோர்

அனைவருக்கும் பணிவன்புடன் பலகோடி நன்றிகளைச் சிரம் தாழ்த்தி தெரிவித்துக்கொள்கின்றோம்.

**"மேன்மைக் கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**



இதழாசிரியர்கள்
க.கேசிகன் (பொறியியற் பீடம்)
கி.கிருஷ்ணானந்தா (பொறியியற் பீடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்?
அதை நீ வீணாக்குவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்".

-பகவான் ஸ்ரீ கிருஸ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org